ஆண்டு 2] [இதழ் 10

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

அமர வசனம்

ஸ்ரீ

உலகத்து மகாபுருஷர்கள் எல்லாம், யாரும் அறியாமல் வாழ்ந்து யாரும் அறியாமல் மறைந்து போகிறார்கள்; மௌனமாக வாழ்ந்து மௌனமாக மறைந்துவிடுகிறார்கள்.

அவர்கள் தங்கள் கருத்துக்களை உலகில் விட்டுச் செல்கிறார்கள். அவை தங்களுடையவை என்று அவர்கள் உரிமை கொண்டாடுவதில்லை; தங்கள் பெயரால் எந்த மதத்தையும் எந்தச் சம்பிரதாயத்தையும் அமைப்பதில்லை. அப்படிச் செய்வதை அவர்கள் அடியோடு வெறுக்கிறார்கள்.

அவர்கள் தூய சாத்துவிகர்கள். அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதில்லை; அன்பில் கரைந்து போகிறார்கள்.

உன்னத புருஷர்களெல்லாம் அமைதியாக, மௌனமாக, பிறர் அறியாதபடி வாழ்கிறார்கள். சிந்தனையின் ஆற்றலை உண்மையாக அறிந்தவர்கள் அவர்களே. தாங்கள் குகைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டு ஐந்து உண்மையான கருத்துக்களைச் சிந்தனை மாத்திரம் செய்துவிட்டு அதோடு மறைந்து போனாலும், அந்த ஐந்து கருத்துக்களும் நித்தியமாக வாழும் என்பதை அவர்கள் அறிவார்கள்.

—ஸ்வாமி விவேகானந்தர்

மகாத்மாவின் கொள்கைகளை ஒவ்வொரு வரும் தம் வாழ்க்கையிலே காட்ட வேண்டும். அதற்காகத் தோன்றியது இந்த ஏற்பாடு.

சர்வோதயம் தோன்றிய விதம்

இந்த வார்த்தையை யார் முதலில் உபயோகத்தில் கொண்டுவந்தார்?

1908-இல் மகாத்மா காந்தி தென் ஆப்பிரிகாவில் இருந்தபோது ஒரு நாள் ஜோஹன்ஸ்பர்க்கிலிருந்து டர்பனுக்குப் போக வேண்டியிருந்தது. அது ஒரு ராத்திரிப் பிரயாணம். மகாத்மாவின் அருமை நண்பரான போலக் என்பவர் ஜான் ரஸ்கின் எழுதிய 'Unto This Last' (கடையனுக்கும் கடைத்தேற்றம்) என்ற புஸ்தகத்தை அவரிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார். மகாத்மா அதை எடுத்த பிறகு அவருக்கு அதைக் கீழே வைக்க இஷ்டமில்லை. முழுப் புத்தகத்தையும் ராத்திரியே படித்து விட்டார்.

அதில் உள்ள கருத்து மகாத்மாவை வசீகரித்தது. அதன் சாராம்சத்தை நான்கு அத்தியாயத்திலும், தம் அபிப்பிராயத்தை ஐந்தாவது அத்தியாயத்திலும் குஜராத்தியில் எழுதினார்.

'சர்வோதயம்' என்று இந்தச் சிறு புஸ்தகத்துக்குப் பெயரிட்டார். அன்றுதான் 'சர்வோதயம்' என்ற வார்த்தை ஜனித்தது.

சர்வோதயம் என்றால் என்ன? எல்லாருக்கும் நன்மை. அதில் பெரும்பான்மையோர், சிறுபான்மையோர் என்று இருடத முடியாது. தர்மபுத்திரனுடைய நாயும் சொர்க்கத்தில் இடம் பெற்றது. முதலில் அதைப் போகச் செய்து பின்னால் அவர் போனார். அந்த மனத்தத்துவத்துக்கே 'சர்வோதயம்' என்று பெயர்.

இரண்டாவது முறையாக மற்றொரு சமயம் சர்வோதயம் என்ற பெயரை மகாத்மா உபயோகித்தார். காந்தி சேவா சங்கம் சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் மாதாந்த ஹிந்தி பத்திரிகை ஒன்று ஆரம்பித்தது. அதற்குத் தகுந்த பெயர் வைக்க, காந்திஜியின் ஆலோசனையைக் கேட்டார்கள். அப்போது சர்வோதயம் என்ற பெயரை, காந்திஜி சொன்னார். அந்தப் பெயரில் கொஞ்சநாள் பத்திரிகை நடந்து பின்னால் 1942-இல் நின்றுவிட்டது.

1948 ஜனவரி மாதம் மகாத்மாவின் அக்கிராசனத்தில் நிர்மாண ஊழியர்கள் மகாநாடு நடக்க இருந்தது. மகாத்மாவை நாம் இழந்துவிட்டதால் அப்போது நடக்கவில்லை. பின்னால் மார்ச்சு மாதம் நடந்தது. காந்திஜியின் உடல் அங்கே இல்லை. அவர் ஆத்மா பிரசன்னமாக இராமல் எப்படி இருக்க முடியும்? அவருடைய

மூலம் : கதர் மலர் (தமிழ் : ஆகஸ்ட் '49), திருப்பூர்.

முக்கிய சிஷ்யர் ஆசாரிய விநோபா 'சர்வோதய சமாஜம்' என்ற சங்கத்தை ஸ்தாபித்து இருள் சூழ்ந்த இந்த நிலையில் ஒளி காட்டினார். அதிலிருந்து காந்திஜியின் தொண்டர்கள், பக்தர்கள் எல்லாரும் காந்தீயவாதிகளாகவோ கட்சியினராகவோ இல்லாமல் சர்வோதய லட்சியத்தைப் பின்பற்றுபவர்களாக ஆனார்கள்.

சர்வோதயம் ஒரு கட்சியும் அல்ல; ஒரு கூட்டமும் அல்ல. ஸ்தாபனமும் அல்ல. அதற்கு அக்கிராசனர், அங்கத்தினர்கள் எவருமில்லை; சட்டமும் இல்லை; எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லை. ஆனால் அதில் வாழ்க்கைக்கு வேண்டியவை எல்லாம் உண்டு. உலகத்தின் ஐக்கிய தத்துவம், சமத்துவம், அன்பு, நீதி எல்லாத் தர்மங்களும் அடங்கியிருக்கின்றன.

சர்வோதய சமாஜம் என்ன செய்கிறது? மகாத்மா மறைந்த தினத்தன்று - ஜனவரி 30-இல் - தேசத்திலே அவர் நினைவாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூட்டங்கூடி மரியாதை செலுத்துகிறது. அவருடைய சர்வோதய உபதேசங்களை மனத்தில் உறுதியாக்கிக் கொள்ள ஒரு புனிதமான சந்தர்ப்பம் இது. இந்தச் சமயத்தில் ஏராளமான ஜனங்கள் கூடுவார்கள். ஒவ்வொரு வருஷமும் இது ஒவ்வோர் இடத்தில் கூடும். கூடியவர்கள் தங்கள் அநுபவங்களைச் சொல்லி அடுத்த வருஷம் என்ன செய்வதென்று தீர்மானிப்பார்கள். இது மற்ற மகாநாடுகளில் நிறைவேறும் தீர்மானம்போல் அல்ல; அவரவர்கள் சர்வோதயத்தைத் தம் சொந்த வாழ்க்கையில் காணவே இந்த முடிவுக்கு வருவார்கள். வருஷந்தோறும் இடமும் சமயமும் நிச்சயம் செய்வதற்கும், வந்தவர்கள் 3, 4 தினங்கள் தங்க ஏதாவது ஏற்பாடு செய்வதற்கும் ஸ்ரீ ரகுநாத் என்பவர் இருக்கிறார். இவர் காந்தி சேவா சங்கத்தின் காரியதரிசி.

பிறகு அந்த அந்த மாகாணத்தில் வழங்கும் பாஷைகளில் செய்தியைத் தெரிவிப்பதற்கென்று சிலர் இருக்கிறார்கள்; தமிழ் நாட்டுக்குச் சர்தார் வேதரத்தினம்.

சம்மேளனத்துக்கு வருகிறவர்களின் சௌகரியத்துக்காக, பெயரை முன்னாலேயே தெரிவித்துக்கொள்வது அவசியம். இதற்காக ஒரு பாரத்தில் குறித்து அனுப்பினால் அவர்களின் பெயர்களைப் பதிவு செய்துகொண்டு தங்க ஏற்பாடு செய்யலாம். இதைப் பலர் அங்கத்தினர் பதவி என்று தவறாக எண்ணிக்கொள்ளலாம். ஆனால் பதவியோ அதிகாரமோ பெயரோ சர்வோதய சமாஜத்தில் செல்லாது.

1948-இல் சேவா கிராமத்தில் முதல் கூட்டம் நடந்தது. 1949-இல் மார்ச்சு மாதத்தில் ராவு என்ற இடத்தில் மறுபடியும் கூடியது. 1950-இல் உத்கல மாகாணத்தில் கூடப்போகிறது.

கடனும் தானமும்

கடன் கொடுப்பதைவிடத் தானம் கொடுப்பது மேல். இரண்டினால் விளையும் நஷ்டமும் ஒன்றே.

—ஸர் பிலிப் ஸிப்ஸ்

மனமாறுதல் தேவை

பிலிப் ஸ்பிராட்

'நாட்டுக்கு நெருக்கடி! நெருக்கடி!' என்று எல்லாரும் கூச்சல் போடுகிறார்கள். ஆனால், அது தீர என்ன வழி? கம்யூனிஸமா? ஸோஷலிஸமா? "அவைகளால் நாட்டின் பண்பாடே அழிந்துவிடுமே!" என்று அஞ்சுவோர் உண்டு. உண்மை. அப்படியானால் வேறு என்ன வழி? சிந்தனையைக் கிளறும் இந்தக் கட்டுரை அதை ஆராய்கிறது. இதை எழுதியவர் பழைய பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க என்ன வழி என்று யோசிக்க வேண்டும். அதைப்பற்றி இனி அசட்டையாக இருக்க முடியாது. நாம் எதிர்பார்த்த காரியங்கள் ஒன்றும் புது ஆட்சியில் நடைபெறவில்லை. என்றாலும் இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க இயலாதிருப்பதுதான் மற்ற எல்லாவற்றையும்விடக் கவலை தரும் விஷயம். ஒரே சமயத்தில் இந்தியாவில் இரண்டு விதமான நெருக்கடிகள் நேர்ந்திருக்கின்றன. ஒன்று அரசியல், மற்றொன்று பொருளாதாரம். சுதந்தரம் வந்த பிறகு புதிய ஆட்சியை ஸ்தாபிக்கும் பொறுப்பில் ஈடுபடுவது நியாயந்தான்; என்றாலும் அதற்காக நாட்டின் பொருளாதார நிலைமையில் ஏற்பட்டிருக்கும் சீர்கேடு குறைந்துவிடுமா, அல்லது அதனால் விளையும் தீமைதான் இல்லை என்று ஆகிவிடுமா?

நாட்டில் அதிகரித்துக்கொண்டே வரும் ஜனத்தொகையைக் குறைக்க ஏதாவது வழி சொன்னால் நமக்குக் கிடைக்கும் பதில் என்ன? "நம் தொழில் அறிவை நாம் உபயோகித்தால் இதைவிட இன்னும் அதிக ஜனத்தொகையைக் கூட நன்றாய்ச் சமாளிக்கலாம். நாட்டிலுள்ள வறுமை நீங்கும்போது தானாகவே ஜனத்தொகையும் குறைந்துவிடும்" என்று சமாதானம் சொல்லுகிறார்கள். ஆனால் அந்தக் காலம் எப்போது வரும்? நம் தொழில் திறமை அதிகரித்திருந்தாலும் நாளுக்குநாள் விருத்தியடைந்து வரும் ஜனத்தொகைக்கு ஏற்றபடி நாட்டின் உற்பத்தி பெருகவில்லையே! விவசாயத் தொழிலோ சென்ற இருபது வருஷமாய்த் தேய்ந்துகொண்டே வருகிறது. "இப்போதுள்ள தொழில்திறமையை வைத்துக்கொண்டே மக்களின் நிலைமை முன்னேற முடியும். மற்றத் தேசங்களைப் போல் ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரம் வேலை செய்தாலும் போதும்" என்று சொல்லுவதெல்லாம் சரி. ஆனால் அது பேச்சளவில் முடியுமே தவிரக் காரியத்தில் நிறைவேற எத்தனையோ விதமான முட்டுக்கட்டைகள் இருக்கின்றன. இன்னும் அநேகம் தலைமுறைக

காப்பிரைட் திரிவேணி (ஆங்கிலம் : ஜூலை '49) சென்னை.

ளுக்கு அந்த முட்டுக்கட்டைகளைத் தாண்டுவது என்பது சாத்தியம் அல்ல.

சோஷலிஸமோ, கம்யூனிஸமோ வந்தால் இதற்கு ஒரு வழி பிறக்கும் என்பதும் சரியாகத் தோன்றவில்லை. சோஷலிஸத்தினால் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடும் என்று அந்தக் கட்சிக் காரர்கள் நினைக்கிறார்கள். ஆனால் செயலில் அது அவ்வளவு சுலபமா? முதலாளித்துவத்தைவிட, சோஷலிஸம் சிறந்தது என்று தீர்மானிப்பதற்கு இதுவரையிலும் ஒரு ருசுவும் கிடைக்கவில்லை. ஆனாலும் சோஷலிஸ்டுக் கட்சிக்காரர்கள் பெருமை அடித்துக்கொள்ளாமல் இருப்பதில்லை.

நம் நாட்டில் நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் வாழ்க்கைக்குத் தேவையான இன்னும் பல பொருள்களையும் நாமே உற்பத்தி செய்து கொள்ள முடியும் என்றே வைத்துக் கொள்வோம். அதை நடைமுறையில் எப்படிச் சாதிப்பது? நம் தொழில்திறமை அவ்வளவு விரைவில் முன்னேறிவிடும் என்று நம்புவதற்கில்லை. இதன் நடுவில் பொருளாதார நிலைமை மேலும் மோசமாகிக்கொண்டே வருகிறது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் உணவுப் பொருள்கள், அவைகளுக்காகச் செலவழியும் பணம், உணவுப்பொருள்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் தோல்வி, நாட்டுத் தொழில்களின் உற்பத்திக் குறைவு இவைகளைப் பற்றி வேண்டுமானால் அசிரத்தையாக இருந்துவிடலாம். நாட்டில் உற்பத்திக்கான மூலதனம் அதிகரிப்பதற்குப் பதிலாகக் குறைந்து கொண்டே வருகிறதே; அதற்கென்ன செய்வது?

நாட்டில் ஜனத்தொகை விரைவாக ஏறிக்கொண்டு வருகிறது. பஞ்சம் ஏற்பட்டு அதன் விளைவாக ஏதாவது குறையவேண்டுமே தவிர, மற்றப்படி அது குறையும் என்று சொல்வதற்கில்லை. வெளி நாட்டுக்கு அதிகமான ஜனங்களைக் குடியேற்றுவதும் பல காரணங்களை முன்னிட்டு நடக்கக் கூடியதல்ல. விளைநிலங்களை இன்னும் அதிகமாய்ப் பயிரிட வேண்டும். அப்படியே செய்தும் வருகிறார்கள். இருந்தாலும் வருஷத்துக்கு 50 லட்சம் விகிதம் பெருகும் ஜனத்தொகைக்குப் போதுமான அளவு பயிராகவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பயிரிடும் நிலத்தை அதிகமாக்க வேண்டுமென்றால் அதற்கு வேண்டிய மூலதனத்தையும் விருத்தி செய்ய வேண்டியது அவசியம்.

பம்பாய் சர்க்கார், தொழிற்சாலைகளுக்குப் பதினைந்து வருஷத்தில் 5000 கோடி ரூபாய் அளிப்பதென்று ஒருதிட்டம் போட்டார்கள். இதனால் உற்பத்தி மூன்று மடங்கு பெருகிற்று. இந்தத் திட்டத்தின்படி நாட்டின் வரும்படி இரண்டு மடங்கு உயரும் என்று எண்ணினார்கள். ஆனால் இப்போது உள்ள பொருளாதார நிலைமையில் வாழ்க்கைத்தரம் இறங்கிக்கொண்டு தான் வருகிறது. நாம் உற்பத்தி செய்வதற்கு மேல் நமக்கு அதிகப்படி தேவையாக இருக்கிறது. நாட்டின் பணமோ வெளிநாட்டிலிருந்து உணவுப்பொருள்களை வாங்குவதில் செலவாகி வருகிறது. பொருளாதார அறிவு ஏற்பட்டுப் பணத்தை இப்படிச் செலவழிக்காமல் காப்பாற்றும் வகை தெரிந்தாலொழிய மக்களின் வாழ்க்கைத்தரம் இறங்கித் தான் ஆகவேண்டும்.

இப்படி வறுமை அதிகரித்துக் கொண்டே வந்தால் கடைசியில் மக்களிடையே அதிருப்தியும் கலகமும் ஏற்படும்; அதன் விளைவாக ஏதாவது ஒரு கட்சி வலுத்து நிச்சயமாக யதேச்சாதிகாரந்தான் தலை விரித்தாடும். பொதுவாக ஆசிய நாடுகளில் இப்போதுள்ள நிலைமையில் கம்யூனிஸ்டு கட்சிதான் வெற்றிபெறும் என்பதில் தடை இல்லை. ஆனாலும் இதிலிருந்து பொருளாதார நெருக்கடியைக் கம்யூனிஸ்டுகள் தீர்த்துவிடுவார்கள் என்று சொல்ல முடியாது. நாகரிகத்தையே அழிப்பதைத் தவிர உலகத்தின் கஷ்டத்தைத் தீர்க்க அவர்கள் ஏதாவது உபாயம் செய்வார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனாலும் யதேச்சாதிகாரம் செலுத்துவதில் அவர்கள் நிபுணர்கள். படு தோல்வி அடைந்தாலும் அதிகாரத்தைமட்டும் இழக்கமாட்டார்கள்.

ஆகவே, வாழ்க்கைத்தரம் இப்படி மடமட வென்று இறங்குவதை இப்போது தடுப்பதுதான் நாம் செய்ய வேண்டிய முக்கியமான வேலை. நாட்டில் இப்போது உள்ள அதிகச் செலவாலும் கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு, காங்கிரஸ் கட்சிக்காரர், 'நல்ல காலம் வரும்' என்று எந்த ஆதாரமும் இல்லாமலே மக்களிடையே செய்யும் வீண் பிரசாரத்தாலும் நிலைமை இன்னும் மோசமாகிக்கொண்டு வருகிறது. இதற்கு என்ன பரிகாரம்? பிரஜா உற்பத்தியைக் குறைக்கவேண்டும். விளைநிலங்களை விருத்தியாக்கவேண்டும். விவசாயிகளுக்கு வேண்டிய உதவியைச் செய்து அவர்களை இன்னும் அதிகமாக உழைக்கத் தூண்டவேண்டும். அதோடு முதல் சேர்த்தோ அல்லது கடன் வாங்கியோ தொழில் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். இதற்கிடையில் கல்வி, நிர்வாகம் முதலிய துறைகளில் ஏற்படும் பிரச்னைகளையும் தீர்க்கவேண்டும். உரிய காலத்தில் செய்தால் நாட்டில் பெருங்கலகம் நேராமல் பார்த்துக் கொள்ள முடியும்.

தொழில் உற்பத்திக்காக வருஷத்துக்கு 1000 கோடி ரூபாய் விகிதம் முதல் போட்டு நடத்தினலொழியத் தேசம் உருப்படுவது கஷ்டம். ஆனால் அவ்வளவு பணத்துக்கு எங்கே போவது என்றுதான் கேள்வி. வெளிநாட்டிலிருந்து முழுப் பணமும் கிடைப்பது அரிது. கிடைத்தமட்டில் வாங்கி உபயோகிக்க வேண்டியதுதான். ஆனால் ஒன்று: அமெரிக்கர்களுக்கு எவ்வளவு தீர்க்க திருஷ்டியும் உதார மனமும் இருந்தாலும் அவர்களையே நாம் நம்பிக்கொண்டிருப்பதும் சரியல்ல; நம் நாட்டிலேயே நாம் பணம் திரட்ட வேண்டும். இதனால் மக்களில் பெரும்பான்மையோரின் வாழ்க்கைத்தரத்தைப் பின்னும் தாழ்த்தவேண்டி வரும். இப்போது இருப்பதைவிட மிகவும் குறைந்த வருமானத்தில் அவர்கள் வாழ்க்கை நடத்தவேண்டும்.

நாட்டின் நலத்துக்காக இது அவசியம் என்றாலும், பணக்காரர்கள்தான் இந்தக் கஷ்டத்தை அநுபவிக்க வேண்டும். பெருவாரியான ஏழை மக்களின் நிலைமையை இன்னும் தாழ்த்துவது ஈவிரக்கமற்ற செயலாக முடியும். அதோடு அவர்கள் கம்யூனிஸ்டுகளாவதற்கு நாமே தூண்டுவதுபோல் ஆகிவிடும். ஆகவே, நடுத்தர வகுப்பினரும் உயர்தர வகுப்பினருந்தான் இப்படிக் குறைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் இவர்கள் ஏற்கனவே மிதமிஞ்சிய வரிகளைத் தலைமேல் சுமந்து குறை கூறிக்கொண்டிருக்

கிறார்கள். இருந்தாலும் தங்கள் உண்மை நிலைமை என்ன என்பது இவர்களுக்குப் புரியவில்லை. இங்கே உள்ள உத்தியோகஸ்தர்களும் வியாபார முதலாளிகளும், மற்ற நாடுகளில் அந்த வர்க்கத்தார் வாழ்ந்திருப்பதுபோல் தாமும் இருப்பதாக எண்ணிக்கொண் டிருக்கிறார்கள்.

டில்லியில் அதிகார வர்க்கத்தினரின் ஆடம்பரமான வாழ்க்கையையும், அயல் நாட்டு ஸ்தானிகர்களை வரவேற்று உபசரிக்கும் செலவையும்பற்றிச் சிலர் எடுத்துக் காட்டுகிறார்கள். அவர்கள் சொல்வது நியாயந்தான். நாடு முழுவதும் மேல்வகுப்பினர் ஆடம்பரத்தையே விரும்புகிறார்கள். அவர்கள் அயல் நாடுகளுக்கு ஏரோப்பிளேனில் போவது, நவநாகரிகமாக உடுத்துவது, பெரிய மாளிகைகளும் கார்களும் வைத்துக்கொள்வது இப்படி மேலும் மேலும் படாடோபமாகச் செலவழிக்கிறார்கள். சினிமா வியாபாரத்தில் பணம் போட்டாலும் போடுவார்களேயொழிய உபயோகமுள்ள வியாபாரத்தில் ஒருவரும் பணம் போடுவதில்லை.

ஏதோ சிலர் மட்டும் மகாத்மா காந்தியின் கொள்கைகளை வெறும் யந்திரம்போல் பின்பற்றி வருகிறார்கள். மாகாண சர்க்கார்கள் மக்களிடையே பூர்ண மதுவிலக்குத் திட்டத்தை நிலைநிறுத்த முயன்று வருகிறார்கள். அயல் நாட்டிலிருந்து உல்லாச வாழ்க்கைக்குத் தேவையான பொருள் வாங்குவதைக் குறைத்திருக்கிறார்கள். அது மெச்சவேண்டிய விஷயந்தான். என்றாலும் அவர்கள் எண்ணம் பலிக்கும் என்று சொல்லுவதற்கில்லை. தற்காலம் நம் நாட்டில் அதிகாரத்திலும் பதவியிலும் இருக்கும் வகுப்பார் மற்றச் சுதந்தர நாடுகளில் உள்ளவர்களைப்போல் உயர்தர வாழ்க்கை நடத்த இயலாது. ஆனால் இதை அவர்கள் அறிந்துகொண்டதாகவே தெரியவில்லை.

உலகத்தில் பொதுவுடைமை யுகம் தோன்றிவிட்டது. ஆனாலும் உயர்வு தாழ்வு இல்லாமல் எல்லாரும் சமம் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும் என்றும் சொல்வதற்கில்லை. மேல்பதவியில் இருப்பவர்கள் தங்கள் காலம் ஆகிவிட்டது என்பதை இனியாவது உணர வேண்டும். அதிக ஆடம்பர வாழ்க்கை நடத்தினால் அதன் விளைவாகக் கம்யூனிஸம் விரைவில் நாட்டில் பரவ நேரும். அதனால் நாட்டின் பண்பாட்டுக்கே நாசம் உண்டாகும். ஆகவே, பதவியில் இருப்பவர்கள் நிதான புத்தியோடு இருந்து, தேச நலத்தில் அக்கறை கொள்ளவேண்டும். அப்போது தான் அவர்கள் அதிகாரமும் நீடிக்கும்; நாட்டின் பொருளாதார நிலைமையும் சீர்படும்.

பொதுவாக மகாத்மா காந்தியின் புனிதமான பெயரை 'எதற்கு உபயோகிக்க வேண்டும்? எதற்குக் கூடாது?' என்று தெரியவில்லை.

'பணக்காரர்கள் தங்கள் சொந்தச் செலவைக் குறைத்துக்கொண்டு பணத்தை அதிகமாகப் பொதுக் காரியங்களில் செலவழிக்க வேண்டும்' என்றுதான் காந்தி விரும்பினார். அதற்கு மாறாக, 'பொதுப் பணத்தை மனிதர்கள் சொந்தத்துக்கு எடுத்துக் கொள்வார்கள்' என்று அவர் பயந்தது உண்மையாயிற்று. நாட்டிலுள்ள உயர்தர நடுத்தர வகுப்பினர் மேல்நாட்டாரைப் பார்த்துப் போட்டி போட்டுக் கொண்டு செலவழிப்பது நிற்க வேண்டும். பிரிட்டனில் விக்டோரியாவின் காலம் வரையில்

பணக்காரர்களும் பாடுபட்டு உழைத்துச் சிக்கனமான முறையில்தான் வாழ்ந்து வந்தார்கள். ஒரு தலைமுறைக்கு முன்வரையில் இந்த நாட்டிலும் சீமான்கள் சீமான்களாக வாழ்க்கை நடத்தாமல் தங்களிடமுள்ள அதிகப் பணத்தைத் தான தர்மங்களில் செலவழித்தார்கள்.

மகாத்மா காந்தியின் உபதேசத்தை நினைவில் கொள்வதோடு அதிகப் பணத்தைத் தற்காலத்துக்கு ஏற்றபடி பொருள் உற்பத்தி செய்வதில் செலவழிக்க வேண்டும்; அல்லது அந்தக் காரியத்தைச் செய்யச் சர்க்காருக்குக் கடனாகவாவது உதவ வேண்டும். இந்தக் காலத்து விஞ்ஞான வளர்ச்சியோடு எளிய வாழ்க்கையும் உயர்ந்த சிந்தனையும் கூடிய முறையில் மக்கள் வாழ்க்கை நடத்தவேண்டியது அவசியம்.

பதவியில் உள்ளவர்கள் இதைக் கவனிக்க வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் என்ன விளையும் என்று சொல்லவேண்டியதில்லை. கலகமும் குழப்பமும் மோசமான பொருளாதார நிலையும் கம்யூனிஸத்தின் யதேச்சாதிகாரமுந்தான் ஏற்படும். மேல்தர வகுப்பினரும் நடுத்தரவகுப்பினரும் தம் பணத்தின் ஒரு பகுதியைத் தாமே பொதுநன்மைக்காக அளித்து உதவ வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் பணம் முழுவதுமே பறி போவதோடு பலபேர் தலைக்கே ஆபத்தாகவும் முடியும்.

ராஜாஜியின் துணிச்சல்

ராஜாஜியின் தைரியத்துக்கு ஓர் உதாரணம்: சேலத்தில் அப்போது அவர் வக்கீல் தொழில் நடத்திக்கொண் டிருந்தார்.

ஒரு நாள் கோர்ட்டை விட்டு வெளியே வந்ததும், தம் கோச்சு வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டார். கோச்சு ஓட்டுபவன் அந்தச் சமயம் எங்கேயோ சற்று அப்பால் போயிருந்தான். ராஜாஜி வண்டியில் ஏறியவுடன் குதிரை திடீரென்று ஓட்டமெடுத்தது. பாதையில் இருந்தவர்களெல்லாம் பயந்தார்கள்.

''வண்டியை விட்டுக் குதித்துவிடுங்கள்'' என்று அவரைப் பார்த்துக் கத்தினார்கள்.

ராஜாஜி கேட்கவில்லை. ''அது எங்கேதான் போகிறது பார்க்கிறேன்'' என்று சொல்லிப் பேசாமல் உட்கார்ந்திருந்தார். சுமார் ஆறு பர்லாங்கு தூரம் குதிரை ஓடியது. பிறகு ஆற்றின் பக்கத்தில் இருந்த ஒரு கல்மீது மோதி நின்றது. ராஜாஜி வண்டியை விட்டு இறங்கி, மிகவும் அருமையாகக் குதிரையைத் தட்டிக் கொடுத்தார்.

திருப்தி

ஆறு குழந்தை பெற்றவர்களின் திருப்தி, அறுபது லட்சம் டாலரைப் பெற்ற முதலாளிக்கு வருவதே இல்லை. அவன் 'இன்னும் வேண்டும். இன்னும் வேண்டும்' என்று ஆசைப் பட்டுக்கொண்டே யிருக்கிறான்.

—'தி ட்ரான்ஸ்மிட்டர்'



நவராத்திரி

வாவிலால ஸோமயாஜுலு

சக்தி, செல்வம், கல்வி இவற்றின் அதிதேவதைகளான துர்க்கை, லட்சுமி, ஸரஸ்வதி மூவரையும் வணங்கும் விசேஷ நாட்கள் நவ ராத்திரி. இமயம் முதல் குமரி வரையில் இந்தியாவெங்கும் பிரபலமான விழா இது.

இந்து சமூகத்தில் எல்லா ஜாதியாரும் சேர்ந்து உற்சாகத்தோடு கொண்டாடக் கூடியவை சில பண்டிகைகளே. அவற்றில் நவராத்திரியும் ஒன்று. பொங்கல் பண்டிகைக்கு அடுத்தபடி இதைத்தான் விசேஷமாகக் கொண்டாடுவார்கள். புரட்டாசி மாதம் அமாவாசைக்கு அடுத்த பிரதமையன்று நவராத்திரி ஆரம்பமாகிறது. இது சரத் ருதுவில் வருவதால் இதற்குச் சரத் நவராத்திரி என்று பெயர். லட்சுமி, ஸரஸ்வதி, பார்வதி, ராஜராஜேசுவரி இந்தத் தேவிகளின் உருவங்களுக்குப் பூஜை செய்வதால் இதைத் தேவீ நவராத்திரி என்றும் சொல்லுகிறார்கள். இது இப்போது 'தசரா' என்று பிரபலமாகிவிட்டது.

ராவணன் வசந்த காலத்தில் தேவியைப் பூஜை செய்வானும். ஸ்ரீ ராமர் சரத்காலத்தில் தேவியைப் பூஜித்து ராவணனைக் கொன்றதாக வால்மீகி சொல்லுகிறார்.

இந்த ஒன்பது நாட்களிலும், ஆதி சக்தியின் மூர்த்தியாகிய துர்க்கையின் பூஜை நடக்கிறது. ஐசுவரியத்தைக் கொடுக்கும் லட்சுமியையும், ஞானத்தைக் கொடுக்கும் ஸரஸ்வதியையும் முறைப்படி, அவரவர் சக்திக்கு ஏற்றாற்போல் ஜனங்கள் பூஜிக்கிறார்கள். சாதாரணமாக ஏழாவது நாளோ, எட்டாவது நாளோ, அல்லது தசமியன்றோ, ஸரஸ்வதி பூஜை நடக்கிறது. புஸ்தகங்களைப் பீடத்தில் வைத்து, ஸரஸ்வதியை ஆவாகனம் செய்து ஷோடச உபசாரங்களுடன் பூஜிப்பது தொன்று தொட்டு வந்த வழக்கம். நவமியன்று பணம், தானியம், வஸ்திரம், ஆயுதங்கள் இவற்றை முக்கியமாகக் கொண்டு லட்சுமியைப் பூஜிப்பார்கள்.

பழைய காலத்தில் அரசர்கள், கல்பசூத்திரத்தில் சொல்லியபடி ஒன்பது தினங்களும் தேவி பூஜை நடத்துவார்களாம். அந்தச் சமயத்தில் தினந்தோறும் அரசர்கள், மந்திரிகளுடனும் சிற்றரசர்களுடனும் கொலுவில் அமர்ந்திருப்பார்கள். வித்வத் கோஷ்டி

காப்பிரைட் : ஆந்திர பத்திரிகா (தெலுங்கு : 6-10-'48), சென்னை.

களை நடத்தியும் சங்கீத நாட்டியங்களை அநுபவித்தும் காலட்சேபம் செய்வார்கள். அப்போது சிறந்த கவிஞர்களையும் சாஸ்திரம் படித்தவர்களையும் கலைஞர்களையும் திறமைக்குத் தகுந்தபடி கௌரவிப்பார்கள். உழவு, கைத்தொழில் இவற்றில் ஈடுபட்ட மக்கள் நவமியன்று தம் தம் தொழிலுக்கு உதவும் ஆயுதங்களை லட்சுமியாகப் பாவித்து அவற்றை அலங்கரித்துப் பூஜிப்பார்கள்.

பத்தாம் நாள் விஜயதசமி அன்று அரசர்கள், சிம்மாசனம், குடை, சாமரம் முதலிய ராஜ சின்னங்களையும், யானை குதிரைகளையும் பக்தியோடு பூஜிப்பார்கள். க்ஷத்திரியர்கள் வீட்டில், சாதாரணமாக இந்த ஒன்பது நாட்களும் பூஜைக்காக ஒரு மேடையை அமைப்பார்களாம். அந்தக் காலத்தில் திறமை பெற்ற கலா நிபுணர்கள் பலர் இருந்தார்கள். இவர்களைக்கொண்டு மேடையை அலங்கரிப்பார்களாம். அந்த மேடை மேலேயே குடை, சாமரம் முதலியவற்றையும் யுத்தக் கருவிகளையும் வைப்பார்கள். மேடையின் நடுவில் அமைத்த அக்கினி குண்டத்தில் சம்பிரதாயப்படி எல்லா ஆயுதத்தின் அதிதேவதைகளையும் மந்திரத்தின் மூலமாக ஆவாகனம் செய்வார்கள். அவர்களுக்குப் பிரீதியாகப் பாயஸ ஹோமமும் செய்வார்கள்.

பழைய காலத்தில் ராஜ குடும்பத்தார் 'லோஹாபிசாரம்' என்ற வேடிக்கையான ஒரு ஹோமம் செய்வார்கள். 'லோஹன்' என்னும் அரக்கன் உலகத்தை நடுங்கித் திகைக்க வைத்து, தேவர்கள்மேல் படையெடுத்தானும். தேவர்கள் லோஹாசுரனைத் துண்டுதுண்டாக வெட்டி விட்டார்களாம். அந்தத் துண்டுகளே, இன்று ஆயுதங்களுக்கு உபயோகப்படும் உலோகங்கள். லோஹ ராட்சசனுடைய உடலின் மிச்சமான அந்தத் துண்டுகளுக்காக 'அபிசார' ஹோமம் செய்வதால், துண்டுகள் மழுங்காமல் இருக்குமென்பது அவர்களுடைய நம்பிக்கை. ஆயுத பூஜை முடிந்ததும் அரச குடும்பத்தார் எல்லாரும் யானை குதிரைகளில் ஏறிக்கொண்டு வன்னி மரத்தடிக்குப் போய் அந்த மரத்தைப் பூஜிப்பார்களாம். இதன் ஞாபகச் சின்னமே இன்று அம்பு போடுவது.

வன்னி மரத்தின்கீழ், முதலில் 'அபராஜிதை'யின் பூஜை நடக்கும். அவள் துர்க்கையின் வேற்றுருவம். எட்டு இதழ் கொண்ட தாமரையின் மேல் துர்க்கையையும், வலப்புறம் ஜயை என்பவளையும் ஆவாகனம் செய்து பூஜிப்பார்கள். பாவத்தையும் சத்துருக்களையும் அழிப்பது வன்னி மரம்; அது துர்க்கையின் உரு என்பார்கள். அதன் அடியில் மண்ணைக் கல்வி நீரும் அட்சதையும் இட்டுப் பூஜிப்பார்கள். திரும்பும்போது அந்த அட்சதையைத் தலையில் எடுத்து வைத்துக்கொள்வார்கள். அஞ்ஞாதவாச ஆரம்பத்தின்போது விராட நகரத்துச் சுடுகாட்டில் வளர்ந்த ஒரு வன்னி மரத்தில் பாண்டவர்கள் ஆயுதங்களைக் கட்டி வைத்திருந்தார்கள். மாடுகளைக் கௌரவர்கள் மடக்கியபோது, அர்ஜுனன் அந்த மரத்திலிருந்து காண்டீபத்தை எடுத்துச் சண்டை செய்து வெற்றியடைந்தான். அன்று விஜயதசமி. அதனால் க்ஷத்திரியர்கள் விஜய தசமியைக்

குதூகலத்துடன் கொண்டாடுவார்கள்.

நவராத்திரி கொண்டாடும் முறை இடத்துக்கு இடம் வேறுபடுகிறது. தேவியின் சொரூபம் பலவிதமாக மாறியதுபோல் சம்பிரதாயமும் பலவிதமாக மாறிவிட்டது.

தேவி பூஜைக்கு எழுவிதமான கல்பம் உண்டு. இதன்படி சாதாரண ஜனங்கள் ஸப்தமி முதலாகவும், பணக்காரர்கள் பிரதமை முதலாகவும் பூஜிக்கிறார்கள்.

புரட்டாசி மாதம் மஹாளய அமாவாசையை அடுத்த பிரதமையன்று அம்பாளின் உருவத்தையும் கலசத்தையும் ஸ்தாபிப்பார்கள். அம்மனின் கூந்தலுக்கு வாசனைத் திரவியம் ஊட்டுவார்கள். இரண்டாம் நாள் கூந்தலை முடித்தல். மூன்றாம் நாள் அம்பிகைக்குக் கண்ணாடி காட்டல்; குங்குமம், செம்பஞ்சுக் குழம்பு முதலிய அலங்காரப் பொருள்களைச் சமர்ப்பித்தல். நான்காம் நாள் மதுபர்க்கம் கொடுத்துக் கண்களை அலங்கரித்தல். ஆறாம் நாள் மாலையில் பில்வ தரு போதனம்-அதாவது தேவதைகளுக்குத் தட்சிணாயனம் இரவாகையால் அம்பிகையைத் தூக்கத்திலிருந்து எழுப்புவது. ஏழாம் நாள் சொந்த வீட்டில் பூஜை. முதல் நாள் ஷோடச உபசார பூஜையாகையால் அதற்கு அடுத்த நாள் அஷ்டமி யன்று உபவாசத்துடன் அஷ்ட சக்தி பூஜை நடக்கும். ஒன்பதாம் நாள் உக்ர சண்டாதி தேவி பூஜையும் பலியும் தானங்களும் குமாரி பூஜையும் நடக்கும். தசமி அன்று பூஜை முடிந்தபின் பகலில் மங்களவாத்தியங்களுடன் கூட்டமாக, தேவியின் பிரதிமையை எடுத்துக்கொண்டு போய் ஆற்றில் விட்டுவிடுவார்கள். இதற்கு மகா பூஜை என்று பெயர். வயது சென்ற சுமங்கலிகள் இதைக் 'கௌரி குளித்தல்' என்கிறார்கள்.

இந்தக் கல்பங்களில் சொன்னபடி பூஜைகள் ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களை ஒட்டி அமைந்திருக்கின்றன. இந்த ஒவ்வொன்றிலும் மும்மூன்று பிரிவுகள் உண்டு. எந்தக் குணத்தை அநுசரித்துப் பூஜை செய்கிறார்களோ அந்தக் குணத்தின் சக்திக்குத் தகுந்த பலன் கிடைக்குமாம். எல்லாவற்றிலும் சிறந்தது ஸாத்விகம். ஸாத்விக நிலையில்தான் தேவியைப்பற்றிச் சிரத்தை பிறக்குமாம். ஸாத்விக பூஜை ரிஷிகளுக்கும், ராஜஸ பூஜை க்ஷத்திரியர்களுக்கும், தாமஸ பூஜை அரக்கர்களுக்கும் உரியவை. திக்கு, தேசம், காலம் இவற்றைத் தெரிந்துகொண்டு மந்திரங்களோடும் திரவியங்களோடும் செய்வது ஸாத்விகம். இது மிகவும் உத்தமமானது. மன அமைதியைப் பெற்றவர்களே இதைச் செய்ய முடியும். ராஜஸ பூஜையில் திரவியங்கள் ஏராளமாக இருக்கும். தாமஸ பூஜையில் கள், மாமிசம், மிருக பலி முதலியவை உண்டு. ராஜஸ பூஜையிலும் மாமிசம் உண்டு. ஸாத்விக பூஜையில் மாமிசம் தவிர்த்த நைவேத்தியம், ஹோமம், பாராயணம் இவை உண்டு.

தேவி பூஜை ரீதியில் வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே அதிக வித்தியாசம். அவர்கள் ஸப்தமி முதலாக ஆரம்பித்துச் செய்கிறார்கள். அவர்கள் பூஜை தாமஸ முறை; அதனால் அவர்களுக்குக் கடைசி மூன்று நாளே பிரதானம்.

வட நாட்டவர், புராணத்தில் வர்ணித்தபடி துர்க்கா ரூபத்தை

மண்ணால் செய்வித்துப் பிரதிஷ்டை செய்து பூஜிப்பார்கள். இந்தப் பிரதிமைக்கு வலப்புறம் ஸரஸ்வதியையும் கணேசரையும், இடப்புறம் லட்சுமியையும் முருகனையும் வைக்கிறார்கள். முதலில் சொன்னபடி தாமஸ முறையில் மகா காளி பூஜை நடக்கிறது. குடி, மிருக பலி இவை எல்லாம் இதில் விசேஷம். இது பயங்கரமானது. தென்னாட்டில் ஒன்பது நாளும் முக்கியம். கலசம் ஸ்தாபித்து அதில் துர்க்கா தேவியை ஆவாகனம் செய்து ஒன்பது நாட்களும் ஸாத்விக முறையில் பூஜை செய்கிறார்கள். லட்சுமியையும் ஸரஸ்வதியையும் கூடவே பூஜிக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் பொம்மைக் கொலு வெகு வைபவத்துடன் நடக்கும். படிகளை அழகாக அலங்கரித்து விதவிதமாகப் பொம்மைகளைக் கொலு வைக்கிறார்கள். சிறு பெண்களும் யுவதிகளும் அலங்கரித்துக்கொண்டு அயல் வீட்டுப் பெண்களை அழைக்கப் போவதால் வீடுகளும் தெருக்களும் கலகலப்பாக இருக்கும். வீட்டுக்கு வருபவர்களை உபசரித்து மஞ்சள், குங்குமம் கொடுப்பதிலேயே ஒன்பது நாட்களும் ஒன்பது நிமிஷங்களாக ஓடிவிடுகின்றன.

இயற்கை பெண் உருவம்; ஆதி சக்தி. இவளாலேயே, ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களும் நடக்கின்றன. இந்தத் தொழில் சக்தி பல பெயர்கள் தரித்து உலாவுகிறாள். பிராம்மி, வைஷ்ணவி, வாராஹி, கௌரி, நாரஸிம்ஹி முதலிய பெயர்களுக்கு மூலம் பராசக்தியே. இயற்கை பெண் வடிவம் என்பதால் சாக்தர்கள் ஸ்திரீகளையே பூஜிப்பது வழக்கம்.

எல்லாத் தேவதைகளின் உருவங்களுக்கும் மூலம் ஆதி சக்தி. அவள் மகிஷாசுரனை வதைப்பதற்காக அவதரித்தவள். அரக்கர்களின் தாயாகிய 'திதி' தன் மக்கள் தோல்வி அடைந்ததால் மனம் புழுங்கிப் பெண் எருமையாகி, பிரமனைக் குறித்துத் தவம் செய்தாள். அவளுக்கு மகிஷாசுரன் என்ற வீரன் பிறந்தான். அவன் மாயையில் வல்லவன். தலைகால் தெரியாமல் உலகத்துக்கும் தேவர்களுக்கும் தீங்கு செய்துவந்தான். தேவர்கள் விஷ்ணுவிடம் போய் முறையிட்டார்கள். அவர்கள் மந்திராலோசனை செய்யும் சமயத்தில் அந்தத் தேவர்கள் எல்லாரிடமிருந்தும் ஒளியோடு ஒவ்வோர் அம்சம் பிறந்து எல்லாம் ஒன்று சேர்ந்தன. ஒப்பற்ற அழகோடு விளங்கிய அந்தத் தெய்வமே மகாதேவி. அவளுக்குப் பதினெட்டுக் கைகள். பிரமன் முதலிய தேவர்கள் தம் தம் ஆயுதங்களை அவளுக்குக் கொடுத்தார்கள். அப்போது மகிஷாசுரன் சொப்பனத்தில் தேவி தன்னைக் கொன்றுவிட்டதாகக் கனவு கண்டான். அவன் அதுமுதல், "என் உடல் உன் பாதங்களிலிருந்து அகலாதிருக்கும்படி அருள்" என்று வேண்டிக்கொண்டான். உக்ரசண்டி, மகாகாளி, துர்க்கை என்னும் மூன்று அவதாரங்கள் எடுத்து மகாதேவி அவனை அழித்தாள்.

ஒரு காலத்தில் தன் தவத்தின் பெருமையால் ருருவின் மகன் துர்க்கன் என்பவன் மூன்று உலகங்களையும் வசப்படுத்தினான். தேவர்கள் சிவனிடம் போய் முறையிட்டார்கள். சிவபெருமான் துர்க்கனை அழிக்கும்படி சாம்பவி சக்தியை வேண்டினார். அவள் காளராத்திரி என்னும் சக்தியை

அனுப்பினாள். காளராத்திரி துர்க்கனைத் தொடர்ந்து அவனுடைய சேனையை ஹூங்காரத்தினாலேயே எரித்தாள். துர்க்கன் காளராத்திரியை விந்திய மலை வரையில் தொடர்ந்து வந்து போராடினான். தேவியைக் கண்டு மோகித்தான். தேவியின் விழியிலிருந்து நெருப்பு எழுந்தது. யானையாக வந்த துர்க்கனும் அவனுடைய சேவகர்களும் அழிந்தார்கள். மறுபடியும் மகிஷாசுரனாக வந்தான் துர்க்கன். அவனைத் திரிசூலத்தால் தேவி கொன்றாள். உடனே ஆயிரம் கைகளுடன் திரும்பினான் துர்க்கன். மறுமுறை திரும்பிவராதபடி அவனைக் கொன்று துர்க்கை என்று பெயர் பெற்றாள் காளராத்திரி.

காளி தந்திரத்தில் மகாகாளி ரூபத்தை இப்படி உருவகப்படுத்தியிருக்கிறார்கள்: "மிகப் பயங்கரமானவள். கோரப் பற்கள் உடையவள். நான்கு கைகள் அவளுக்கு. ஒரு கையில் மண்டையோடு; ஒரு கையில் கத்தி; ஒரு கை வரங் கொடுக்க, மற்றொரு கை அபயம் அளிக்கிறது. நாக்கைத் தொங்கவிட்டிருப்பாள். அவள் மகாகாலனுடைய பெண் உருவம். உலகம் காலத்தில் லயமாகும்போது எல்லாம் உயிரற்றுவிடுகின்றன. உலகத்தை அழித்து ஒப்பற்ற வீரத்துடன் பயங்கரமாக அவள் நிற்பாள். விகாரமான வெற்றிச் சிரிப்புச் சிரிப்பாள். நான்கு கைகளும் காலத்தில் லயமடையும் நாலு திசைகள். கத்தி, அழிக்கும் சாதனம். இத்தனைக்கும் நடுவில் தெரியும் அவளுடைய அபய முத்திரை அவள் தானத்துக்கு அதிகாரி என்பதைக் காட்டுகிறது. காலத்தின் அதிதேவதையான அவள் கரிய நிறம் உடையவள்; அதாவது, உலகத்தில் உள்ள எல்லா நிறமும் அவளுக்குள் கலந்து காளராத்திரி உருவமாகிவிடுகின்றன."

துர்க்கையின் உருவத்துக்கு முன்னோர்கள் இப்படியும் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள்: துர்க்கை பரப்பிரம்மம். திரிசூலம் ஞானம். அவளுடைய வாகனமாகிய சிங்கமும் மகிஷாசுரனும் காம, குரோதங்கள். மூன்று கண்களும் மூன்று காலங்கள். லட்சுமியும் ஸரஸ்வதியும் விநாயகரும் கார்த்திகேயரும் நான்கு விதமான புருஷார்த்தங்கள். "தேவி பூஜை செய்து அருள் பெற்றவன் புருஷார்த்தங்களைச் சாதிப்பதோடு ஞானத்தையும் பெறுகிறான். காம, குரோதங்களை வென்று திரிபுரத்தை எரித்த பரமனையும் அறிந்து கொள்ளுகிறான்" என்பதே துர்க்கா பூஜையில் அடங்கிய பொருள்.

உழைப்பவன்

வெறும் தூரத்துக் கனவு காண்பவனைவிட, ஓயாமல் வேலை செய்பவனுக்குத்தான் மனித சரித்திரத்திலேயே மதிப்பு அதிகம். கனவு காணும் லட்சியவாதி, வேலை செய்யும் கர்மவீரனைப் போல ஜனங்களுக்கு அத்தனை பிரியமாக இருப்பதில்லை. கவிக்கோ, பாடகனுக்கோ வாழ்க்கையில் தனி இடம் உண்டு என்பதில் சந்தேகமில்லை. சொர்க்கத்தைத் தீண்டும் லட்சியவாதமென்னும் சிகரத்திலே கவியின் பெருமை ஒளி வீசுகிறது; ஆனால் காலால் நடந்து சென்று அந்தச் சிகரத்தை எட்டுகிறவனுடைய பெருமை, அதைக்காட்டிலும் பெரிது. —ஹிந்தி ப்ரசார் ஸமாசார்

குதிரையைக் கட்டிய குழந்தை

பவபூதி

★★

காளிதாஸனுக்கு அடுத்த ஸ்தானம் வகிக்கும் ஸம்ஸ்கிருத மகா கவிகளுள் ஒருவர் பவபூதி. அவருடைய உத்தரராம சரிதம் பிரசித்தமானது. அதிலிருந்து எடுத்த ஒரு பகுதி இது.

★★

[வால்மீகி ஆசிரமத்தில் லவன் ஒரு புறம் நிற்கிறான். அவனுடைய தோழர்களான பிரம்மசாரிகள் அவனிடம் வருகிறார்கள்.]

பிரம்மசாரிகள்: லவா, கிராமங்களில் குதிரை, குதிரை என்கிறார்களே, அதை இப்போது நாங்கள் நேரில் பார்த்தோம்.

லவன்: ஆமாம்; புஸ்தகங்களில் விரதத்துக்கு ஏற்ற மிருகங்களைப் பற்றி வரும் இடத்திலும், யுத்த படலத்திலும் குதிரை என்ற பெயரைப் பார்த்திருக்கிறேன். அது எப்படி இருக்கிறது? சொல்லுங்கள்.

பிர: லவா, அதற்குப் பின்னால் பருத்துத் தொங்குகிறது ஒரு வால்; அதை ஆட்டிக்கொண்டே இருக்கிறது; கழுத்து நீளம். நான்கே குளம்புகள். இளம்புல்லை மேய்கிறது. அது எவ்வளவு வேகமாகப் போகிறது, தெரியுமா? வா, வா; போய்ப் பார்ப்போம். (சிறிது தூரம் போய்) லவா, பார் இந்த அதிசயத்தை! (குதிரையைக் காட்டுகிறார்கள்.)

லவ: ஓ! அதோ தெரிகிறது! அது அசுவமேதக் குதிரை; சந்தேகமேயில்லை.

பிர: எப்படித் தெரியும்?

லவ: சுத்த மடையர்கள்! நீங்களும் அந்த அத்தியாயத்தைப் படித்துத்தானே இருக்கிறீர்கள்? அதோ கலசமும் வில்லும் அம்பறாத்தூணியும் ஏந்திக் குதிரைக்குக் காவலாகப் பல பேர் வருகிறார்களே, அவர்களைப் பார்த்தால் தெரியவில்லையா? நான் சொல்வதில் நம்பிக்கை இல்லாவிட்டால் அவர்களைக் கேளுங்கள்.

பிர: (காவலாட்களைப் பார்த்து) ஐயா, ஐயா, எதற்காக இந்தக் குதிரை இங்கே இப்படித் திரிகிறது?

லவ: (ஆவலுடன் தனக்குள்) அசுவமேதம் என்பது உலகத்தை வென்று க்ஷத்திரியர்கள் எல்லாரையும் அடக்கிச் சக்கரவர்த்திகள் செய்யும் யாகம். தங்கள் தோள்வலிமை எந்த மட்டில் இருக்கிறது என்று இதிலிருந்து தெரிந்துகொள்வார்கள்.

(திரைக்குள்)

"இந்தக் குதிரை ஏழு உலகத்திலும் ஒப்பற்ற வீரரும், ராவண வம்சத்துக்குப் பகைவருமான ராமருடைய வெற்றியின் சின்னமாக அவருடைய வீரத்தைப் பறைசாற்றுகிறது."

லவ: (வருத்தத்தோடு) அடாடா! வீரர்களின் மனத்தைப் புண்படுத்துகிற வார்த்தையாக இருக்கிறதே இது!

பிர: லவா, என்ன சொல்லு கிருர்கள்?

லவ: பூமியில் க்ஷத்திரியர்களே இல்லையா? இப்படிப் பறை சாற்று கிருர்களே!

(திரைக்குள்)

"அடே, அடே! மகாராஜா ராம ருக்கு எதிராக எந்த க்ஷத்திரியனடா இருக்கிருன்?"

லவ: துஷ்டர்களே, ராமனுக்கு அடங்கி நடக்கும் க்ஷத்திரியர்கள் இருந்தால் இருக்கட்டும். உங்க ளோடு பேசுவானேன்? உங்கள் குதிரையை இதோ பிடித்து விடு கிறேன். ஏ பிரம்மசாரிகளே, மண் கட்டியால் அடித்து அந்தக் குதிரையை இப்படி வளைத்து வாருங்கள். இந்தக் காட்டு மான் களோடு அதுவும் மேய்ந்துகொண் டிருக்கட்டும்.

[கோபத்துடன் ஓர் ஆள் வருகி ருன்.]

ஆள்: அட பயலே, என்ன சொன்னுய்? கொடிய ஆயுதம் தாங்கிவருகிருர்கள் காவலாளிகள். சிறு குழந்தையாக இருந்தாலும் இந்தத் திமிரான வார்த்தையைப் பொறுக்கமாட்டார்கள். ராமருடைய குலத்தில் பிறந்த சந்திரகேது இதோ வருகிருன். அவன் காட்டின் இயற்கையழகைப் பார்த்துக் கொண்டு மெதுவாக வருகிருன். அதற்கு முன் மரத்தடியில் ஓடி ஒளிந்துகொள்ளுங்கள்.

பிர: வேண்டாம், வேண்டாம், லவா! அதோ வில்லைப் பூட்டிக் கொண்டு காவலாளிகள் வந்து கொண்டிருக்கிருர்கள்.

லவ: என்ன, வில்லைப் பூட்டிக் கொண்டு வருகிருர்களா? (தனது வில்லில் நாண் ஏற்றுகிருன். சேனை வீரர்கள் லவனைக் கண்டு சற்று அஞ்சுகிருர்கள்.)

[சிறிது நேரத்துக்குப் பின் திரைக்குள்]

"சேனைவீரர்களே, பயப்படவேண் டாம். இதோ சுமந்திரன் வேகமாகத் தேரை ஓட்டிக்கொண்டு வருகிருன். அதில் சந்திரகேது வருகிருன்."

[சுமந்திரன் ஓட்டும் தேரில் கையில் வில்லை ஏந்தியபடி ஆச்சரியமும் சந்தோஷமும் ஒருங்கே தோன்றச் சந்திரகேது வருகிருன்.]

சந்: சுமந்திரரே, பாருங்கள் பாருங்கள்! ஒரு சிறிய ரிஷி குமா ரனை நம் சேனைக் கூட்டம் சூழ்ந் திருக்கிறது. அவன் சண்டைக்குத் தயாராக நிற்கிருன். நம் ரகு வம் சத்துக்கே அவமானம்!

சும: குமாரா, தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் மேற்பட்ட பராக் கிரமம் பொருந்தி உன்னைப் போலவே இருக்கிருன் இந்தச் சிறுவன். இவனைப் பார்க்கும்போது விசுவாமித்திரர் யாகத்தில் வில்லைத் தாங்கி நின்ற ராமன் ஞாபகம் வரு கிறது.

சந்: இவன் ஒருவனைப் போய்ப் பல பேர் சேர்ந்து இப்படி எதிர்ப் பதைப் பார்த்தால் எனக்கு வெட்க மாக இருக்கிறது.

சும: இவர்கள் எல்லாருமே சேர்ந்தால்கூட இவனுக்கு நிகர் ஆக மாட்டார்கள். தனியே சண்டை போட்டால் கேட்பானேன்?

சந்: சுமந்திரரே, சீக்கிரம் தேரை ஓட்டுங்கள். நம் ஆட்களை இவன் கொல்ல ஆரம்பித்து விட் டானே! (ஆச்சரியத்தோடும்

வெட்கத்தோடும்) ஐயோ! நம் சேனை நாலு பக்கத்திலும் சிதறி ஓடுகிறதே!

சும: குமாரா, இதோ தேர் அவர்களை நெருங்கிவிட்டது.

சந்: சுமந்திரரே, இவனுக்கு என்ன பெயராம்? சேனைத் தலைவன் என்ன சொன்னான்?

சும: லவன் என்று பெயராம்?

சந்: லவா, லவா, நீ மகாவீரன். இந்தப் பலமற்ற சேனையோடு ஏன் சண்டை போடுகிறாய்? இதோ நான் வருகிறேன். வீரம் வீரத்துக்குத்தான் அடங்கும்.

சும: அதோ பார், அந்த வீரச்சிறுவனை! யானைக் கூட்டத்தைப் பிளந்துகொண்டு வரும் சிங்கக் குட்டி இடிமுழக்கம் கேட்டுத் திரும்புவதுபோல் நம்மை நோக்கி வருகிறான்.

லவ: (சந்திரகேதுவிடம் வந்து) நீ இட்சுவாகு வம்சத்து ராஜகுமாரன்தானே? அதுதான் நான் திரும்பி வந்துவிட்டேன்.

[திரைக்குப் பின் சேனையின் கோலாகலம் கேட்கிறது. லவன் கோபங்கொண்டு எதிர்த்துத் திரும்புகிறான்.]

சந்: சுமந்திரரே, இதோ பாருங்கள்.

சும: (ஆச்சரியத்தோடு) ஆகா! எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லையே!

சந்: (படையில் உள்ள சிற்றரசர்களைப் பார்த்து) அரசர்களே, உங்களுக்கு வயதாகிறது. இப்படிக் குதிரையிலும் யானையிலும் ஏறிக்கொண்டு இந்த அழகான இளம் பிள்ளையோடு ஏன் சண்டை போடுகிறீர்கள்? இவனைப் பாருங்கள்; தரையில் நின்று தனியாக உங்களுக்கெல்லாம் ஈடு கொடுக்கிறானே. உங்களுக்கு வெட்கமாக இல்லையா?

லவ: (கோபத்தோடு) வீணைக் கூச்சலிட்டுக் காலதாமதம் செய்கிறதே, இந்தச் சேனை. இதோ 'ஜிரும்பகாஸ்திர'த்தால் இதைக் கட்டிவிடுகிறேன். (கட்டுகிறான்.) இனிமேல் இவனை ஒரு கை பார்க்கிறேன். (சந்திரகேதுவிடம் திரும்புகிறான்.)

சும: குமாரா, உன் எதிரிவீரன் இதோவந்துவிட்டான். ஜாக்கிரதை!

லவனும் சந்திரகேதுவும்: (ஒருவரையொருவர் பார்த்து) ஆகா! இவன் எவ்வளவு அழகாக இருக்கிறான்!

சும: (லவனைப் பார்த்துத் தனக்குள் கண்ணீர் விடுகிறான். தான் காட்டில் கர்ப்பிணியாக விட்டுப்போன சீதையின் குழந்தையோ என்று சந்தேகப்படுகிறான். பிறகு தனக்குள்) மனமே, ஏன் இப்படி நினைக்கிறாய்? உன் ஆசை எப்போதோ அவலமாகிவிட்டதே! கொடியை அறுத்துவிட்ட பிறகு தளிருக்கு இடம் ஏது?

சந்: சுமந்திரரே, தேரை நிறுத்துங்கள். நான் கீழே இறங்குகிறேன்.

சும: ஏன்?

சந்: இந்த வீர புருஷனைக் கௌரவிக்க வேண்டும். தேரில் ஏறியவர் தரையில் நிற்பவர்களோடு போர் புரிவது சரியல்ல என்று சாஸ்திரம் சொல்லுகிறது. நம் க்ஷத்திரிய தர்மத்துக்குப் பங்கம் நேரக்கூடாது.

சும: (தனக்குள்) ஐயோ! இதென்ன தர்மசங்கடம்? இதை எப்படித் தடுப்பது?

சந்: சுமந்திரரே, அப்பா, பெரியப்பா எல்லாருங்கூட உங்களை யோசனை கேட்பது உண்டே? ஏன் இப்போது ஒன்றும் சொல்லாமல் இருக்கிறீர்கள்?

சும: குமாரா, ரகுவம்சத்தார் அநுஷ்டித்து வரும் முறை இது தான். (சந்திரகேது தேரிலிருந்து இறங்குகிறான்.)

லவ: குமாரா, தேரிலேயே இரு. அதிக மரியாதை காட்ட வேண்டாம்.

சந்: அப்படியானால் நீயும் மற்றொரு தேரில் ஏறிக் கொள்.

லவ: காட்டில் வளர்ந்த எனக்குத் தேரில் ஏறிப் பழக்கமில்லை.

சும: லவா, எல்லாரிடமும் அன்போடு பழகக் கற்றுக்கொண்டிருக்கிறாய். ராமர் உன்னைப் பார்த்தால் விடமாட்டார். அப்படியே அன்பினால் உருகிவிடுவார்.

லவ: அவர் நல்லவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நானும் அப்படித் துஷ்டன் அல்ல. அவர் யாகம் செய்வது எனக்கும் இஷ்டந்தான். இருந்தாலும் யாகக் குதிரையோடு வந்தவர்கள் க்ஷத்திரியர்களையே இழிவாகப் பேசினது தான் எனக்குக் கோபமூட்டி விட்டது.

சந்: (புன்னகையோடு) ஏன், என் பெரியப்பாவின் பராக்கிரமத்தைப் புகழ்ந்தால்கூட உனக்குக் கோபமா?

லவ: க்ஷத்திரியர்களில், வீரம் குறிப்பிட்ட சில பேரிடந்தான் இருக்கலாம் என்ற கட்டுப்பாடு உண்டோ?

சும: எனக்கு இட்சுவாகு வம்சத்து அரசர்களைப்பற்றித் தெரியாது. அதிகமாகப் பேசாதே!

சந்: என் சேனையை அடக்கி உன் பராக்கிரமத்தைக் காட்டிவிட்டாய்; வாஸ்தவந்தான். பரசுராமரை நீ அடக்கியிருக்கலாமே? என் போக வில்லை?

லவ: ஓகோ! ராமர் பரசுராமரை அடக்கிவிட்டார் என்று தானே பிரமாதமாகப் பேசுகிறாய்? பிராம்மணனுக்கு வீரம் வார்த்தையில்தான்; இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். தோள்வலிமை என்பது க்ஷத்திரியனுக்குத்தான். பரசுராமரோ வில்லைப் பிடித்த பிராம்மணர். அவரை அடக்கிவிட்டதால் ராமருக்கு என்ன கீர்த்தியோ தெரியவில்லை!

சந்: (கோபத்தோடு) ஐயா சுமந்திரரே, இது என்ன, புது அவதாரம்? பரசுராமர்கூட இவனுக்கு வீரர் இல்லையாம்! ஏழு உலகங்களுக்கும் அபயம் கொடுத்த என் பெரியப்பாவின் சமாசாரம் இவனுக்குத் தெரியாதுபோல் இருக்கிறது?

லவ: ராமருடைய சரித்திரம், பெருமை எல்லாம் யாருக்குத்தான் தெரியாது? அவர் மிகவும் பெரியவர்தான்! சுந்தன் மனைவியான தாடகையைக் கொன்றதும், கரனோடு செய்த யுத்தத்தில் அவர் மூன்றடி பின் வாங்கியதும், அவர் வாலியைக் கொன்ற விதமும் எல்லாருக்கும் தெரியுமே!

சந்: ஆ! என் பெரியப்பாவையா இகழுகிறாய்? அட கர்வி!

லவ: என்னிடமே உனக்குக் கோபம் வந்துவிட்டதா? வா; யுத்தம் செய்வதற்கேற்ற இடமாகப் பார்த்துப் போவோம்.

[இருவரும் சுமந்திரனோடு புறப்பட்டுப் போகிறார்கள். வெகு நேரம் சண்டை செய்கிறார்கள். சம்பூகனை வதம் செய்து காட்டைச் சுற்றிக் கொண்டு ராமர் அங்கே வருகிறார். அவர் வருவதைப் பார்த்து லவனும் சந்திரகேதுவும் யுத்தத்தை நிறுத்தி விட்டு ராமரை நோக்கி வருகிறார்கள்.]

ராமர்: (புஷ்பகத்திலிருந்து இறங்கி) சந்திரகேது, இப்படி வா!

(அவனை அணைத்துக்கொள்கிறார்.) என்ன சங்கதி?

சந்: அப்பா! சரியான ஒரு நண்பன் எனக்குக் கிடைத்திருக்கிறான்—இவன் தான்.

ராமர்: (லவனைப் பார்த்து) கம்பீரமாகவும் அழகாகவும் இருக்கிறானே!

லவ: (தனக்குள்) நம்பிக்கை, அன்பு, பக்தி இந்த மூன்றும் சேர்ந்து உருவெடுத்தவர் இவர். தர்ம தேவதை மாதிரி விளங்குகிறார். ஏனோ என் மனத்திலிருந்த பகைமை போய் இன்பம் உண்டாகிறது? என் கர்வம் எங்கேயோ போய்விட்டது. ஏனோ இவரைக் கண்டவுடன் வணங்க வேண்டும் என்று தோன்றுகிறது?

ராமர்: (லவனைப் பார்த்தவுடன் தமக்குள்) சூரியனைக் கண்டு தாமரை மலருவது போல், சந்திரன் உதித்ததும் சந்திரகாந்தம் உருகுவது போல் ஏனோ மனம் உருகுகிறது?

லவ: சந்திரகேது, இவர் யார்?

சந்: பிரிய நண்பா, இவர் என் தந்தை.

லவ: என்னை நீ இப்படி அழைப்பதால் எனக்கும் இவர் தந்தை தான். ஆனால் ராமாயண கதாநாயகர்கள் நான்குபேர் ஆயிற்றே; அவர்களில் இவர் யார்?

சந்: பெரிய தகப்பனார்.

லவ: ராமபிரானா இவர்? இன்று நான் கண்விழித்த வேளை நல்ல வேளை. (ராமரை வணங்கி அவ லுடன் பார்த்தபடி) வால்மீகி முனிவரின் சிஷ்யன் லவன் வணங்குகிறேன். என் பிழையைப் பொறுத் தருள வேண்டும்.

ராமர்: குழந்தாய், என்ன பிழை செய்துவிட்டாய்?

சந்: குதிரையாள் தங்கள் வீரத்தைப்பற்றிச் சொன்னதும் இவன் நம் சேனையுடன் போர் தொடுத்தான்.

ராமர்: இதுதான் க்ஷத்திரியர்களுக்கு அழகு. சூரியகாந்தக் கல் சூரியகிரணத்தைப் பொறுக்காமல் நெருப்பைக் கக்கும். அதைப் போல் வீரன் பிறர் வீரத்தை எப்படிப் பொறுப்பான்?

[திரைக்குள் லவனுக்கும் சந்திரகேதுவுக்கும் நடந்த யுத்தத்தைப் பார்த்த வித்தியாதரன் சொல்லுவது:]

"மகாபுருஷரான ராமருடைய புத்திமதியைக் கேட்டு இரண்டு பேரும் கௌரவத்தோடு சண்டையை நிறுத்திவிட்டார்கள். லவனும் அடங்கிவிட்டான். சந்திரகேதுவும் பணிந்துவிட்டான். ராமபிரானும் லவனும் சேர்ந்துவிட்டார்கள். எங்கும் மங்களம் உண்டாகட்டும்."

எஜமான் விடுமுறை

விடுமுறையில் மெக்ஸிகோவுக்குப் போயிருந்த எஜமானருக்கு அவருடைய சிப்பந்திகளிடமிருந்து வந்த கடிதத்துணுக்கு இது:

"உங்கள் விடுமுறையை ஆனந்தமாக அநுபவிப்பீர்கள் என்று நினைக்கிறோம்; நாங்கள் இங்கே குஷியாக இருக்கிறோம்."

—உர்ஸுலா கிரல்ஸ்

க்விஸ்

[நமக்கு மிகவும் தெரிந்த விஷயங்களில்கூடச் சில சமயம் திட்டமான விவரங்கள் ஞாபகம் இருப்பதில்லை. இதோ சில கேள்விகள்: எங்கே, உங்கள் கவனசக்தியைச் சோதித்துப் பாருங்கள். பிறகு, 76-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக் கொள்ளுங்கள்.]

அரசியல்:

1. இன்று இந்திய சர்க்கார் எதன் கீழ் அதிகாரம் வகிக்கிறார்களோ அந்தச் சட்டத்துக்கு (அ) இந்தியக் குடியேற்ற நாட்டுச் சட்டம், (ஆ) இந்திய சர்க்கார் சட்டம், (இ) இந்திய சுதந்தரச் சட்டம் என்ற பெயர்களில் எது உரியது?

2. மேற்கண்ட சட்டத்தை நிறைவேற்றியது (அ) பிரிட்டிஷ் பார்லிமெண்ட், (ஆ) இந்தியப் பார்லிமெண்ட், (இ) இந்திய அசெம்பிளி இந்த மூன்றில் எது?

3. பழைய இந்திய சர்க்காரைத் தொடர்ந்த சர்க்கார் அதாவது 'ஸக்ஸெஸர் கவர்ன்மெண்ட்' (அ) இந்தியாவா? (ஆ) பாகிஸ்தானா? (இ) இந்தியாவும் பாகிஸ்தானுமா?

விஞ்ஞானம்:

1. மண்ணுண்ணிப் பாம்புக்குக் கண்கள் உண்டா, இல்லையா? அதற்கு இருளும் ஒளியும் தெரியுமா, தெரியாதா?

2. தண்ணீருக்கு மேல் ஒரு சிறிய ஊசியையோ ரேஸர் பிளேடையோ மெதுவாகப் படுக்க வைத்தால் மிதக்கிறதே; ஏன்?

3. மரங்களுக்கு இலையே இல்லாவிட்டால் நாம் எப்போதும் போல் வாழ்வோமா? அல்லது மூச்சுத் திணறிப் போவோமா?

சரித்திரம்:

1. நம் ஒவ்வொருவர் வீட்டிலும் லட்சுமி, ஸரஸ்வதி படங்கள் இருக்கின்றனவே, இவைகளை எழுதிய பிரபல சித்திரகாரர் ராஜா ரவிவர்மா காலமான தேதி (அ) 7-4-1885, (ஆ) 6-10-1906, (இ) 18-5-1915 இந்த மூன்றில் எது?

2. பாரதியார் பதிப்பித்த 'இந்தியா' என்ற பிரபல பத்திரிகை முந்தியதா? விபினசந்திர பாலரின் 'வந்தேமாதரம்' பத்திரிகை முந்தியதா?

போது:

1. ஒரு பொருளை ஆங்கிலேயர் 'பெட்ரோல்' என்றும், பிரெஞ்சுக்காரர் 'எஸ்ஸென்ஸ்' என்றும் சொல்லுகிறார்கள். அதை அமெரிக்கர் என்ன என்று சொல்லுகிறார்கள்?

2. கொலம்பஸ் முதல் முதல் கப்பல் யாத்திரை செய்தபோது யாராவது அவரை, "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டிருந்தால் என்ன பதில் சொல்லியிருப்பார்?

3. சமீபத்தில் நடந்த யுத்தத்தின்போது உலகத்திலேயே பிரபலமாக விளங்கியவர்களில் ஒருவர், "நான் நுட்பமான தொழிற் கல்வியோ யூனிவர்ஸிடி படிப்போ கற்றவன் அல்ல. ஆனால் அவ்வப்போது வாழ்க்கையிலே பல விஷயங்களைத் தெரிந்துகொண்டேன்" என்று சொன்னார். இதை (அ) அட்லி, (ஆ) ரூஸ்வெல்ட், (இ) வின்ஸ்டன் சர்ச்சில் இந்த மூவரில் ஒரு

வர்தான் உண்மையில் சொல்வி யிருக்கவும் முடியும். அவர் யார்?

தர்க்க அறிவு:

கீழே உள்ள ஒவ்வொரு பகுதியிலும் முதல் இரண்டு வாக்கியங்கள் உண்மை. அந்த இரண்டிலிருந்தும் ஊகித்த முடிவு மூன்றும் வாக்கியம். தர்க்க முறைப்படி எந்த எந்த ஊகம் சரி? எது எது தவறு?

1. ஐஸ் தண்ணீர்.
   ஐஸ் ஸ்படிக நிறமாக இருக்கும்.
   ஆகையால் தண்ணீர் ஸ்படிக நிறம்.
2. மழை தண்ணீர்.
   மழை திரவ பதார்த்தம்.
   ஆகையால் தண்ணீர் திரவ பதார்த்தம்.
3. மனிதருக்குச் சாவு உண்டு.
   பொன்னிக்குச் சாவு உண்டு.
   ஆகையால் பொன்னி மனித இனம்.
4. ராமனுக்கும் ராதைக்கும் ஒரே வயது.
   ராதை சீதையைவிடப் பெரியவள்.
   ஆகையால் சீதை ராமனைவிடச் சிறியவள்.
5. அநீதி யெல்லாம் பாவம்.
   பொய் சொல்லுவது அநீதி.
   ஆகையால் பொய் சொல்லுவது பாவம்.

தூக்கக் கோளாறு

ஓர் அம்மாள் இருட்டில் தனியே தன் அறையில் தூங்கிக் கொண்டிருந்தாள். நடு ராத்திரி இருக்கும்; யாரோ அறையில் நடமாடுகிற மாதிரி இருக்கவே சட்டென்று விழித்துக்கொண்டாள். நிஜமாகவே அவள் படுக்கைமேல் யாரோ வந்து அடிக்கடி எதையோ வைத்துவிட்டுப் போவதை உணர்ந்தாள். பயந்து போய் அப்படியே மூர்ச்சை யாகிவிட்டாள். அது தெளிந்து மறுபடியும் எழுந்தபோது நன்ருக வெளிச்ச மாகிவிட்டது. வீட்டுச் சமையற்காரன்தான் ராத்திரி அங்கே வந்திருந்தான் என்று உடனே தெரிந்துகொண்டாள். அவன் தூக்கத்தில் நடமாடுகிறவன்; அவள் படுக்கையை மேஜை என்று எண்ணிக் கொண்டு அதில் பதினறு பேருக்குத் தயாராகத் தட்டிலே பட்சணம் பரிமாறி வைத்திருந்தான்!

—அகஸ்டஸ் ஜே. ஸீ. ஹேர்

அதிசயந்தான்

மிஸ்டர் அதிசயம் என்று ஒரு வக்கீல் சாகுந்தறுவாயில் இருந்தார். அப்போது அவர் அருகில் உட்கார்ந்திருந்த அவருடைய ஆப்த நண்பர் ஒருவர், "பின்னல் ஏதாவது செய்ய வேண்டுமென்ருல் சொல்லிவிடு; அப்படியே செய்கிறேன். மனக்குறையே வேண்டாம்" என்ருர்.

"என் சமாதியின்மேல் 'இவர் ஒரு யோக்கியமான வக்கீல்' என்று பொறித்துவிட்டால் போதும்."

"ஆனல் அதில் உன் பெயர் வேண்டாமா?"

"அது எதற்கு? வழியில் போகிறவர்கள் அதைப் பார்த்தால், 'அட! இது பெரிய அதிசயந்தான்' என்று தாங்களே சொல்லிக் கொள்ளமாட்டார்களா?" என்ருர் சாகக் கிடக்கும் அந்த வக்கீல்.

—பார்மர்ஸ் வீக்லி

பிரின்ஸ்டன் யூநிவர்ஸிடி

ஒவ்வொரு நாட்டின் பல கலை வளர்ச்சிக்கும் பெரிதும் ஆதாரமாய் நிற்பவை அதன் சர்வகலாசாலைகள். இதற்கு முன் மூன்று பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளைப் பற்றிய கட்டுரைகளை வெளியிட்டோம். இது ஒரு பழமையான அமெரிக்கச் சர்வகலாசாலை.

நம்முடைய தேசத்தில் காலேஜுகள் இருப்பதைப் போல அமெரிக்காவில் யூநிவர்ஸிடிகள் இருக்கின்றன. அநேகமாக ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு யூநிவர்ஸிடியாவது இருக்கிறது. அமெரிக்கா தனிச் சுதந்தரக் குடியரசாக ஆவதற்கு முன்பிருந்தே இருந்து வரும் நான்கு பழைய யூநிவர்ஸிடிகள் அங்கே உண்டு. அந்த நான்கில் ஒன்றாகிய பிரின்ஸ்டன் கலாசாலைக்கு இன்று 203 வயதாகிறது. 1946-47-ஆம் வருஷங்களில் இந்த யூநிவர்ஸிடி இருநூறாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

பிரின்ஸ்டன் என்பது நியூ ஜெர்ஸி என்ற மாகாணத்தில் இருக்கிறது. இதன் ஆரம்ப சாசனத் தேதி 1746 அக்டோபர் 22. அப்போது பிரின்ஸ்டனுக்கு அருகில் உள்ள நிவார்க் என்ற இடத்தில் கலாசாலை ஆரம்பமாயிற்று. பத்து வருஷங்களுக்குப் பிறகு அதைப் பிரின்ஸ்டனுக்கு மாற்றினார்கள். பிரின்ஸ்டனில் நாஸ்ஸா ஹால் என்ற பழைய கட்டிடம் இந்த யூநிவர்ஸிடியின் பழமைக்கு அறிகுறியாக இன்றும் நிற்கிறது. நாஸ்ஸா ஹாலே ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் முதல் தலைமை ஸ்தானமாக இருந்தது; டெல்பியாவில் நடந்து வந்த காண்டினெண்டல் காங்கிரஸை 1783-இல் இந்த இடத்துக்கு மாற்றினார்கள்.

அந்தக் காலத்தில் இந்தக் கலாசாலையை வளரச் செய்த பெருமை ஜான் விதர்ஸ்பூன் என்பவரைச் சாரும். அவர் பிரின்ஸ்டனில் முதல் முதல் ஆசிரிய ஸ்தானத்தை வகித்தவர். அமெரிக்காவின் சுதந்தர சாஸனத்தில் கையெழுத்திட்ட பெருமக்களில் அவரும் ஒருவர். அமெரிக்காவில் நடந்த சுதந்தரப் போராட்டத்தின்போது இந்தக் கலாசாலையின் நிர்வாகம் பல சங்கடங்களுக்கு உள்ளாயிற்று. அவற்றையெல்லாம் சமாளித்து, இந்தக் கலாசாலையை அறிவு விளக்கம் பெறும் கோயிலாக வளர்ச்சி பெறும்படி செய்தவர் ஜான் விதர்ஸ்பூன். அவர் காண்டினெண்டல் காங்கிரஸில் நியூ ஜெர்ஸியின் பிரதிநிதியாக ஆறு வருஷங்கள் இருந்தார்.

ஆதாரம்: அமெரிக்கன் இன்பர்மேஷன் வெளியீடு (ஆங்கிலம்), அமெரிக்கன் இன்பர்மேஷன், சென்னை.

முதல் உலக மகாயுத்தத்துக்குப் பிறகு உலகமுழுவதும் சமாதானம் நிலவ வேண்டும் என்ற ஆசையால், அதற்கு அடிகோலும் பொருட்டுச் சர்வதேச சபை ஒன்று ஏற்படுத்தினர் உட்ரோ வில்ஸன் என்ற அமெரிக்க ஜனாதிபதி. அந்தச் சபையை 'லீக் ஆப் நேஷன்ஸ்' என்று சொல்வார்கள். அவர் ஐக்கிய அமெரிக்காவின் 28-ஆம் தலைவராக இருந்தார். இந்தப் பிரின்ஸ்டனிலிருந்து தேறிய பெரியார்களில் அவரும் ஒருவர். 1911-இல் பிரின்ஸ்டன் யூனிவர்ஸிடியின் தலைவர் ஆனார். 1912-இல் அமெரிக்க ஜனாதிபதி பதவியை ஏற்றார்.

அவருக்கு முன் இருந்த ஜனாதிபதிகளுள் ஒருவர்கூட இந்தச் சர்வகலாசாலையில்தான் கல்வி பயின்றார். 1809-இல் அமெரிக்க மக்கள் தம் நான்காவது தலைவராகத் தேர்ந்தெடுத்த ஜேம்ஸ் மாடிஸன் என்பவரே அவர். மாகாண கவர்னர்களாக இருந்த 12 பேரைத் தந்த பெருமை பிரின்ஸ்டன் யூனிவர்ஸிடிக்கு உரியது.

இப்போது கிட்டத்தட்ட நாலாயிரம் மாணுக்கர்களுக்குப் போதித்து வருகிறது இந்தச் சர்வகலாசாலை. அவர்களில் முக்கால் வாசிப்பேர் போரிலே தொண்டாற்றியவர்கள்.

இடையிலே சிலகாலம் மாணுக்கர்களின் குறும்புத்தனம் அதிகமாக இருந்ததாம். நாளடைவில் அது மாறி, அவர்களுடைய மிடுக்கெல்லாம் பந்தய விளையாட்டிலே மலர்ச்சி பெற்றது. கால்பந்து விளையாட்டில் மிகச் சிறந்த நிபுணர்களை இந்தச் சர்வகலாசாலை வழங்கி இருக்கிறது.

இப்போதுள்ள பேராசிரியர்களிலே சிலர் உலகப் புகழ் பெற்றவர்கள். ஹென்ரி நாரிஸ் ரஸ்ஸெல் என்னும் வானசாஸ்திரி இங்கே இருக்கிறார். ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் புகழ்பெற்ற பௌதிக விஞ்ஞானிகளாகிய ஹென்ரி டி வொல்ப் ஸ்மித், யூஜெனி பால் விக்னர் என்னும் இருவரும் இங்கே பேராசிரியர்களாக இருக்கிறார்கள்.

உலகத்தில் உள்ள நாடுகளிடையே ஒற்றுமையை உண்டாக்கி, சுதந்தரமும் அமைதியும் உடைய உலகத்தைச் சிருஷ்டி செய்யும் தொண்டில் ஈடுபடுவது இந்தச் சர்வகலாசாலையின் தலைமையான நோக்கம். உலகப் பேறிஞர்களுடைய மேதையை அறிந்து பயன்படுத்திக்கொள்ளவும், இங்குள்ள பேறிஞர்களின் அறிவைப் பரிமாறவும் இது வழி துறைகளை வகுத்திருக்கிறது.

1746-இல் பத்துப் பன்னிரண்டு மாணுக்கர்களுடன் ஆரம்பமான இந்த யூனிவர்ஸிடியில் இன்று 4000 மாணுக்கர்கள் இருக்கிறார்கள். நியூ ஜெர்ஸி காலேஜ் என்ற பெயரோடு ஆரம்பமாயிற்று; இன்று அதுவே வளர்ந்து பிரின்ஸ்டன் யூனிவர்ஸிடியாக விளங்குகிறது.

பட்ஜெட்

வரவு செலவை எந்த எந்த விதத்தில் சரிக்கட்டுவது என்று சகல முயற்சியும் செய்துவிட்டுக் கடைசியில் வரி கொடுப்பவன் ஜேபியில்தான் எந்தச் சர்க்காரும் கை வைக்கிறது.

—'டப்ளின் ஒபினியன்.'

‘வாழையடி வாழையாய் வாழவேண்டும்’ என்று வாழ்த்துவது மரபு. அந்த வாழையின் சிறப்பு அளவிடற்கரியது.

பழங்களின் அரசன்

ராமகிருஷ்ண ஹெகடே

‘புழைக்கடைப் பச்சிலைக்கு வீரியம் இல்லை’ என்பது பழமொழி. சுலபமாகக் கிடைக்கும் பொருள்களை நாம் சரியாக மதிப்பிடுவதே இல்லை. எட்டாத பொருளுக்குக் கொட்டாவி விடுவது மனிதனின் பிறவிக்குணம்; கைக்கு எட்டிய பொருளைச் சரியாக உபயோகித்துத் திருப்தி அடையமாட்டான்.

வாழையின் நிலையும் இதுதான். அதன் உபயோகத்தை உள்ளபடி அறிந்தவர் சிலரே. அதற்கு வாழையைத்தான் குற்றம் சொல்ல வேண்டும். ஏனென்றால், வாழைப் பழம் வருஷம் முந்நூற்றறுபது நாளும் கிடைக்கிறது. ருசியிலாகட்டும், தரத்திலாகட்டும், தினுசுகளிலாகட்டும், வாழைப்பழம் மற்றப் பழங்களுக்குக் குறைந்ததல்ல. உண்மையைச் சொன்னால், அது எல்லாப் பழத்தினுசுகளையும் விட உயர்ந்தது. ஆனால் ஜனங்களோ வருஷத்தில் சில மாதங்கள் மட்டுமே கிடைக்கும் நாவல் கொய்யா முதலிய பழங்களையோ, மேல் நாட்டு முத்திரை படிந்த மெலன், அத்தி, திராட்சைகளையோ தேடிப் பெற்றுத் தின்கிறார்கள்.

நடைமுறையில் தேவ பூஜைக்கு மற்றப் பழங்களையெல்லாம் விட்டு வாழைப்பழத்தை மட்டும் நிவேதனம் செய்வதே அதன் பெருமையை விளக்கும்.

தற்கால முறைப்படி உணவாக மதிப்பிட்டுப் பார்த்தாலும் வாழையின் அவசியம் புலப்படும். உடம்பின் வளர்ச்சிக்கு வேண்டிய முக்கியமான சத்துப் பொருள்கள் எல்லாம் அதில் விஸ்தாரமாக இருக்கின்றன. மற்றப் பழங்களில் விட்டமின் ஒன்றிரண்டு இருக்கும்; அவ்வளவுதான். வாழைப் பழத்திலோ ஏ, பி, ஸி, டி, ஈ விட்டமின்களும், புரோடீன், பாஸ்பரஸ், கால்ஷியம், உலோகச்சத்து இவைகளும் ஏராளமாக இருக்கின்றன; பழத்தின் சுபாவகுணமாகிய சர்க்கரைப் பொருளும் இருக்கிறது. ஆகாரத்தோடு சேர்த்தோ தனியாகவோ வாழைப்பழம் சாப்பிடுவது ஆரோக்கியத்துக்கு எடுத்தது. ஓரிடத்தில் உட்கார்ந்து வேலை செய்பவனுக்கு வாழைப்பழத்தோடு கொஞ்சம் பாலும் சேர்த்துச் சாப்பிடுவது நல்ல உணவாகும். விட்டமின்கள் எல்லாம் அதில் இருப்பதால் சமதாது உணவாகும். தினசரி நாம் சாப்பிடும் உணவில் குறைந்த சத்துப் பொருள்களை வாழைப்பழம் இட்டு நிரப்பும். பாலிலும் மாமிசங்களிலும் இருக்கும் சத்துக்களும் இதில் இருப்பதால் பால் சாப்பிடமுடியாத ஏழைகளுக்கும் மாமிசம் சாப்பிடாதவர்களுக்கும் இது புஷ்டியான உணவாகும். அதிஸாரத்துக்கும் அஜீர்ணத்துக்கும் இது மருந்து.

காப்பிரைட் : கர்மவீர (கன்னடம்), பெங்களூர்.

மலச் சிக்கலை நீக்கும். பருத்தவர்களை இளைக்கவைக்கும்; இளைத்தவர்களைப் பருக்க வைக்கும். இப்பேர்ப்பட்ட அபூர்வ குணங்களைக் கொண்ட வாழைப்பழம் இந்தியாவில் வருஷம் முழுவதும் கிடைக்கிறது.

வாழையின் பெருமை சரித்திரப் பிரசித்தமானது. கி. மு. 327-இல் இது சிந்துவின் கரையில் இருந்தது. அதன்பின் அராபியர்கள் இதைப் பாலிஸ்தானுக்கும் எகிப்துக்கும் கொண்டுபோனார்கள். என்றாலும் இது அதிகமாகப் பயிராவது இந்தியாவில் மட்டுமே. அதிலும் சென்னை மாகாணமே முதல் ஸ்தானம் பெறுகிறது. அங்கே 1,28,000 ஏக்கர் நிலத்தில் வாழை பயிராகிறது. அடுத்தது வங்காளம். அங்கே 44,000 ஏக்கரில் வாழை பயிராகிறது. தவிர, அஸ்ஸாம், ஒரிஸ்ஸா, பிஹார், பம்பாய் இந்த இடங்களிலும் அது பயிராகிறது.

வாழையின் மற்றொரு விசேஷ குணம், குறைந்த செலவில் ஏராளமாகப் பழத்தைக் கொடுப்பதே. இதற்கு அதிகமாகச் சிரமப்பட வேண்டாம். வட கன்னட ஜில்லாக்களில் சில இடங்களில் பாக்குத் தோட்டங்களிலேயே வாழையையும் வளர்க்கிறார்கள். தோட்டக்காரன் வாழைக்கன்றை நட்ட பிறகு பழத்தாரை வெட்டத்தான் மறுபடியும் தோட்டத்துக்குப் போவான்.

பல பொருள்களின் விளைச்சலையும் கேலரி கணக்கில் ஒத்திட்டுப் பார்த்தால் வாழையே அதிகமாகப் பயிராகிறது. சாதாரணமாக ஓர் ஏக்கர் பூமியில் பயிராகும் வாழையில் 50,00,000 கேலரிகளுக்கு மேலேயே இருக்கும். அடுத்த ஸ்தானம் கிழங்குகளுக்குத்தான். ஓர் ஏக்கர் நிலத்தில் விளையும் கிழங்கில் 28,80,000 கேலரிகள், அரிசியில் 12,80,000 கேலரிகள், கோதுமையில் 12,60,000 கேலரிகள் விகிதம் கிடைக்கின்றன. இவை எல்லாவற்றிலும் கிடைப்பதைவிட அதிகமாக வாழையில் புரோடீனும், கார்போஹைட்ரேட்டும் கிடைக்கின்றன. சரியாகக் கவனித்தால் வருஷத்தில் ஏக்கர் ஒன்றுக்கு 60,000 பவுண்டு வாழைப்பழம் கிடைக்கும்.

பரந்து விளங்கும் இந்த நாட்டில் ஒரு பொருளே இடத்துக்கு இடம் வித்தியாசப்படுவது இயற்கை. வாழையில் பலவிதம் இருக்கிறது. வாழை மரத்தின் அடியிலிருந்து நுனி வரையில் எல்லாப் பாகமும் உபயோகமானவையே. அஸ்ஸாமில் 'சம்பா' என்ற ஜாதிப் பழம் $1\frac{1}{2}$ அங்குல நீளந்தான் இருக்கும். சென்னை மாகாணத்து இருவாட்சியும் ரஸ்தாளியும் ருசியானவை. மலையாளத்து நேந்திரன் எங்கும் பிரசித்தி பெற்றது. வங்காளத்தில் ஸாபரி என்ற வகை சிறந்தது. வட கன்னடத்தில் ரஸவாழையும், வாயில் போட்டவுடன் கரைந்துவிடும் நீர் வாழையும் ஒன்றை ஒன்று மிஞ்சியவை. கரு வாழை, சந்திர வாழை என்னும் ஜாதிப் பழங்களும் அங்கே உண்டு.

வாழைப் பழம் சாதாரணமாகப் பிறந்த இடத்திலேயே அதிகமாகச் செலவாகிவிடுகிறது. வாழைப் பழம் தின்பதில் சூரர்கள் சென்னை வாசிகளே. சென்னையில் வருஷம் ஒன்றுக்கு ஒரு மனிதன் 516 ராத்தல் விகிதம் வாழைப்பழம் சாப்பிடுகிறான். வங்காளத்தில் தலைக்கு 83 ராத்தல் விகிதம் செலவாகிறது. எல்லா மாகாணங்களையும்விடப் பின்னே நிற்பது ஐக்கிய

மாகாணமே. அங்கே தலைக்கு 12 ராத்தல் விகிதம் வாழைப்பழம் சாப்பிடுகிறார்கள். மாகாணத்துக்கு மாகாணம் இவ்வளவு வித்தியாசம் இருப்பதற்குக் காரணம் போக்கு வரத்துச் சாதனக் குறைவே.

இப்போது நம் நாட்டில் அரிசித் தட்டு அதிகமாய் இருக்கிறது. சர்க்கார் உணவுக்காக அந்நிய நாட்டுக்கு நிறையப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. 'அதிகமாக உணவுப் பயிர் செய்யுங்கள்' என்று சர்க்கார் பிரசாரம் செய்கிறார்கள். அரிசியோடு மற்ற உணவுப் பொருள்களையும் பயிர் செய்யவேண்டும். இனிமேலாவது நாம் வாழைப் பழத்தை உணவின் ஓர் அம்சமாக்கிக் கொண்டால் தேசத்தில் உணவு பற்றாக் குறை கொஞ்சம் குறையும்; ஆரோக்கியமும் உயரும்.

சாஸ்திரியாரைச் சந்தித்த மனிதர்

1924 ஏப்ரல் மாதம். லண்டனில் ஒரு நாள் இரவு, காலஞ் சென்ற மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் ஒரு விருந்துக்குப் போனார். பிறகு, கால் நடையாக வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது, அழுக்குப் பிடித்த ஆடையும், லட்சணம் இல்லாத முகத்தோற்றமும் உடைய ஒருவர் அவரை நிறுத்தி, "நீங்கள் ரங்காசாரியார்தானே?" என்று கேட்டார்.

"நான் டாக்டர் ரங்காசாரியார் அல்ல. வேண்டுமானால், டாக்டருடைய விலாசத்தைத் தெரிவிக்கிறேன்" என்று சாஸ்திரியார் பதிலளித்தார்.

"பரவாயில்லை, வேண்டாம்! ஆனால் நீங்கள் யார்?" என்று கேட்டார் அந்த மனிதர்.

"நான்தான் சாஸ்திரி" என்று இவர் பதிலளித்தார்.

"ஓ! நீங்கள் சாஸ்திரியா! மிகவும் சந்தோஷம்! உங்களைக் காணும் பாக்கியம் எனக்கு முன்னமே ஒரு சமயம் கிடைத்திருக்கிறது" என்றார் அவர்.

"அப்படியா! எனக்கு ஞாபகமில்லை. நாம் எப்போது சந்தித்தோம்?" என்று கேட்டார் சாஸ்திரி.

"ஒரு வருஷத்துக்கு முன்பு, அடிமைத்தளை எதிர்ப்புச் சங்கம் ஒன்றில் கென்யாவைப்பற்றி நீங்கள் பேசினீர்கள் அல்லவா? அப்போது" என்று அவர் ஞாபகப்படுத்தினார்.

உடனே சாஸ்திரியார், "நீங்கள் யார், தெரிந்துகொள்ளலாமா?" என்று கேட்டார்.

"நான்தான் இந்தியா மந்திரி" என்று மற்றவர் பதிலளித்தார்.

அவர்தான் லார்டு ஆலிவர்.

4

நமது மணிக் கணக்கு

ஆர். வி. வைத்யா

லண்டனுக்கு ஐந்து மைல் தூரத்தில் உள்ள கிரீன்விச் நகரமே இன்று உலகத்துக்கெல்லாம் மணிக் கணக்கைக் கட்டளேயிட்டுவருகிறது. மிகப் புராதனமான வான சாஸ்திரக் கலேயைப் பெற்ற நம் நாடு ஏன் இந்த ஏற்பாட்டுக்கு உட்பட வேண்டும் என்று கேட்கிருர் கட்டுரையாளர். இவர் குவாலியரில் உள்ள ஒரு புரொபஸர்.

"மணி என்ன ?" என்று ஒரு நண்பரைக் கேட்டேன்.

"ஆறரை."

"இல்லே, ஏழு" என்று நான் மறுத்தேன்.

நண்பர் ஆச்சரியம் அடைந்தார். "அதெப்படி ஏழு?" என்று கேட்டார்.

"ஆறரை என்றீர்களே; அதெப் படி ?"

"கடிகாரம் ஆறரை காட்டுகிறது. அதனுல்தான்" என்ருர் நண்பர்.

"கடிகாரம் பிசகில்லே என்று நீங்கள் எப்படிக் கண்டீர்கள் ?"

"அதென்னவோ, எனக்குத் தெரியாது" என்ருர் நண்பர்.

அதன்மேல் நண்பருக்கு நான் விளக்கினேன். சர்வதேச கன்வென்ஷன் ஒன்று இருக்கிறது. அதன்படி, கிரீன்விச் கடிகாரத்துக்கு ஐந்தரை மணி முன்னதாக இந்திய கடிகாரத்தை வைத்துக்கொள்ள இந்திய சர்க்கார் சம்மதித்திருக்கிறது. உலகம் முழுவதற்கும் கடிகார மணிக்கணக்கை, கிரீன்விச் நகரமே கட்டளேயிட்டு வருகிறது. அந்தக் கணக்கைப் பின்பற்றி நடக்க, சகல தேசங்களும் சம்மதித்திருக்கின்றன. ஏனென்ருல், கிரீன்விச் நகரத்தை இன்று பூமியின் சூன்ய தீர்க்க ரேகை (ஜீரோ மெரிடியன்) என்று வைத்துக் கொண்டிருக்கிருர்கள். இதுதான் விஷயம்.

இரண்டு வருஷங்களுக்கு முன் (1947 ஆகஸ்ட் 15-இல்) நாம் சுதந்தர தினத்தைக் கொண்டாடினேம். அப்போது, 'கடிகார மணிக் கணக்கில் மாத்திரம் நமக்குச் சுதந்தரம் ஏன் ஏற்படவில்லே?' என்று நான் ஆச்சரியம் அடைந்தேன். பிரிட்டிஷ் கடற்படை இலாகாதார் வெளியிடும் கப்பல் பஞ்சாங்கங்களே நம் ஜோஸ்யர்களுக்கு ஆதாரமாக இருக்கின்றன. இரண்டாவது உலக யுத்தம் நடந்தபோது, மத்திய தரைக் கடலில் நேசக் கட்சியாரின் கப்பல்கள் நுழைய முடியாமல் ஜெர்மானியர் வளேத்து மறித்துக்

மூலம் : பீப்பிள் (ஆங்கிலம் : 21-8-'49), டில்லி.

கொண்டார்கள். அப்போது பார்க்க வேண்டுமே, நம் ஜோஸ்யர்களையும் வான சாஸ்திரிகளையும்! அவர்கள் பாடு ஒரே குழப்பமாய்ப் போயிற்று. ஏனென்றால், அவர்களுக்கு அந்தப் பிரிட்டிஷ் கடற்படையின் 1942-ஆம் வருஷத்துப் பஞ்சாங்கம் சமயத்தில் வந்து சேரவில்லை. உஜ்ஜயினி நகரில் உள்ள நம் வானிலை ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகளே, அவர்களுக்கு அபயம் அளிக்க வேண்டியதாயிற்று. வானத்தில் கிரகங்களின் நிலைகளை அந்த அதிகாரிகள் நன்றாக ஆராய்ந்து ஒவ்வொரு தேதியிலும் பகலில் இந்தியாவின் உச்சி நேரம் எது என்பதைத் திட்டமாகக் கணக்கிட்டுப் பிரசுரித்தார்கள்.

ஒரு சமயத்தில் க்ரீன்விச் நகரத்தை எதிரிகள் விமானக் குண்டு வீசித் தாக்கினார்கள். 'வருங்காலத்தில் கிரீன்விச் வானிலை ஆராய்ச்சி நிலையத்தையே மீண்டும் எதிரிகள் தாக்கி யந்திரங்களையெல்லாம் அழித்துவிடக்கூடும். அப்போது உலகத்துக்கெல்லாம் கடிகார மணிக்கணக்கை யார் வழங்குவார்கள்? நாம் நமக்கென்று சொந்தமாக ஒரு நிலையத்தில் வானிலை ஆராய்ச்சி செய்து அதன்படி நம் கடிகாரங்களில் மணிக்கணக்கை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாதா?' என்று அப்போது நான் எண்ணினேன். இதைப்பற்றி நம் சர்க்கார் கவனிக்க வேண்டும் என்று 1947 செப்டம்பரில் ஒரு கட்டுரையும் எழுதினேன்.

இது ஒருபுறம் இருக்க, இன்னொரு விஷயத்தையும் நாம் யோசிக்க வேண்டும். கிரீன்விச் நகரத்தை நாம் ஏன் நம் கடிகார மணிக்கணக்குக்கு ஆதாரமாகக் கொள்ள வேண்டும்? பூமியின் சூன்ய தீர்க்க ரேகையில் அது அமைந்திருப்பதாக இன்று மதிக்கிறார்களே, அதனால்தான். ஆனால், பூமியின் பிரதம தீர்க்க ரேகை (ப்ரைம் மெரிடியன்) பின்வரும் நகரங்களின் மூலம் செல்லுவதாகப் புராதன ஹிந்து வான சாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள்: ஹோஷியார்பூர், நாபா, லூதியானா, ஹிஸ்ஸார், ரோஹ்தக், ஜய்புர், டோங்க், மௌ, உஜ்ஜயினி, புஸாவல், பித், பார்ஷி, ஷோலாபுர், பாகல்கோட், கோடக், கள்ளிக்கோட்டை, கராச்சி இவையே அந்த நகரங்கள்.

இந்தியர்கள் எந்தக் காலத்திலும் தங்கள் கால நிர்ணய அட்டவணைக்குப் பிறரைச் சார்ந்திருந்ததில்லை. தங்களுக்கென்று சொந்தமான ஒன்றை அமைத்துக்கொண்டார்கள். அது உலகத்திலேயே சிறந்தது. ஏனென்றால், இயற்கை நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டது. அந்நியர் ஆதிக்கத்தில் சிக்கி அந்நிய கணித முறைகள் சிலவற்றை இந்தியர் ஏற்றுக் கொள்ள நேரிட்டாலும், சந்தர்ப்பம் நேரிட்டபோதெல்லாம் தங்கள் சொந்த முறைகளை வற்புறுத்தியே வந்திருக்கிறார்கள். லண்டனில் உள்ள இந்தியா மந்திரி காரியாலயத்தில் பித்தளைக் கருவி ஒன்று இருக்கிறது. அது கிரககதிகளின் கோணத்தை அளக்கும் பழமையான கருவி. அதில் இருபது இந்திய நகரங்களின் அட்சரேகை (லாஞ்ஜிட்யூடு), தீர்க்க ரேகை (லாட்டிட்யூடு) இரண்டையும் அந்தக் காலத்திலேயே குறித்து வைத்திருக்கிறார்கள்.

உஜ்ஜயினி நகரத்தின் தீர்க்க ரேகை $110\frac{1}{2}$ என்று அதில் குறித்திருக்கிறார்கள். இதன்படி பார்த்தால், கிரீன்விச் நகருக்கு முப்பத்

தைந்து டிகிரி மேற்கே உள்ள இடத்தைப் பிரதம மெரிடியன் என்பதாக மதித்திருந்தார்கள் என்று தெரிகிறது. இந்த இடத்துக்கு 'அதிருஷ்டத் தீவுகள்' என்று அவர்கள் பெயரிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த அதிருஷ்டத் தீவுகள் எங்கே இருக்கின்றன என்று கண்டு பிடிக்க நான் முயன்றேன்; அதில் எனக்கு அதிருஷ்டம் கிட்டவில்லை. கால தேவதையின் மடியிலே எத்தனையோ நாகரிகங்கள் தோன்றி மடிந்துவிட்டன என்று சரித்திரம் சொல்லுகிறது. ரோம், பாபிலோன், அலெக்ஸாண்டிரியா முதலிய பல நகரங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலத்தில் இந்திய வான சாஸ்திரிகள்மீது செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன. இன்று லண்டன் நம்மீது செல்வாக்குச் செலுத்தியிருக்கிறது. ஆனால் இதற்காக என்றென்றும் நாம் அதன் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை.

முதலாவது: காலநிர்ணயம் செய்ய அந்நிய நாடுகளின் வான ஆராய்ச்சி நிலையங்களை நாம் சார்ந்திருக்கக் கூடாது. நம் சொந்த வான ஆராய்ச்சி நிலையங்களை, தகுந்த இடத்தில் நாம் கட்டிக்கொள்ள வேண்டும். அங்கே சூரியகதிகளை ஆராய்ந்து, இந்திய கடிகாரங்களுக்குக் கால நிர்ணய அட்டவணை தயாரித்துக் கொடுக்கவேண்டும்.

இரண்டாவது: எந்த நகரத்தில் கால நிர்ணய யந்திரத்தை அமைத்துக்கொள்வது என்பதைத் தீர்மானிக்க வேண்டும். தலைநகரமான டில்லியே அதற்கு ஏற்றது என்று அரசியல்வாதிகள் சொல்லக்கூடும். பின்கண்ட காரணங்களால் உஜ்ஜயினியே ஏற்றது என்று எனக்குத் தோன்றுகிறது: (1) பல நூற்றாண்டுக்கணக்காய் இந்திய வான சாஸ்திரிகள் அந்த நகரத்தையே கால நிர்ணயத்துக்கு ஆதாரமாய் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்; (2) நம் நாட்டின் பூகோள அமைப்பில் அது மையஸ்தானம் வகிக்கிறது; (3) சேர்ந்தாற்போல 21 நாள் சூரியன் பூர்ண உச்சத்திலிருக்கும் அற்புதத்தை ஐதரேய பிராம்மணம் வர்ணிக்கிறது. இந்த அற்புதம் கிரீன்விச் மெரிடியன்மீது உள்ள எந்த இடத்திலும் கிடையாது.

மூன்றாவது: உஜ்ஜயினி ஒரு காலத்தில் மகோன்னத நிலையில் இருந்தது. அதையே இந்தியாவுக்கு மட்டும் அல்ல, உலகத்துக்கே பிரதம மெரிடியன் என்பதாக மதிப்பதன் மூலம் மீண்டும் அதன் பெருமையை நாம் புத்துயிர் பெறச் செய்யலாம். இந்திய அட்லாஸ் புத்தகங்கள் அனைத்திலுமாவது நாம் இந்த ஆதாரத்தின்மீது அட்ச ரேகை, தீர்க்க ரேகைகளைத் தயாரித்து வெளியிடலாம்.

உஜ்ஜயினி நகரத்திலோ அதற்கு அருகில் உள்ள வேறு ஏதாவது ஓர் இடத்திலோ நவீன வான ஆராய்ச்சி நிலையம் ஒன்றைக் கட்ட ஏற்கனவே நம் சர்க்கார் தீர்மானித்திருக்கும் என்று நான் நம்புகிறேன். அதோடு நமது புராதன நகரமான உஜ்ஜயினியையே பிரதம மெரிடியன் என்று வைத்துக்கொண்டு அதன்படி நம் கடிகாரங்களின் காலத்தை நிர்ணயித்துக்கொள்ளவும் வேண்டும் என்று ஜனங்களெல்லாம் சர்க்காரைப் பலமாக வேண்டிக்கொள்ளவேண்டும்.

அலங்காரக் கலையில் புராதனச் சிறப்பு வாய்ந்தது நம் நாடு. இன்றோ—

அழகும் மணமும்

ரவீந்திரநாத் ராய்

உலகத்தில் மனிதன் தோன்றின காலத்திலிருந்தே சௌந்தரிய ஞானம் ஏற்பட்டுவிட்டது. நாகரிகமற்ற காட்டுமிராண்டி ஜாதிப் பெண்கள்கூடக் கொண்டையில் பூ வைத்துக்கொள்ள ஆசைப்படுவது இயற்கை. உடம்பை வதைத்துக்கொண்டாவது பச்சை குத்திக் கொள்ளுவார்கள் பல ஜாதியார். பூர்விகக் குடிகள் பலர் தாங்கள் கொன்ற மனிதர்களின் தலைகளை மாலையாகக் கோத்து அணிந்துகொள்வார்கள். அது வீரத்துக்கு அறிகுறியாம்.

நம் நாடு நாகரிக முன்னேற்றத்தில் பண்டை நாளிலிருந்தே சிறந்து விளங்குகிறது. வேத காலம் முதல் நம் முன்னோர் சுப காரியம் செய்யும்போது வர்ணக் கோலங்கள் இடுவது வழக்கம். அப்போது பலவித வாசனைப் பொடிகளை உபயோகிப்பார்கள். சாம்பிராணி தூபம், குங்கிலியம் இதெல்லாம் போடுவார்கள். சந்தனம் பூசிக்கொள்வதும் உண்டு. ஏலம் முதலிய வாசனைத் திரவியங்களைத் தண்ணீரில் போட்டுக் குடிப்பது நம்மவர்களுக்குச் சகஜம். எகிப்தில் அந்தக் காலத்தில் சவத்தை வாசனைத் தைலமாட்டி, 'பிரமிட்' என்ற கோபுரத்தில் பலவித வாசனைப் பொருள்களுடன் அடக்கம் செய்து வந்தார்கள்.

அந்த நாளில் ராஜ குடும்பங்களில் அலங்காரம் செய்வதற்கென்றே சில ஊழியர்கள் இருந்து வந்தார்கள். ரகுவம்சம், குமார சம்பவம், காதம்பரி முதலிய காவியங்களில் இதைப்பற்றிப் பல இடங்களில் வருகிறது. பெண்கள் மட்டும் அல்ல; ஆண்கள்கூட அவர்களிடத்தில் அலங்காரம் செய்துகொள்வார்களாம். கொண்டை முடிவதற்கே அதிக நேரம் பிடிக்குமாம். குளித்துவிட்டுக் கஸ்தூரிப் புகை போட்டுக் கூந்தலுக்கு மணம் ஊட்டுவார்கள். பிறகு பலவகைக் கொண்டை போடுவார்கள். குரவகம், லோத்ரம் இப்படிப் பல அழகிய மலர்களைச் சூடிக்கொள்வார்கள். முகம் வாடாமல் மென்மையோடு விளங்க, ஹரிசந்தனம், மகிழம், கஸ்தூரி, கோரோசனம், குங்குமப்பூ இவற்றைப் பொடியாக்கித் தைலத்தில் குழைத்துப் பூசிக்கொள்வார்கள். அடுத்தபடி கண்ணுக்கு மை தீட்டிக்கொள்வது.

மகாகவி பாணபட்டர் ஹர்ஷவர்த்தனருடைய சகோதரியான ராஜ்யஸ்ரீயின் விவாகத்தைப்பற்றி அழகாக வருணித்திருக்கிறார். "கற்பூரப் படிகம்போல் விளங்கும் ராஜகுமாரியின் கழுத்தில் கோகுள மலரும் லவங்கப்பட்டையும் தொடுத்த மாலையைச் சூட்டி, நெற்றியில் கஸ்தூரி மணம் வீசும் திலகம் இட்டார்கள். பாதங்களில் செம்பஞ்சுக் குழம்பு பூசினார்கள்" என்று அதில் வருகிறது. ஹர்ஷரின்

காப்பிரைட்: பாரத வர்ஷ (வங்காளி: ஜூலை '49), கல்கத்தா.

பிறந்த நாளின்போது உயர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் முன் செல்ல, அவர்கள் பின்னே ஆட்கள் சாமரம், மாலை, பூங்கூடைகள் பாரிஜாதத்திலிருந்து எடுத்த வாசனைத் தைலம் இவற்றை ஏந்திச் சென்றதாகவும் குறிப்பிடுகிறார். சீனயாத்திரிகரான யுவான் த்ஸியான், "வாயிலிருந்து நறுமணம் வீசுவதற்காகத் தாம்பூலம் தரித்ததால் ஹர்ஷரின் உதடுகளும் பற்களும் சிவந்திருந்தன" என்று எழுதியிருக்கிறார்.

அஜந்தா சித்திரங்களில் உயர் குடும்பப் பெண்கள் தங்களை அலங்கரித்துக்கொள்ளும்போது கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொள்வதுபோல் எழுதியிருப்பதைப் பல இடங்களில் காணலாம். வாத்ஸ்யாயனர் 'பேனகா' என்ற நுரை தரும் ஒரு பொருளை ஆண்கள் உடம்பில் தேய்த்துவந்ததாகச் சொல்கிறார். க்ஷவரம் செய்யும்போது இதை அதிகமாக உபயோகிப்பார்களாம். இதிலிருந்து, சோப்புச் செய்ய அந்தக் காலத்திலேயே நமக்குத் தெரிந்திருந்தது என்று அறியலாம்.

இருந்தாலும் முஸ்லிம்கள் இந்தியாவுக்கு வந்த பிறகுதான் சோப்பு அதிகமாய்ப் பரவ ஆரம்பித்தது. தமாஸ்கஸில் அந்தக் காலத்தில் ஒரு பெரிய சோப்புத் தொழிற்சாலை இருந்ததாம்.

குப்தர்கள் காலத்துக்குப்பிறகு நம் நாடு இந்தத் துறையில் பின்னடைந்துவிட்டது. அந்நியர் படையெடுப்பும் உள்நாட்டுச் சச்சரவுந்தான் இதற்குக் காரணம். ஆனால் மொகலாய அரசர்கள் இங்கே ராஜ்யத்தை ஸ்தாபித்தபிறகு இந்துக்களும் முஸ்லிம்களும் ஒத்துப் போனார்கள். அதனால் இரண்டுவிதப் பண்பாடும் கலந்து உன்னதமான ஒரு கலை நோக்கு ஏற்பட்டது. மறுபடியும் மக்கள் அலங்காரம் செய்துகொள்வதில் விசேஷ கவனம் செலுத்த ஆரம்பித்தார்கள். பலவித வாசனைப் பொருள்கள் உபயோகத்துக்கு வந்தன.

அந்தக் காலத்தில் போர்த்துக்கீசியர் நம் நாட்டில் மதப் பிரசாரம் செய்யும்போது, "உடல், பொருள், ஆவி மூன்றுமே எப்போதும் சுத்தமாக இருக்கவேண்டும். சோப்புத் தேய்த்துக் கொள்வது மிகவும் அவசியம்" என்பார்களாம்.

இப்போது ரஸாயன முறையில் வாசனை சோப்பு முதலிய பல பொருள்களைத் தயாரிப்பதில் அமெரிக்காதான் முன்னணியில் நிற்கிறது. நம் நாடு உஷ்ணப் பிரதேசம். அடிக்கடி வேர்வை வரும்; இங்கேதான் இந்தத் தொழில் விருத்தியடைய வேண்டியது மிகவும் அவசியம்; ஆனாலும் இன்று இதுதான் மிகவும் பின்னடைந்திருக்கிறது.

'பல்லைத் திருகி எடு'

லாஸ் ஏஞ்ஜெல்ஸ் நகரத்துப் பெண் ஒருத்தி, "என் கணவருக்கு எலெக்டிரிக் ஸ்விட்சுகள் தேய்ந்துவிடக் கூடாதாம். அதற்காக ஒவ்வொரு தடவை விளக்கை அணைக்கவும் பல்பைத்தான் கழற்றவேண்டும் என்று என்னை வற்புறுத்துகிறார்" என்று புகார் செய்து விவாகரத்துக் கோரினாள். வழக்கில் வெற்றி பெற்றாள்.

—யுபி, அமெரிக்கா.

பிழையைத் திருத்துங்கள்

கீழே உள்ள ஒவ்வொரு பகுதியிலும் எழுத்து, சொல், பொருள், வாக்கியப் பிழை ஏதாவது ஒன்று இருக்கும். அதைக் கண்டு பிடித்துத் திருத்துங்கள்:

1. உணவுப் பஞ்சம் அதிகமாக உள்ள இந்தக் காலத்தில், தோட்டந் துறவுகளைக் கவனித்து நிலவளத்தைப் பெருக்கிப் புதிய முறையில் பயிர் செய்யவேண்டும்.

2. மென்மேலும் உழைக்கும் உழைப்பாளிகளை இந்த நாட்டில் உள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களில் கண்டாலும், புதிய முறையைக் கண்டால் துணிவாக மேற்கொள்பவர்கள் அருமையாகவே இருக்கிறார்கள்.

3. நல்ல விஞ்ஞான அறிவை உடைத்தாயிருக்கிற மக்கள் வெறும் குமாஸ்தா உத்தியோகத்தை நாடி அலையாமல் அந்த அறிவை மலரச் செய்து ஆராய்ச்சியிலே ஈடுபட்டு நாட்டுக்கு நலம் செய்யலாம்.

4. ஒண்டியாக இருந்து பெரிய காரியங்களைச் சாதித்த மேதாவிகள் முன் காலத்தில் இருந்தது போலவே இந்தக் காலத்திலும் சிலராவது இந்தியாவில் இருக்கிறார்கள்.

5. பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலிய மும்மூர்த்திகளும் உலகை ஆக்கி அளித்து அழிப்பதாகப் பழைய புராணங்கள் கூறுகின்றன.

6. ஆனால் விஞ்ஞான ஆராய்ச்சியினால் புதிய புதிய பொருள்களையும் கிரகங்களையும் உண்டாக்கும் ஆற்றல் விஞ்ஞான மேதைகளுக்கு உண்டென்று புதிய நாகரிகம் கூறுகிறது.

7. காங்கிரஸ் மகாநாடுகளில் தலைமை வகித்துப் புகழ்பெற்றவர்கள் கோகலேயைப் போலப் பலர் இருந்தாலும் மகாத்மா காந்தியடிகளைப் போல உலகத்தின் கவனத்தை இழுத்தார்கள் என்று அவர்களைச் சொல்வதற்கில்லை.

8. உதகமண்டலம் என்ற பெயரே அங்கே நீர் நிரம்பியிருப்பதைக் காட்டுகிறதல்லவா?

9. நீலகிரி மலையில் உள்ள அந்த இடம் மிகவும் குளிர்ச்சியாக இருக்கிறதை யார் அறியமாட்டார்கள்?

10. கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் தம்முடைய ராமாயண காவியம் முழுவதையும் விருத்தங்களினாலே பாடினார்.

11. பழைய காலத்தில் இருந்த பெருந் தேவனார் என்ற புலவர் இயற்றிய பாரத வெண்பா என்ற நூல் முழுவதும் வெண்பாக்களால் அமைந்து பாரதக் கதையைச் சுவையுடன் சொல்கிறது.

12. தொல்காப்பியம் என்ற நூலின் பெயரே அது மிகப் பழைய காவியம் என்பதைக் காட்டுகிறது.

[திருத்தம் 69 - ஆம் பக்கத்தில்]

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச்சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிறார். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள்பற்றியும் அருமையாகப் பதில் தருகிறார்.

கேள்வி: ஏழை காணும் கனவுக்கும் பணக்காரன் கனவுக்கும் என்ன வித்தியாசம்?

பதில்: ஏழை உணவைப்பற்றிக் கனவு காண்கிறான்; பணக்காரனோ வெவ்வேறு விரோசன மருந்தைப் பற்றிக் கனவு காண்கிறான்.

* *

கே: தங்களுக்கு அவசியமானது எது?

ப: கடவுளின் கிருபை. மற்ற எது கிடைத்தாலும் அது கைவிட்டுப் போய்விடும்.

* *

கே: பிச்சை வாங்குவதற்கும் கடன் வாங்குவதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா?

ப: பிச்சை எடுப்பது எப்போதுமே யோக்கியமான காரியம்; கடன் வாங்குவது வியாபார தந்திரம்.

* *

கே: 1930 - ஆம் வருஷத்துக் காந்தி குல்லாய்க்கும், 1942, 1949 - ஆம் வருஷத்துக் காந்தி குல்லாய்க்கும் என்ன வித்தியாசம்?

ப: 1930 - ஆம் வருஷத்தில் அடிமையின் நம்பிக்கையாக இருந்தது; 1942 - இல் போர் வீரரின் தலைக்கவசமாக ஆயிற்று; 1949 - இல் ஆள்பவரின் கிரீடமாகவும் கள்ளச்சந்தைக்காரனின் மறைப்பாகவும் இருக்கிறது.

* *

கே: நம்முடைய தேசத்தில் எத்தனை வகை யாசகர்கள் இருக்கிறார்கள்?

ப: ஓட்டுக்களை யாசிக்கும் அரசியல்வாதிகள், மாலைகளை யாசிக்கும் மந்திரிமார்கள், நிதியை யாசிக்கும் தேசபக்தர்கள், உணவை யாசிக்கும் பட்டினிப் பட்டாளம் - இத்தனை வகையினர் இருக்கிறார்கள்.

* *

கே: அமெரிக்காவில் வானளவும் உயர்ந்துள்ள மாளிகைகளைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: அதுவா? முதலாளி மிடுக்கு வானத்தை முத்தமிடுகிறது.

* *

கே: மந்திரிமார் எப்போதும் பறந்துதான் போகவேண்டுமோ?

ப: அவர்கள் பறந்தாலும் சரி, ஊர்ந்தாலும் சரி - எல்லாம் ஒன்றுதான்; அவர்கள் எங்கேயாவது போய்ச் சேர்வதாகத் தெரியவில்லை.

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: ஜூலை '49), பம்பாய்.

கே: அடிமைத்தனத்துக்கு மூலம் எது?

ப: கொடுங்கோலனுடைய பலம் அல்ல; அடிமையின் கோழைத் தனந்தான்.

*   *

கே: அழகு முகத்தில் இருக்கிறதா? அகத்தில் இருக்கிறதா?

ப: அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

*   *

கே: கிறிஸ்துவுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

ப: ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தொன்பது வருஷம் விட்டுப் போன விஷயம்!

*   *

கே: தோல்வியுற்ற அரசியல் வாதியின் கடைசிப் புகலிடம் எது?

ப: தோல்வியுற்ற காங்கிரஸ்காரன் சோஷலிஸ்டு ஆகிறான்; தோல்வியுற்ற சோஷலிஸ்டு கம்யூனிஸ்டு ஆகிறான்; அதற்கப்புறம் தோல்வியே இல்லை; ஒவ்வொருவனும் ஒவ்வொரு ஸ்டாலின் ஆகிவிடுகிறான்.

கே: காதலில் பணத்தின் வேலை என்ன?

ப: காமனுக்கு உணவு அது.

*   *   *

கே: நம்முடைய வெள்ளைக் குல்லாய் தரித்த அரசியல்வாதிகளின் காரியங்களில் உங்களுக்கு எது பிடித்திருக்கிறது?

ப: மாலை போடும்போது தலை வணங்குகிறார்களே, அதுதான்.

*   *

கே: வயதான மனிதன் இளம் பெண்களை விழித்து விழித்துப் பார்த்தால் அவனை என்ன செய்வது?

ப: கவனிக்கவே வேண்டாம். அந்தப் பார்வையோடு அவன் விருப்பம் தீர்ந்துவிடுகிறது.

*   *

கே: கண்ணீர் பாஷையாகுமா?

ப: உள்ளுக்குள் வேதனையிருந்தால் கண்ணீர் பேசும் வார்த்தைகள் துன்பத்தை உண்டாக்கும்.

*   *

கே: மங்கை மதுவானால் மனிதன் என்ன ஆவான்?

ப: ஈ.

யார் மேலானவள்?

"எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, அதைப் பற்றி எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் என் மனைவி பேசுவாள்" என்று பெருமை யடித்துக்கொண்டார் ஒருவர்.

"இவ்வளவுதானே! என் மனைவிக்கு விஷயமே வேண்டியதில்லை" என்றார் மற்றவர்.

—ஏர்ல் வில்ஸன்

கார்ட்டூன் கதம்பம்



பிரிட்டனில் அட்லி, சர்ச்சில் இருவரும் தீவிரமாய்த் தேர்தல் பிரசாரம் ஆரம்பித்துவிட்டார்கள்.

—'ப்ரீ இந்தியா'

"என் குதிரையில் ஏறுங்கள்; ஜேணம் தயாராயிருக்கிறது" என்று சரத் பாபுவும் லோஹியாவும் ஒருவரை ஒருவர் வருந்தி அழைக்கிறார்கள்.

—'சங்கர்ஸ் வீக்லி'



"இந்திய வியாபாரிகளுக்கும் அந்நிய வியாபாரிகளுக்கும் சர்க்கார் வேற்றுமை பாராட்ட முடியாது" என்கிருர் டாக்டர் சியாமாபிரஸாத் முகர்ஜி.

—'இந்தியன் ரிபப்ளிக்'



மழையில் புறப்பட்ட கல்யாண ஊர்வலக் கார் வழியிலே ரிபேர்.

—'மனோஹர்'

பேச முயல்வது குழந்தையின் இயற்கை.
அதற்கு உதவுவது பெரியவர் கடமை.

குழந்தையின் பேச்சு

மார்ட்டின் எப். பால்மர்

தாயின் உதவி யில்லாமல் ஒன்றும் செய்ய முடியாத ஒரு சிறு குழந்தையைக் கவனித்தால், கடவுள் படைப்பு அனைத்திலும் அது எவ்வளவு அதிசயமானது என்று விளங்கும். அது சிரிக்கிறது. கொட்டாவி விடுகிறது. சோம்பல் முறிக்கிறது. கையை வாய்க்குள் அடைத்துக்கொள்கிறது. முகத்தைக் கோணிக் கொள்கிறது. 'இங்கா' என்று கத்துகிறது. விளக்கைப் பார்க்கிறது. இரைந்து பலம் கொண்டமட்டும் அழுகிறது. தலையைத் திருப்பிச் சுற்றிலும் இருக்கும் பொருள்களை யெல்லாம் அசட்டையாய் நோக்குகிறது. இந்தச் செயல்கள் எல்லாம், பார்த்தால் அர்த்தமற்றவைபோல் தான் தோன்றும். ஆனால் இவை தான் குழந்தை பேசுவதற்கு மூலாதாரம். குழந்தையின் மனத்தில் என்ன என்னவோ தோன்றுவதால் தான் அது இந்தமாதிரி எல்லாம் செய்கிறது. பின்னுடி பேசுவதற்காக இப்போதே, அது சம்பந்தமான நரம்புகளை ஆட்டி அசைத்துப் பழக்கிக்கொள்கிறது என்றும் சொல்லலாம். தன் மனத்தில் இருப்பதைப் பிறருக்குத் தெரிவிக்க முயன்று, எப்பாடு பட்டாவது அது பேசக் கற்றுக்கொள்கிறது.

பேசுவது குழந்தைக்குப் பெரிய விஷயம். அது படிப்படியாக எப்படிப் பேசக் கற்றுக்கொள்கிறது என்பதைக் கவனிக்கக் கவனிக்க மிகவும் ரசமாயிருக்கும். குழந்தை பிறந்ததுமே, பேசுவதற்கு வேண்டிய முயற்சியைத் தொடங்கி விடுகிறது. பேச அது எப்படியெல்லாம் முயல்கிறது என்பதைத் தாய் அறிந்திருந்தால், அந்த முயற்சியில் ஒவ்வொரு வாரமும் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தைக் கண்டு கொள்வாள்; குழந்தை தன் மனத்தில் இருப்பதைப் பிறருக்கு வெளியிடும் விஷயத்தில் தானும் பல விதமாய் அதற்கு உதவி செய்வாள்.

எத்தனையோ விதமான தீங்குகள் நேர்ந்து குழந்தையின் பேச்சுக்குப் பாதகம் விளைக்கலாம். உடம்புக்கு வந்தோ அல்லது ஏதாவது விபத்து நேர்ந்தோ குழந்தை பலவீனமாகி விட்டால், பேசுவது தடைப்பட்டு விடும். அடிக்கடி உடம்புக்கு வருவது குழந்தையின் பேச்சைப் பாதித்து விடுமாகையால், உடம்புக்கு வராமல் பார்த்துக்கொள்ளுவது அவசியம். அதுவும் பேச்சு வரும் சமயத்தில் இந்தமாதிரி நேர்ந்தால், பேச்சு வருவது மிகவும் தாமதமாகிவிடும்.

பேச்சு வரவில்லை என்று எங்கள் ஸ்தாபனத்துக்கு ஒரு குழந்தையை அதன் பெற்றோர் ஒரு சமயம் அழைத்து வந்தார்கள். ஒரு வருஷம் பொறுமையாய்க் கவனித்தால்தான்

காப்பிரைட் : பேரென்ட்ஸ் மகஸின் (ஆங்கிலம்: மே '49),
நியூ யார்க், ஐக்கிய அமெரிக்கா.

அதற்குச் சரியாகப் பேச வரும் என்று தோன்றியது. அப்படியே ஒரு வருஷத்தில் அது நன்ருகப் பேசத் தொடங்கிவிட்டது. பெற்ரோர்கள் அந்தக் குழந்தையைப் பள்ளிக்கூடத்துக்கும் அனுப்பினார்களாம். ஆனல் திடீரென்று அதற்கு நிமோனியா ஜுரம் வந்தது. அதிலிருந்து குணமான பிறகு பார்த்தால், அதற்குப் பேசும் சக்தி போய்விட்டது; ஏதோ சிறிது சிறிது திக்கித் திக்கிப் பேசத் தொடங்கிவிட்டது. அதன் பேச்சைச் சரிப்படுத்துவதற்கு மீண்டும் ஒரு வருஷம் பிடித்தது. இப்போது குழந்தை பழைய நிலைமையை அடைந்து பள்ளிக்கூடத்துக்குப் போய்வருகிறது.

குழந்தை பிறந்தவுடன் கத்த வேண்டும். குழந்தைக்குப் பேச்சுச் சரியாக வரும் என்பதற்கு அது தான் அடையாளம். பிறந்தவுடன் கத்தாத குழந்தைக்குப் பின்னல் பேச்சு நன்ருக வராது என்று நினைக்க இடமிருக்கிறது. முறைப்படி சரியாகப் பழக்கவில்லை என்ருல் அந்தக் குழந்தை பேசுவதே கடினமாகிவிடும். ஒரு குழந்தை பிறந்ததும் கத்தவில்லை என்ருல் உடனே பெற்ரோர்கள் அதைப் பற்றி மூளை வைத்தியர்களைக் கேட்கவேண்டும். பேசுவதற்கு ஒவ்வொரு குழந்தையும் தானே கற்றுக் கொள்ளவேண்டுமே தவிர, அது பரம்பரையாய் வருவதல்ல. பிறந்த உடனேயே அதற்குப் பாடம் ஆரம்ப மாகிவிடுகிறது. பிறந்து இரண்டு வாரத்துக்கெல்லாம் குழந்தை ஒரு விதமாகக் கத்தித் தன் பசியைத் தெரிவிக்கிறது. உடம்பில் ஏதாவது வேதனை இருந்தால், வேறு விதமாகக் கத்தி அதை நமக்குத் தெரியப்படுத்துகிறது. குரலை ஏற்றியும் இறக்கியும் வெவ்வேறு விதமாக அழுவதில் தான் பின்னல் கற்றுக்கொள்ளும் பேச்சின் அஸ்திவாரம் அமைகிறது. சின்னஞ் சிறு குழந்தை எவ்வளவு பலமாய், அழுத்தமாய்க் கத்துகிறது என்று எந்தத் தாய் தான் அதிசயிக்காமல் இருக்கிருள்! ஒன்றும் இயலாத சிசு இப்படிக் கத்தித் தாய்க்குத் தன் நிலைமையை எடுத்துக் கூறுகிறது. குழந்தையின் பேச்சு எப்படி இருக்கும் என்பதை அது எச்சில் துப்புவதிலிருந்தும், விதம் விதமான ஸ்வரத்தோடு கத்துவதிலிருந்தும் நிர்ணயிக்கலாம். கவனித்துப் பழக்கமுள்ளவர்களுக்கு, குழந்தை பிறந்த இரண்டாவது வாரத்திலேயே அதன் அழுகையில் காணப்படும் ஸ்வரத்தின் ஏற்றம், இறக்கம், அழுத்தம் முதலியவை விளங்கிவிடும்.

பேசக் கற்றுக்கொள்ளும் முயற்சியில் குழந்தையின் சக்தி பெரிதும் செலவாக வேண்டியிருப்பதால், அப்போதைக் கப்போது சிறிது காலம் அது ஓய்வு எடுத்துக் கொள்கிறது. அந்தக் காலங்களில் குழந்தை தான் கற்றுக்கொண்டதை ஜீர்ணித்துக் கொள்ளுகிறது. நான்காவது வாரத்தில் தோளில் சார்த்திக்கொண்டால், குழந்தை தலையைத் தூக்கும். குழந்தைக்குத் தன் உடம்பை அசைப்பதற்கு வேண்டிய ஸ்வாதீனம் உண்டாகிறது என்று இதிலிருந்து தாய் அறிந்து கொள்ளுகிருள். குழந்தைக்கு இது ஒரு முக்கியமான வளர்ச்சி. கழுத்து நரம்புகள் வசப்படுவதால் அது முன்னிலும் தெளிவாகக் கத்துகிறது.

சுற்றிலும் இருப்பவை கண்ணில் படத் தொடங்கிய சமயம்

குழந்தையின் கத்தல் வெறுங் கத்தலாக இல்லாமல், 'ஆ', 'காங்' போன்ற சத்தங்களும் கேட்கும். அவற்றைத் தாய் கவனித்துவிடுவாள். கொஞ்சநாளில் அது ஏதாவது உளறிக்கொண்டே அழும். வாய் சப்பும்போதும், ஏதாவது விழுங்கும்போதும் உண்டாகும் சத்தங்கள் குழந்தைக்கு வேடிக்கையாகத் தோன்றும்.

ஐந்தாவது வாரத்தில் அழுகை, சிரிப்பு இரண்டின் மூலமும் தன் உணர்ச்சிகளைக் குழந்தை வெளியிடும். ஆறுவது வாரத்தில் கண்ணில் பட்டதை உற்றுப் பார்க்கும் சக்தி அதற்கு அதிகமாகும். ஏழாவது வாரத்தில்தான் நாக்கு என்று ஒன்று இருப்பதை அது அறிந்துகொள்ளும். பேச்சு வருவதற்கு இது மிகவும் முக்கியம். இப்போது குழந்தை நாக்கை வெளியே நீட்டிச் சந்தோஷப்படும். இன்னும் சில வாரங்கள் சென்றதும், அது கொஞ்சங் கொஞ்சமாகத் தன் விருப்பத்தைத் தெரிவிக்கும் சக்தி பெறும். பத்து மாதம் ஆனவுடன் முதல் முதல் தெளிவாய் வார்த்தைகளைப் பெரும்பாலும் உச்சரிக்கத் தொடங்கும். ஒரு வயதில் நல்ல தேகாரோக்கியமுள்ள குழந்தைக்குச் சாதாரணமாய் ஒரு வார்த்தை வந்திருக்கும். சீக்கிரமாய்ப் பேச்சு வரும் குழந்தை ஒரு வயதில் மூன்று வார்த்தைகள் கூடப் பேசலாம்.

குழந்தைக்கு ஒன்றரை வயதாகும்போது முழு வாக்கியமாகக் கூடப்பேச அதற்குச் சக்தி உண்டாகும். ஆனால் வார்த்தைகளைச் சேர்த்து முழு வாக்கியமாகப் பேசினாலும், அது இலக்கண சுத்தமாக இராது. அநேகமாய், 'அம்மா, வா', 'அப்பா, போ' இவை போன்ற வார்த்தைகளுக்குமேல் அப்போது குழந்தைக்கு வராது. இரண்டு வயதாகும்போது, சுமார் எழுபது எழுபத்தைந்து வார்த்தைகளை அது கற்றுக்கொண்டுவிடும். ஆனால் பெரும்பாலும் இந்த வார்த்தைகள் நமக்கு விளங்காத விதமாகவே இருக்கும். குழந்தை என்ன என்னவோ பேசினாலும் பெரியவர்களுக்கு ஒன்றும் விளங்காமல் ஏதோ உளறல் போலத்தான் தோன்றும். இந்தக் காலத்தில் பேச்சைக் காட்டிலும் அதிக விஷயங்கள் அதன் அறிவுக்கு எட்டத் தொடங்கிவிடும்.

இரண்டரை வயதாகும்போது குழந்தைக்கு நானூறு நானூற்றைம்பது வார்த்தைகள் வரையிலும் வந்திருக்கும். ஆனால் அவற்றில் ஏதோ சில வார்த்தைதான் அதிகத் தெளிவு இல்லாமலிருக்கும். எதைப்பற்றிச் சொல்லவேண்டும் என்று தோன்றினாலும் குழந்தைக்கு இப்போது சொல்லத் திறமை ஏற்பட்டுவிடும். மூன்று வயதில் அதற்கு ஆயிரம் வார்த்தைகள் தெரிவதுடன், பேச்சும் மழலையாக இல்லாமல் திருத்தமாக இருக்கும்.

என்றாலும் குழந்தைக்கு அந்த வயதில் பெரும்பாலும் வார்த்தைகளை நன்றாய் உச்சரித்துப் பேசும் திறமை ஏற்படுவதில்லை. ஆனால், நாம் நினைப்பதைக் காட்டிலும் அதிகமாய் அதற்கு விஷயங்கள் புரியத் தொடங்கி, வீட்டில் நடப்பதையெல்லாம் தன் வயதுக்குத் தக்கபடி புரிந்து கொள்ளுகிறது.

மூன்று வயதில் குழந்தையின் மூளை பூர்ணமாய் வளர்ந்துவிடுகிறது. அதன்பின் புதிதாய் வளர்வதற்கு இடமில்லை. ஏற்கனவே தெரிந்துகொண்டதை அது

விருத்தி செய்துகொள்ள வேண்டியதுதான். பேசுவதற்குமேல் அதிக விஷயம் குழந்தைக்கு மனத்தில் புரிந்திருக்கிறது என்பதைப் புத்திசாலியான பெற்றோர்கள் தெரிந்து கொள்வார்கள். குழந்தை நன்ருய்ப் பேசவேண்டுமானுல், இந்தப் பருவத்தில் சூழ்நிலை அமைதியாகவும் சந்தோஷமாகவும் இருக்கவேண்டும்.

குழந்தையின் பேச்சு விஷயத்தில், பெற்றோர்கள் செய்ய வேண்டிய உதவி என்ன என்பதைக் கவனிப்போம். குழந்தையின் பேச்சுத் திருந்த எது நன்மை விளைக்கும், எது தீமை விளைக்கும் என்பதை அதன் கூடவே இருக்கும் தாய்தான் நன்கு அறிவாள். குழந்தையின் மழலை மொழியிலேயே அதனுடன் பேசினுல், அது குழந்தைக்குக் கெடுதலையே தரும். நாம் எந்த பாஷை பேசுகிறோமோ, எப்படிப் பேசுகிறோமோ, அப்படியேதான் குழந்தையும் பேசும். அது மழலையாகப் பேசுவதைச் சரியாகத் திருத்தா விட்டால், வயது வந்த பிறகும் கொச்சையாகவே பேசக் கூடும். ஆகவே, குழந்தையின் பாஷையிலேயே அதோடு பேச வேண்டும் என்று எவ்வளவு ஆவல் எழுந்தபோதிலும் அதை அடக்கிக் கொண்டு பெற்றோர்கள் அதனுடன் திருத்தமாய்ப் பேசவேண்டும்.

பேசுவதற்குப் பதிலாக ஜாடைகள் காட்டும் பழக்கம் சில குழந்தைகளுக்கு ஏற்படும். அந்தப் பழக்கத்தைப் பேசாமல் விட்டுவிட்டால் பேச்சைக் கற்றுக்கொள்ளும் முயற்சி குறையத் தொடங்கும். ஆனுல் செவிட்டுக் குழந்தைகளின் விஷயத்தில் இந்த முறை பொருந்தாது. அவைகளுக்கு ஜாடை செய்வது அவசியமாகிறது. ஆனுல் சாதாரணக் குழந்தை இந்தமாதிரி பேசுவதற்குப் பதில் ஜாடை செய்ய ஆரம்பித்தால், காதில் ஏதாவது கோளாறே, அல்லது பேச்சில் கோளாறே என்று சந்தேகித்து டாக்டரிடம் காட்டவேண்டும்.

பெரியவர்கள் பேசுவதைக் கேட்கக் கேட்கக் குழந்தைக்குப் பேச வேண்டும் என்று ஆவல் உண்டாகும். ஆகவே, பெற்றோர்கள் அதனுடன் அதிகமாய்ப் பேச வேண்டும்; பாடவேண்டும்; வேறு பலவிதமாயும் கவனிக்கவேண்டும். கத்திக் கத்தித் தானுகத் தூங்கட்டும் என்று விட்டுவிடுவது தவறு. ஒவ்வொரு குழந்தையையும் எவ்வளவு அன்போடும் ஆசையோடும் கவனிக்க முடியுமோ, அவ்வளவு அன்போடும் ஆசையோடும் கவனிக்க வேண்டியது அவசியம்.

சரியாகப் பேச வராத குழந்தைகளைப் பரீட்சித்துப் பார்த்ததில் சில விஷயங்கள் புலப்படுகின்றன. குழந்தைக்குத் தூக்கம் வரும் சமயத்தில் அதனுடன் பேசினுல், மூளை சீக்கிரமாகக் கிரகித்துக் கொள்ளுகிறது என்று தெரிகிறது. உடம்பு சோர்ந்து கண் மூடியிருந்தாலும், அரைத்தூக்க நிலையில் மூளையில் பேச்சு நரம்பு மூல ஸ்தானம்மட்டும் விழிப்புடன் இருக்கிறது. அது மற்றச் சமயங்களைவிட விரைவாகவே வேலையும் செய்கிறது. அப்போது குழந்தையுடன் பேசுவது மிகவும் பயனை அளிக்கும். தூங்கும்போது பேசும் குழந்தையின் பேச்சைக் கவனித்தால், அது விழித்துக்கொண் டிருக்கும்போது பேசுவதைக்காட்டிலும் சரியாகவும் தெளிவாகவும் இருப்பது தெரிய வரும்.

பெற்றோர்கள் செய்யும் பெரிய தவறு என்னவென்றால், குழந்தையை அவசரப்பட்டுப் பேச வைப்பதுதான். பெற்றோரோ உறவினரோ 'அம்மா', 'அப்பா', 'தாத்தா' என்றெல்லாம் சொல்லிக் கொடுப்பார்கள். குழந்தை அவைகளைச் சரியாய்ச் சொன்னால் நல்லது. அப்படிச் சொல்லவராத குழந்தையை எப்படியாவது சொல்லவைப்பது அதற்குத் தீங்கையே விளைவிக்கும். தன்னால் இயலவில்லை என்று தெரிந்தால், குழந்தைக்குப் பேசுவதில் உற்சாகம் குறைந்துவிடும். ஆகையால், குழந்தையின் இஷ்டப்படி பேச்சு வரும்போது வரட்டும் என்று விட்டுவிடுவதுதான் நல்லது. பேசவேண்டும் என்ற ஆசை இயற்கை. உரிய காலம் வரும்போது குழந்தை தானுகவே பேசத் தொடங்கும்.

ஒரு வயதாகும்போதுதான் அது பெரியவர்களைப் பார்த்துப் பேசக் கற்றுக்கொள்ளுகிறது என்று பலர் நினைக்கிறார்கள். மற்றவரைப் பார்த்து அந்தமாதிரியே தானும் செய்யும் திறமை இன்னும் முந்தியே அதற்கு உண்டாகிவிடுகிறது. மூன்று மாதத்திலேயே அது அநேகமாக 'உம்' 'உம்' என்று குரல் கொடுப்பதன் மூலம் தாயோடு விளையாடத் தெரிந்துகொண்டுவிடும். இந்த விளையாட்டைக் கொண்டே குழந்தைக்கு வேண்டியதைச் சொல்வதற்குத் தாய் கற்றுக் கொடுக்கலாம். மற்றவைகளைப் பார்த்துச் செய்யும் திறமை ஒவ்வொரு சமயந்தான் குழந்தையிடம் அதிகமாய் வெளியாகிறது. மல உபாதை தீர்ந்து குழந்தைக்கு நிம்மதியும் திருப்தியும் ஏற்படும்போது, அது நாம் எதைச் செய்தாலும் உடனே தானும் அந்தமாதிரி செய்யத் தொடங்கும். ஆகாரம் அருந்திய பிறகும் தூக்கம் வருவதற்கு முன்பும் குழந்தை இதே போல் செய்யும். குழந்தை எதனுலாவது உற்சாகம் குறைந்திருக்கும் போது, அதை நாம் விளையாடத் தூண்டலாகாது.

பேச நன்றுக வராத குழந்தையை ரேடியோ, கிராமபோன் முதலியவற்றைக் கேட்க வைப்பது நலம். ஆனால், அது பாட்டைக் கேட்டுப் பயந்தால், அப்போது ரேடியோ வைக்கக்கூடாது. பேசுவதில் குழந்தைக்கு உற்சாகமும் சந்தோஷமும் ஏற்படவேண்டும். இரண்டு முதல் நான்கு வயது வரைக்கும் உள்ள குழந்தை பேசும்போது பெரும்பாலும் தயங்கித் தயங்கிப் பேசும். அதற்குக் காரணம், பேசும் திறமைக்குமேல் அதிக விஷயம் குழந்தைகளுக்கு விளங்குவதுதான் என்று சில நிபுணர்கள் சொல்லுகிறார்கள். முதலில் தயங்கிப் பேசுவது முடிவில் திக்கலில் கொண்டுபோய் விடும் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். திக்கலைப் பெற்றோர்கள் திருத்த முயன்றால், அது மேலும் அதிகரித்துவிடும். ஆகவே அது திக்குவதைக் கவனிக்காமல் நாம் திருத்தமாக அதனுடன் பேசி, அதை அன்புடன் கவனித்து ஆதரிக்க வேண்டும். அநேகமாகத் திக்கல் இரண்டொரு மாதத்திலேயே மறைந்து விடும். அப்படி மறையாமல் அதிக நாள் நீடித்தால், அதைப்பற்றித் தெரிந்த நிபுணர்களிடம் காட்டி யோசனை கேட்கவேண்டும்.

பத்துப் பவுன் அபராதம் விதித்தார்களாம்.

குறட்டை தங்களுக்குத் தெரியாமல் வருவதால் அது தங்கள் குற்றமல்ல என்று குறட்டை விடுபவர் ஒவ்வொருவரும் எண்ணுவது சகஜம். இது உண்மைதான். அதை நிறுத்த, கைகண்ட மருந்து ஒன்றுமில்லை. ஆனால் வைத்தியர்கள் பலவிதமான பரிகாரம் சொல்லுவார்கள். அதில் மூன்று இவை:

1. தொண்டையிலும் மூக்கிலும் உள்ள அதிகப்படியான சதையை அறுத்தெடுப்பது, புகை குடிக்காமல் இருப்பது, தேகப் பயிற்சி செய்வது, கதவையும் ஜன்னலையும் திறந்து வைத்துக் கொண்டு படுப்பது - இவை நம் சொந்த யுக்தியால் செய்துகொள்பவை.

2. சில சாதனங்களை உபயோகித்துக் குறட்டையைத் தடுக்க முயல்வது. 'மல்லாந்து படுப்பதால் குறட்டை வருகிறது' என்ற தவறான எண்ணமே இதற்குக் காரணம்: ஒரு பக்கமாகவே படுத்திருக்கும்படி பலகைகளைக் கட்டி வைத்துக்கொள்வதால் குறட்டை ஒருவேளை தடைப்படலாம். சிலபேர் ஓர் இரும்புத்தகட்டில் மின்சார மணி ஒன்றைப் பொருத்தி வைக்கிறார்கள். தூக்கத்திலே மல்லாந்து படுக்கச் சாயும்போது படுக்கையில் இருக்கும் ஒரு சிறிய குச்சி அந்த இரும்புத் தகட்டில் படுகிறது. உடனே மணி அடிக்கிறது. மணியோசை கேட்டதும் குறட்டைக்காரர் விழித்துக் கொண்டுவிடுகிறார். ஒரே சமயத்தில் சேர்ந்தாற்போல் மூக்காலும் வாயாலும் மூச்சுவிடாமல் தடுக்கப் பலவித முயற்சி செய்வதுண்டு. ஆனால் அவை மிகவும் தொந்தரவாக இருக்கும்; ஆபத்தாகக்கூடப் போய் முடியும். ரோம் நகரில் ஒருவர் தம் மனைவியின் குறட்டையை நிறுத்த ஓர் உபாயம் செய்தார். ஒரு பித்தளைத் தகட்டை அவளுடைய அடிநாக்கில் வைத்து அங்கே உள்ள சதை அசையாமல் இருக்கும்படி செய்து தூங்கவைத்தார். அவர் கண்ணயர்ந்து மறுபடியும் விழித்துக்கொண்டபோது மனைவி சாகிற நிலையில் இருந்தாள். தகடு அவள் தொண்டைக்குள்ளே போய் விட்டது!

3. மந்திரதந்திரத்தால் குறட்டையை நிறுத்தப் பார்ப்பது மூன்றும் வகை.

"படுக்கப்போவதற்குமுன் கொஞ்சம் 'க்ளிஸரின்' உட்கொள்ள வேண்டும். ஒரு பாத்திரத்தில் சுடு தண்ணீரை வைத்து அதில் சர்க்கரைச் சத்தை விடவேண்டும். அதிலிருந்து வரும் ஆவியை உட்கொள்ளவேண்டும். இப்படி ஒரு நாளில் ஆகாரத்துக்குப் பிறகு இரண்டு தரமாவது செய்ய வேண்டும்" என்று லண்டனிலுள்ள ஓர் அம்மாள் சொல்லுகிறாள்.

ஆனால் இது கைகண்ட மருந்து என்று சொல்லிவிட முடியாது. ஏனென்றால், "இதோடு இன்னும் பல முறைகளையும் கையாண்டு வந்தேன். எதனால் குறட்டை நின்றது என்று தீர்மானமாகச் சொல்லமுடியவில்லை" என்று அந்த அம்மாளே பின்னால் சொல்லியிருக்கிறாள்.

நாணம் உள்ள பெண், ஆணைத் துரத்துவதில்லை; எலிப் பொறி, எலியைத் துரத்துவதில்லை.

—'எக்சேஞ்சு எக்ஸ்பிரஸ்'



பரமஹம்ஸர்



ஆத்ம சமர்ப்பணம்: ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் நோயுற்றுப் படுத்திருந்தார். அப்போது சசதர பண்டிதர் என்பவர் அவரைப் பார்க்க வந்தார். பரமஹம்ஸர் நோயினால் துன்புறுவதை அவரால் பொறுக்க முடியவில்லை. பக்தியும் ஞானமும் கைவந்த அந்தப் பெரியார் நினைத்தால் நோயைப் போக்கிக்கொள்ளலாமே என்ற எண்ணம் அவருக்கு. ஆகையால் பண்டிதர், பரமஹம்ஸரைப் பார்த்து, "தாங்கள் இந்த நோய் தீர வேண்டுமென்று தீவிரமாக நினைத்தால் அது போய்விடுமே! எங்கே நோய் இருக்கிறதோ, அந்தப் பாகத்தில் திருவுள்ளக் குறிப்பை காட்டினால் அடுத்த கணமே வியாதி இருந்த இடம் தெரியாமல் ஓடி விடும்" என்றார்.

அதைக் கேட்டுப் புன்னகை பூத்த ராமகிருஷ்ணர், "என் மனசை ஈசுவரனுக்கென்றே சமர்ப்பித்து விட்டேன். அது அவருக்கே உரியது. அப்படி இருக்க அந்த மனசை இந்தத் தோல்குடிசையைப் பற்றி நினைக்கும்படி எப்படித் தூண்ட முடியும்?" என்றார்.

உடனே பண்டிதர், "அப்படியானால் தேவியினிடம் இந்த வியாதியைத் தீர்க்கும்படியாகத் தாங்கள் பிரார்த்தனை செய்யலாமே!" என்று கேட்டார்.

பரமஹம்ஸர், "மகாமாதாவை நினைக்கும்போது இந்த ஸ்தூல சரீரத்தின் ஞாபகமே இருப்பதில்லை. உண்மையில் அம்பிகையின் நினைவிலே ஆழும்போது சரீரத்துக்கு அப்பாலல்லவா நிற்கிறேன்? அப்படியிருக்க உடம்பை நினைப்பதும், அம்பிகையிடம் பிரார்த்திப்பதும் எப்படிச் சாத்தியமாகும்?" என்றார். (வாழ்வு)

பேராசையின் விளைவு: ஒரு மரத்தில் யட்சன் ஒருவன் வாழ்ந்து வந்தான். பேராசை பிடித்தவர்களுக்கு

வாழ்வும் வாக்கும்

கடவுளை நேருக்கு நேரே கண்ட மகான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவர் வாழ்வு சத்திய ஜோதி; வாக்கு ஜீவ அமிர்தம்.

அறிவூட்டும் தந்திரம் ஒன்று, அவனுக்குத் தெரியும்.

அரண்மனை நாவிதன் ஒரு நாள் அந்தப் பக்கம் போய்க்கொண்டிருந்தான். அப்போது யட்சன், "ஏழு பானைத் தங்கம் வேண்டுமோ?" என்று கேட்டான். அந்த ஒலிமாத்திரம் காதில் பட்டதே ஒழிய நாவிதன் கண்ணுக்கு யட்சன் புலப்படவில்லை. ஆனாலும் அவனுக்கு இருந்த ஆசையினால், "வேண்டும்" என்று சொன்னான். "உன் வீட்டுக்குப் போ. அங்கே ஏழு பானைத் தங்கம் இருக்கும்" என்ற ஒலி கேட்டது.

உடனே வெகு வேகமாக நாவிதன் தன் வீட்டுக்குப் போனான். என்ன ஆச்சரியம்! பெரிய பானைகள் ஏழு அங்கே இருந்தன. மூடிகளைத் திறந்து பார்த்தான். ஒவ்வொன்றிலும் நிறையத் தங்கம் இருந்தது. ஆனால் ஏழாவது பானையில் மாத்திரம் நிறைய இல்லாமல் சற்றுக் குறைவாக இருந்தது. அப்போது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. "இந்தப் பானையை நம்முடைய சம்பாத்தியத்தால் நிரப்பிவிட வேண்டும்" என்று தீர்மானித்தான். உடனே தன்னிடம் இருந்த ஆபரணங்களையும், தட்டுமுட்டுச் சாமான்களையும் விற்றுத் தங்கமாக்கி ஏழாவது பானையில் போட்டான். அது நிரம்பவில்லை. தான் ஏவல் செய்யும் அரசனிடம் சென்று தனக்குச் சம்பளம் போதவில்லை என்று முறையிட்டான். அரசன் சம்பளத்தை இரட்டிப்பாக்கிச் சில மாதச் சம்பளத்தை முன்னாடியே கொடுத்தான். அதையும் தங்கமாக்கிப் பானையில் போட்டான். அப்போதும் அது நிரம்பவில்லை. "வேறே என்ன செய்வது?" என்று யோசித்துக் கடைசியில் ஒழிந்த நேரங்களில் யாசகம் செய்வதென்று முடிவு செய்

தான். அதனுல் வந்த பணத்தையும் பானையில் போட்டான். அது நிரம்பியபாடில்லை. ஏழாவது பானையை நிரப்பவேண்டும் என்ற கவலை அவனுக்கு அதிகமாகவே முகம் வாட்டமுற்றது; உடம்பில் வளப்பம் இல்லாமற் போயிற்று. வரவர அவன் இளைத்துவருவதைப் பார்த்த அரசன் ஒரு நாள், "என்ன அப்பா, நீ வரவர இளைத்து வருகிருய்? இப்போது வாங்குவதில் பாதிச் சம்பளம் வாங்கி வந்த போது நீ சந்தோஷமாக இருந்தாய். இப்போது இரட்டிப்புச் சம்பளம் வாங்கியும் முகம் வாடி உடம்பு வாடியிருக்கிருயே. ஏழு பானைத் தங்கம் உனக்குக் கிடைத்திருக்கிறதோ?" என்ருன். நாவிதனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. "அந்த விஷயம் மகாராஜாவுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான்.

"அந்த யட்சன் என்னையும் தங்கம் வேண்டுமோ என்று கேட்டான். நான் செலவழிக்கக்கூடிய தங்கமா, புதைத்து வைக்கவேண்டிய தங்கமா என்று கேட்டேன். அவன் ஓடிவிட்டான். அதில் ஒரு துணுக்கைக் கூட நாம் உபயோகிக்க முடியாது என்பது எனக்குத் தெரியும்" என்று அரசன் தன் அநுபவத்தைச் சொன்னுன்.

நாவிதன் நேரே யட்சன் இருக்கும் மரத்துக்குப் போனுன். "'தங்கப்பானைகள் எனக்கு வேண்டாம்' என்று சொல்லிவிட்டு வந்தான். வீட்டுக்கு வந்து பார்த்த போது ஏழு பானைகளும் மறைந்து போயிருந்தன. அவன் விழுந்து விழுந்து சம்பாதித்த பொருள் அத்தனையும் அந்த ஏழாவது பானையோடு போய்விட்டது. எல்லா வரவும் வரவல்ல. தர்மமான வரவே நமக்குப் பயன்படும். (வாக்கு)

அற்ப சந்தோஷம்: ஒருவன் பதினுன்கு வருஷங்களாக ஒரு பெரிய காட்டில் தனியே வாழ்ந்து தவம் புரிந்தான். அதன் பயனுக நீரின் மேல் நடக்கும் சக்தியைப் பெற்ருன். அதனுல் அவனுக்கு மட்டற்ற சந்தோஷம் வந்துவிட்டது. தன்னுடைய தவம் பெரிய பயனைத் தந்துவிட்டதென்று எண்ணிப் பெருமிதம் அடைந்தான். இந்த விஷயத்தைத் தன் குருநாதரிடம் தெரிவிக்கவேண்டுமென்று போனுன். போய்ச் சொன்ன போது, "அடடா! இந்தப் பதினுன்கு வருஷகாலமாக நீ செய்த தவம் ஒரு தம்பிடி விலை உள்ளது தானு?" என்று குரு கேட்டார். சிஷ்யன், "அதென்ன, ஸ்வாமி, அப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று ஆச்சரியத்தோடு வினவினுன். "நீ இவ்வளவு தவம் செய்து சாதிக்கும் காரியத்தைச் சாமானிய ஜனங்கள் ஓடக்காரனுக்கு ஒரு தம்பிடி கொடுத்துச் செய்துவிடுகிருர்களே! இதற்குத் தானு நீ பிரமாதப்படுத்துகிருய்?" என்ருர்.

சித்திகளால் உண்மையான ஆத்ம சுகம் கிடைக்காது; அகங்காரம் உண்டாகும். (வாக்கு)

வாழ்க்கையின் பற்பல படிகளில் நமக்கு வழிகாட்டிச் செல்வது கல்வி. ஆனுல் அபாயமும் சோதனையும் நேரும் போது அது அடியோடு பயனற்றுப் போகிறது. அப்போது தெய்வ நம்பிக்கைதான் நம்மை ரட்சிக்கும்.

—மகாத்மா காந்தி

சபரி குலத்தார்

கே. வி. ராவ்

> தான் கடித்துச் சுவைத்த பழத்தை ராமனுக்கு உணவாக விருந்தளித்தாள் சபரி. அவள் குலத்தவரான கோண்டு, சபரஜாதியார் இன்றும் தங்கள் தெய்வத்துக்கு எருமைக் கடா பலியிடுகிறார்கள்! அவர்களைப் பற்றிய ரஸமான விவரங்களை இங்கே எழுதுபவர் பாலாஸோர் காலேஜில் ஒரு புரொபஸர்.

ஒரிஸ்ஸா மாகாணத்தின் தெற்குப் பகுதியில் பூர்விகக் குடிகள்தான் அதிகமாக வசிக்கிறார்கள். இந்தப் பிரதேசம் 20,000 சதுர மைல் கொண்டது; அந்த மாகாணத்திலே மூன்றில் இரண்டு பாகம் அடங்கியது. இவர்களில் பல பிரிவுகள் உண்டு; ஆனாலும் சபரர்களும் கோண்டுகளுந்தான் முக்கியமானவர்.

ராமாயண காலத்திலேயே சபரர்கள் என்றால் பிரசித்தம். தான் ருசி பார்த்த கனியை ராமனுக்குக் கொடுத்தவள் ஒரு சபரிதானே? சபரர்கள் கோண்டு ஜாதியாரை விடச் சற்று நாகரிகமானவர்கள். கோண்டு ஜாதியார் முரட்டுச் சுபாவம் உள்ளவர்கள்; நூறு வருஷத்துக்கு முன்னால்கூட இவர்கள் தங்கள் தெய்வத்துக்கு நரபலி கொடுத்து வந்தார்கள். சிறு வயதிலிருந்து இதற்கென்றே சில குழந்தைகளை இவர்கள் வளர்ப்பார்களாம். இந்தக் கொடிய வழக்கத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கம் மிகவும் சிரமப்பட்டுத்தான் நிறுத்த வேண்டியிருந்தது. இப்போது இதற்குப் பதிலாக எருமைக் கடாவைப் பலியிடுகிறார்கள். ஆனாலும் பூசாரி மந்திரம் சொல்லும்போது, "தாயே! நரபலி கொடுக்க முடியவில்லை; தயை செய்து இதை ஏற்று அருள் புரியவேண்டும்" என்று வேண்டிக்கொண்டுதான் எருமையைப் பலி இடுகிறான்.

இதுகூடப் பார்ப்பதற்கு மகா கோரமாகத்தான் இருக்கும். எருமைக் கடாவை ஒரு கம்பத்தில் கட்டிவிடுவார்கள். ஒவ்வொரு குடும்பத்தின் தலைவனும் அதன் உடம்பிலிருந்து ஒரு துண்டு மாமிசம் வெட்டி எடுத்துக்கொள்ளவேண்டும். எருமை சோர்ந்துபோய்க் கீழே விழுவதற்குள் எல்லாரும் இப்படிச் செய்தாக வேண்டும்; அப்புறம் எடுத்தால் அது தெய்வத்துக்கு ஏற்காதாம்! பிறகு, சூரியன் அஸ்தமிப்பதற்குள் அந்தத் துண்டுகளை எடுத்துக்கொண்டு வெகு தூரத்திலுள்ள தங்கள் வயல்களுக்கு ஓட

மூலம்: ரிபப்ளிக் (ஆங்கிலம்: 31-7-'49), சென்னை.

வேண்டும். நடுவே மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் தாண்டியாகவேண்டும். நேரம் ஆகிவிடப் போகிறதே என்று பின்னால் பெண் பிள்ளைகள் கல்லடித்து விரட்டிக் கொண்டே வர, ஆண் பிள்ளைகள் தலை தெறிக்க ஓடுவார்கள். அந்த மாமிசத் துண்டை வயலில் கொண்டு போய் ஒழுங்காகப் போட்டு விட்டால், அது நல்ல எருவாகி, அந்த வருஷம் விளைச்சல் ஏராளமாக இருக்குமாம்.

இவர்கள் பெரும்பாலும் இயற்கையைத்தான் வழிபடுகிறார்கள். ஏவல், சூன்யம் இவைகளில் இவர்களுக்கு அதிக நம்பிக்கை. சில வருஷங்களுக்கு முன் அந்தப் பக்கத்தில் உத்தியோகம் பார்த்து வந்தேன். ஒரு சமயம் அங்கே ஒரு கிராமத்துக்கு நானும் சில பேரும் புறப்பட்டுப் போனோம். அந்த வருஷம் மழையே பெய்யவில்லை. அன்று மப்பும் மந்தாரமுமாக இருந்தது. இப்படி இருப்பது சகஜம்; ஆனாலும், சீக்கிரமே அது கலைந்துவிடும். "இனிமேல் மழை எங்கே பெய்யப் போகிறது!' என்று எல்லாரும் பேசிக்கொண்டார்கள். நாங்கள் திரும்பி வருகிற வழியில் மலைவாசிகளெல்லாம் சேர்ந்துகொண்டு வருணபகவானுக்கு ஏதோ பூசை போட்டுக்கொண்டிருந்தார்கள். மலைச்சாரலில் பல இடங்களில் தீ மூட்டினார்கள்! அதோடு பூசை முடிந்தது. ஊர் வந்து சேரும்போது இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் மழை கொட்டு கொட்டென்று கொட்ட ஆரம்பித்தது! இந்தப் பக்கத்தில் இன்னும் ஓர் அதிசய வழக்கம்: மழை பெய்யாவிட்டால் ஒரு தவளையைப் பல்லக்கில் வைத்து ஊர்வலம் வருகிறார்கள்.

நம்மைப்போல் சமவெளிகளில் வசிப்பவர்களை இவர்கள் கொஞ்சத்தில் நம்புவதில்லை. ஆனால் நெருங்கிப் பழகிவிட்டால் நம்மை அன்போடு உபசரிப்பார்கள். உடசாப்பிட அழைப்பார்கள்; கொம்புத் தேன் கொண்டு வந்து கொடுப்பார்கள். இவர்கள் காட்டிலிருந்து விறகு வெட்டி வந்து கிராமங்களில் விற்பது வழக்கம். ஒரு வைக்கோல் துண்டை ஒடித்துப் போட்டோ, விறகுக் கட்டைத் தொட்டோ, "இவ்வளவு தொகை கொடுக்கிறேன்" என்று ஆணையிட்டால் போதும்; நம்பிவிடுவார்கள். எவ்வளவு தூரமாக இருந்தாலும் நம் வீட்டைத் தேடி விறகுக் கட்டைக் கொண்டு வந்து போடுவார்கள். ஆனால் எல்லாருமே சொன்னபடி கொடுக்கிறார்களா? அதனால்தான் இவர்களுக்கு நம் மேல் அவநம்பிக்கை.

இவர்கள் பழக்க வழக்கமே தனி. இவர்களில் பல உட்பிரிவுகள் உண்டு. ஒவ்வொன்றுக்கும் ஒரு தலைவன்; அததற்குத் தனித்தனிக் கட்டுத் திட்டங்கள். பொதுவாக இவர்கள் எல்லாருமே ஏழைகள். அரை வயிற்றுக்குத்தான் சாப்பிடுவார்கள். இருந்தாலும் கட்டு மஸ்தாக இருப்பார்கள். ஆனால் இங்கே மலேரியா ஜுரம் விசேஷம். இதைத் தவிர 'யாஸ்' என்ற ஒரு விதமான பயங்கர நோயும் இங்கே உண்டு. அதனால் கட்டுமஸ்தாக இருந்தாலும் இவர்கள் ஆரோக்கியமாக இருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. தெய்வத்துக்குக் கோபம்; அதனால்தான் நோய் நொடி வருகிறது என்று இவர்கள் நம்புகிறார்கள். சில மூலிகைகளின் குண விசேஷம் இவர்களுக்குத் தெரியும். நம் வைத்திய ரீதியில்

இவர்களுக்கு நம்பிக்கை இல்லை. அரசாங்கத்திடம் மட்டும் இவர்களுக்கு அதிக மரியாதையும் பய பக்தியும் உண்டு.

ஒரு சமயம் இங்கே காலரா மும்முரமாக இருந்தது. ஜனங்கள் ஏராளமாக மடிந்துகொண்டிருந்தார்கள். உள்ளூரில் ஒரு டாக்டர் இருந்தார். இவர் கிறிஸ்துவ மதப் பிரசாரமும் செய்வது வழக்கம். ஊருக்கு எட்டு மைல் தூரத்தில் தபால் ஆபீஸ். அங்கே இவர் பேருக்குக் காலரா மருந்துப் பார்ஸல் ஒன்று வந்திருந்தது. இவருடைய ஆள் கோண்டு ஜாதியான். சும்மா 'மருந்து' என்றால் அவன் நம்பமாட்டான். அதனால், "காலராவைக் கொல்லும் அம்மன் வந்திருக்கிறாள், பார்ஸலில். போய் வாங்கி வா" என்று சொல்லி அவனை அங்கே அனுப்பினார். போனவன் திரும்பி வரவில்லை. மறுநாள் காலை தாமே புறப்பட்டுத் தபால் ஆபீஸுக்குப் போனார். வழியில் ஒரு மரத்தடியில் நாலைந்து கோண்டுகள் சேர்ந்து குடித்து விட்டு, ஏதோ ஒரு வஸ்துவைச் சுற்றிச் சுற்றி வந்து ஆடிப்பாடித் தொழுதுகொண்டிருந்தார்கள். நெருங்கிப் போய்ப் பார்த்தால் இவருடைய மருந்துப் பார்ஸல்தான் அது! - அம்மனுயிற்றே; அதனால் தான் இப்படி 'அவளை' உபசரித்து ஊருக்கு அழைத்து வந்தார்கள்!

ஸர் டி. விஜயராகவாசாரியார் கஞ்சம் கலெக்டராக இருந்த போது இவர்கள் வசிக்கும் ஒரு கிராமத்தில் ஒரு விசேஷம் நடந்ததாம். ஒரு வாலிபனும் இளம் பெண்ணும் தங்கள் காதல் கைகூடாமல் போகவே தற்கொலை செய்துகொண்டார்கள். இவர்களின் பேய்கள் மாலை நேரத்தில் ஊரில் உலாவுவதாக ஒரு வதந்தி பரவிற்று. உடனே அங்கே இருந்தவர்களெல்லாம் திகிலடைந்து ஊரை விட்டு ஓடிவிட்டார்கள். கலெக்டர் எவ்வளவு சொல்லியும் அவர்கள், "திரும்பிப் போகவே மாட்டோம்" என்று ஒரே பிடிவாதமாக இருந்தார்கள். கடைசியில் அவருக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. இ. பீ. கோ. 144-ஆம் பிரிவுப்படி அந்தப் பேய்களை ஊரைவிட்டு விரட்டிவிட்டதாகத் தண்டோரா போடச் சொன்னார். அப்புறந்தான் ஊரார் திரும்பி வந்தார்களாம். பேயைக்கூட ஓட்டக்கூடிய அபூர்வ மந்திர சக்தி அரசாங்கத்துக்கு உண்டு என்று இவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை!

ஆனால் இதெல்லாம் அந்தக் காலத்துச் சமாசாரம். இப்போது இவர்கள் எவ்வளவோ விஷயம் தெரிந்துகொண்டு விட்டார்கள். தங்களுக்கு வேண்டிய அளவு சோளம், கேழ்வரகு முதலிய தானியங்களைப் பயிரிட்டுக்கொள்வார்கள். மஞ்சள், பருப்பு வகை, புளி இவைகளைக் கொண்டுபோய் வெளியூர்களில் விற்பார்கள். ஆடு, மாடு பன்றிகளை இவர்கள் வளர்ப்பது வழக்கம். இருப்பதைக்கொண்டு திருப்தி அடையும் சுபாவம் உள்ளவர்கள். கண்ணாடி, கத்தி இந்த மாதிரி சில்லறைச் சாமான்களை எடுத்துக்கொண்டு அடிக்கடி வியாபாரிகள் இங்கே வருவார்கள். கோண்டுப் பெண்களும் குழந்தைகளும் அந்தச் சாமான்களைப் பார்த்து 'ஆ' என்று வாயைப் பிளப்பார்கள். இவர்கள் கையில் பணம் இல்லையே, என்ன செய்வது? உடனே தாங்களே கடன் கொடுப்பதாகச் சொல்லி, வந்த வியாபாரிகள் கொடுப்

பார்கள். ஒரு தடவை இப்படி மாட்டிக்கொண்டால் ஆயுள் முழு தும் அந்தக் கோண்டுக் குடும்பத் தார் உடலே ஓடாக உழைத்து அவதிப்பட வேண்டியதுதான். இந்த மாதிரி திண்டாடும் ஒருவனை நான் பணங்கொடுத்து மீட்கப் போனேன். ஆனால் அவன் என்னை நம்பினால்தானே? வேண்டவே வேண்டாம் என்று மறுத்துவிட் டான்.

வரவர இவர்களுக்கும் நாகரிகம் தெரிந்துவிட்டது. முன்னெல்லாம் ஒன்றுமே உடுத்தாதிருந்த கோண் டுப் பெண்கள் இப்போது இடுப்பில் துணி கட்டிக்கொள்கிறார்கள்; சிலர் மேலாடைகூடப் போட்டுக்கொள் கிறார்கள். இவர்கள் முகத்தில் பச்சை குத்திக் கோரமாக்கிக் கொள்வார்கள். ஆனால் இப்போது கொஞ்சங் கொஞ்சமாக அந்த வழக் கம் மறைந்துகொண்டு வருகிறது. அழகிகள் என்று சொல்ல முடியா விட்டாலும் கள்ளங்கவடு இல்லா மல் நன்றாக வளர்ந்திருக்கிறார்கள். தங்களுக்கும் அரசியலில் பங்கெடுத் துக்கொள்ள உரிமை உண்டு என்று இந்த மலை ஜாதியாருக்கு இப்போது தான் தெரிந்து வருகிறது. இவர் களை முன்னுக்குக் கொண்டுவர ஒரிஸ்ஸா அரசாங்கம் முடிந்த வரையில் பாடுபட்டு வருகிறது. ஒரிஸ்ஸா பிரதமர் ஹரேகிருஷ்ண மேஹ்தாபுக்கு இவர்களிடம் மிகுந்த அன்பு. ஹரிஜன சேவாசங்க ஊழிய ரான டக்கர் பாபா இவர்களுக் காகப் பல விதங்களில் உழைத்த வர். இந்தத் தள்ளாத வயதிலும் அரசாங்கத்தாரின் வேண்டுகோளின் படி இவர்கள் விஷயத்தில் மறுபடி யும் அக்கறை செலுத்தி வருகிறார். இவர்களை முன்னுக்குக் கொண்டுவர அரசாங்கத்தாருக்குச் சில அருமை யான யோசனைகளும் சொல்லி யிருக்கிறார்.

புதிய அரசியல் திட்டத்தின்படி வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை உண்டு. இந்த மலை ஜாதியாருக்குச் சில விசேஷப் பாது காப்புகளும் அளிக்கப்போகிறார்கள். அரசியல் துறையில் இவர்கள் கை ஓங்கியிருக்கும் என்பது நிச்சயம். சமீ பத்தில் சுயநலமிகள் சிலர் புகுந்து இவர்கள் மனத்தைக் கண்டபடி குழப்பி வந்தார்கள். அதனால் ஒரிஸ்ஸா அரசாங்கம், "எந்த வித மான அரசியல் கட்சியும்- காங்கிரஸ் கூட - இவர்களிடையே - பிரசாரம் செய்யக் கூடாது" என்று தடை உத்தரவு போட்டிருக்கிறது.

அதிக உணவு, அதிக மக்கள்

இரண்டாவது உலக யுத்தம் எத்தனையோ நாசம் செய்து விட்டது. அப்படியிருந்தும், 1939-ஆம் வருஷத்தை விட இன்று உலக ஜனத்தொகையில் 15 கோடி மக்கள் அதிகரித் திருக்கிறார்கள் இத்தனைக்கும் உலகத்தில் பல நாடுகளில் உணவும் ஆரோக்கியமும் குறைவு. ஆனால், அவைகள் சீர் திருந்தினால், ஜனத்தொகை இன்னும் அதிகமாக ஏறும் என்கி றார்கள் விஞ்ஞானிகள்.

—டேவிட் டீட்ஸ்

கடல் கொள்ளைக்காரர்

★

சீனக் கடற்கரையோரத்தில் இன்றும் ஒரு கடல் கொள்ளைக்காரி இருக்கிறாள். சீனா, பிரிட்டன், போர்த்துக்கல் இந்த மூன்று நாட்டுச் சர்க்கார்களும் இவளைப் பிடிக்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்றன. இந்தமாதிரி கப்பல் கொள்ளைக்காரர்கள் பல காலத்திலும் இருந்திருக்கிறார்கள்.

கடல்கொள்ளை என்பது இன்று நேற்று விஷயம் அல்ல; வெகுகாலமாக இருந்து வருகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு முன் ரோம சாம்ராஜ்யம் ஓங்கியிருந்த காலத்திலே மத்தியதரைக் கடலோரத்தில் கடல் கொள்ளைக்காரர்கள் அட்டகாசம் செய்துவந்தார்கள். கிரேக்க, ரோம இதிகாசங்களில் கூட இவர்களைப்பற்றிய பிரஸ்தாபம் வருகிறது. கொள்ளையடித்த பிறகு கையில் சிக்கிய பிரயாணிகளை இவர்கள் ரோம் முதலிய ஊர்களில் அடிமைகளாக விற்பார்களாம். அந்த அடிமைகளைப் பணக்காரர் வாங்கி மல் யுத்தத்தில் பழக்கி வேடிக்கை பார்ப்பது வழக்கம். அந்தக் காலத்தில் பெரும்பாலும் பெனீஷியர்தான் இந்தக் கொள்ளைத் தொழிலை நடத்தி வந்தார்கள். நம் நாட்டுப் பழைய இலக்கியங்களிலும் இப்படிச் சில வரலாறுகளைக் காணலாம். வங்காளத்தில் தாமிரலிப்தியிலும், கலிங்கத்தில் விசாகபட்டணத்திலும், தமிழ்நாட்டில் காந்தளூர் முதலிய மேல் கடற்கரைப்பிரதேசங்களிலும் கடல்கொள்ளைக்காரர் இப்படி அட்டூழியம் செய்து வந்தார்கள். செங்குட்டுவன் என்ற சேர அரசனும் ராஜராஜன் முதலிய சோழ அரசர்களும் இவர்களை அடக்கி விட்டார்கள். அதற்கு முன் இவர்களிடம் சிக்கிப் பொருளையும் உயிரையும் இழந்த வியாபாரிகளுக்குக் கணக்கே இல்லை.

பிற்காலத்தில் சூரத், காம்பே, புரோச், ஏடன், பாரசிக வளைகுடா, அந்தமான், நிகோபர், லட்சத்தீவு,

ஆதாரம்:

1. 'ப்ரபாஸீ,' கல்கத்தா.
2. 'நியூஸ் ரெவ்யூ', லண்டன்.

மாலத்தீவு இங்கெல்லாம் கடல் கொள்ளைக்காரர்கள் மறுபடியும் தலையெடுத்தார்கள். இவர்கள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக மெக்கா செல்லும் யாத்திரிகர்களை வழி மறித்து, குழந்தை குட்டி, பெண் என்றுகூடப் பாராமல் கொல்லுவார்களாம். இல்லாவிட்டால் அலெக்ஸாண்டிரியா, தமாஸ்கஸ், தேல்ஸ், ஜெனோவா முதலிய ஊர்ச் சந்தைகளிலே ஏலம் விடுவார்களாம். இதனால் பாரசிகம், எகிப்து, ஐரோப்பா இங்கெல்லாம் நம் நாட்டு அடிமைகளுக்குக் கிராக்கி ஏற்பட்டது. சூடான், அரபு நாட்டு வியாபாரிகள் இதையே தொழிலாகக் கொண்டு லட்சக்கணக்கில் பொருள் சம்பாதித்தார்கள்.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பாவில் 'வைக்கிங்' என்ற ஒருவகைக் கொள்ளைக்கார ஜாதியார் தோன்றினார்கள். இவர்கள் பிரிட்டிஷ் தீவுகள், பிரான்ஸ், ஹாலந்து, ஜெர்மனி, மத்தியதரைக் கடலோரம் இங்கெல்லாம் நடத்திய அட்டூழியம் கொஞ்சம் நஞ்சமல்ல. இவர்கள் கப்பலில் கூட்டமாக வந்து ஊர்களில் நுழைந்து சூறையாடிவிட்டு, வந்த சுவடு தெரியாமல் விரைவில் போய்விடுவார்களாம். ஆல்பிரட் என்ற ஆங்கில அரசன் இவர்களை இங்கிலாந்திலிருந்து விரட்டினான்.

16-ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பாகம்வரை வட ஆப்பிரிகக் கடலோரம் 'பார்பரி' என்ற மூர்ஜாதிக் கடல்கொள்ளைக்காரர்கள் வியாபாரிகளுக்குத் தொல்லை கொடுத்து வந்தார்கள். பிரெஞ்சு மகாவீரனை நெப்போலியன் தன்னால் ஆன மட்டும் இவர்களை அடக்கப் பார்த்தும் முடியவில்லை. கடைசியாக 1830-இல் பிரெஞ்சுக் கடற்படை வட ஆப்பிரிகாவைப் பிடித்துக்கொண்டதும் இவர்கள் தொல்லை ஒழிந்தது. ஆல்ஜியர்ஸ், துனீஸியா என்ற தேசங்கள் அப்போது பெயரளவுக்குத்தான் துருக்கி சுல்தானின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. அங்கே இருந்த அநேகம் பேர் வெளிப்படையாகவே இந்தத் தொழிலில் ஈடுபட்டு வந்தார்கள்.

17-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலகத்தில் பல புதிய நாடுகள் தோன்றின. அதோடு கப்பல் போக்குவரத்தும், வியாபாரமும் அதிகரித்தன. நாகரிகமுள்ள தேசங்களெல்லாம் ஏற்கனவே இந்தக் கொடுந் தொழிலை உள்ளூற வெறுத்து வந்தன. அவை ஒன்று சேர்ந்து இதைச் சர்வதேசக்குற்றங்களில் ஒன்றாகத் தீர்மானித்தன. உடனே ஐஸ்லாந்து, ஜெட்லாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாந்து, ஸ்காண்டினேவியா முதலிய இடங்களில் கொள்ளைக்காரர் பதுங்கியிருந்த இடங்களை அந்த அந்த அரசாங்கத்தார் முற்றுகையிட்டு இவர்களை விரட்டியடித்தார்கள். கொள்ளைக்காரர் நியூ இங்கிலாந்து, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, மடகாஸ்கர், அட்லாண்டிக் பஸிபிக் தீவுகள், கிழக்கிந்திய மேற்கிந்தியத் தீவுகள் இங்கெல்லாம் ஓடிப்போய் ஒளிந்துகொண்டார்கள். அதுமுதல் இங்கே வரும் வியாபாரக் கப்பல்களைக் கொள்ளையடித்துப் பிழைத்து வந்தார்கள். முதலில் ஸ்பானியரும் பிறகு ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் டச்சுக்காரரும் இந்தத் தொழிலில் கலந்துகொண்டார்கள்.

இந்தச் சமயத்தில்தான் போர்த்துக்கீசியரும் தலையெடுத்து அடிமை வியாபாரத்தில் இறங்கினார்கள். வாஸ்கோ-ட-காமா என்பவன்தான்

இந்த விஷயத்தில் எல்லாருக்கும் வழிகாட்டினான். இந்தியப் பெண்களையும் குழந்தைகளையும் தன் மாலுமிகள் வெட்டிக் கொல்லும்போது இவன் அந்தக் காட்சியைப் பார்த்துச் சந்தோஷப்படுவானாம்! இதே மாதிரி அவெரி என்று ஓர் ஆங்கிலேயனும் இருந்தான். ஒரு சமயம் முகல் ராஜகுமாரி ஒருத்தியும் அவள் தோழிகளும் ஜெத்தா என்ற இடத்துக்குக் கப்பலில் புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள். அவெரி அந்தக் கப்பலைக் கொள்ளையடித்து அவர்களை வெளிநாட்டுச் சந்தையில் பகிரங்கமாக ஏலத்தில் விட்டான்! இவன் பெயரைக் கேட்டாலே அந்தக் காலத்தில் எல்லாரும் நடுங்குவார்களாம். ஆனால் கடைசிநாளில் இவன் ஓட்டாண்டியானான். பின்னால் இவனுடைய சரித்திரத்தைச் சார்லஸ் ஜான்ஸன் என்ற ஆங்கில ஆசிரியர் நாடக ரூபமாக எழுதினார். அதை லண்டனில் உள்ள ட்ரூரி லேன் தியேட்டரில் அந்தக் காலத்தில் நடித்தார்களாம்.

ஒரு தரம் இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் சொந்த நாட்டில் தலை காட்ட முடியாது. மற்ற நாடுகளுக்குப் போனாலும் தண்டனைக்குள்ளாக நேரும். அதனால் இவர்கள் வாழ்க்கை முழுதும் இந்தத் தொழிலையே நடத்த ஆரம்பித்தார்கள். அந்தக் காலத்தில், பல நாடுகளில் யுத்தத்தின்போது சைனியத்தில் சேர்ந்து திரும்பியவர்கள் மறுபடியும் வேறு தொழில் செய்ய விரும்புவதில்லை. உற்சாக மிகுதியினால் அவர்களும் கொள்ளைக்காரர்களானார்கள். அதோடு வியாபாரிகள் சிலர் கடற்கொள்ளைக்காரரிடம் சிக்கி வேறு வழியின்றி இவர்களோடு கலந்துகொண்டார்கள்.

இங்கிலாந்தை ஆண்ட முதல் சார்லஸ் மன்னன் காலத்தில் இவர்களையெல்லாம் வழிக்குக் கொண்டுவர ஒரு சட்டம் இயற்றினார்கள். அதன்படி தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டால் இவர்களை அரசன் மன்னித்து விடுவான். முதலில் அநேகம்பேர் இப்படி ஒப்புக்கொண்டு மன்னிப்புப் பெற்றார்கள். ஆனால் கையிலிருந்த பொருள் செலவழிந்ததும் மறுபடியும் அதே தொழிலில் நாட்டம் செலுத்த ஆரம்பித்தார்கள். அதனால் முதல் ஜார்ஜ் காலத்துக்குப் பின் இந்தச் சட்டம் ரத்தாகிவிட்டது.

கிழக்கு வங்காளத்தில் போர்த்துக்கீசியக் கடல்கொள்ளைக்காரர் நடத்திய அட்டூழியத்தை அங்கே வழங்கும் நாடோடிப் பாடல்களில் இன்றும் காணலாம். அநேக வங்க வாலிபர்களையும் இளம் பெண்களையும் இவர்கள் தூக்கிக்கொண்டுபோய் ஐரோப்பாவில் விற்றார்கள். சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்த மதாம் து பாரி என்ற பிரபல வேசிகாரியிடம் இப்படி ஒரு வங்காளி அடிமை இருந்தான். அவன் பெயர் ஜெரோம். பிரெஞ்சுப் புரட்சியின் போது அவன் காட்டிய வீரம் சரித்திரப் பிரசித்தமானது.

19-ஆம் நூற்றாண்டின் இடையில் இங்கிலாந்தும் அமெரிக்காவும் சேர்ந்து தங்கள் கடற்படையின் உதவியால் அட்லாண்டிக் மகாசமுத்திரத்திலுள்ள கொள்ளைக்காரர்களை அடியோடு ஒழித்தன. ஆனால் சீனக் கடற்கரையோரத்திலும் பசிபிக் மகாசமுத்திரத்திலும் சமீபகாலம் வரையில் கடல் கொள்ளைக்காரர் தங்குதடையில்லாமல் தங்கள் தொழிலை நடத்தி வந்தார்கள். இரண்டாம் மகாயுத்தத்துக்குச் சற்று முன்னே அங்கே உள்ள

அரசாங்கங்களெல்லாம் சேர்ந்து இவர்களை அடக்க முயற்சி எடுத்துக் கொண்டன.

இப்போதுகூட மதாம் ஓங் என்று ஒரு சீனக் கொள்ளைக்காரி ஹாங்காங் நகருக்கு அருகில் இருக்கிருள். இவளுக்கு 35 வயது இருக்கும்; நல்ல உயரம்; அழகாகவும் இருப்பாளாம். ஆடம்பரமாகச் சீன ரீதிப்படி 'கவுன்' உடுத்திருப்பாளாம். இடது காலில், தோல்பட்டை ஒன்றில் எப்போதும் ஒரு துப்பாக்கி செருகி வைத்திருப்பாளாம். 1939-இல் இவள் புருஷன் ஜப்பானியருக்கு உளவு சொல்லிப் பிழைத்து வந்தான். அதற்குக் கைம்மாருக அவர்கள் ஒரு சீனக்கப்பலை இவனுக்குக் கொடுத்தார்கள். 1945-இல் மூன்று பிரிட்டிஷ் கப்பல்களை மடக்கப் போய் இவன் உயிருக்கே உலையாய் முடிந்தது. உடனே தன் கணவனின் தலைமைப் பதவியை இவள் ஏற்றுக்கொண்டாள். கூட்டத்தினரில் மூன்றுபேர் இதை ஆட்சேபிக்கவே, அவர்களைச் சுட்டுத் தள்ளிஞள். மற்றவர் நடுங்கிப்போய் இவள் ஆணைக்கு உட்பட்டார்கள். இவள் கையில் இப்போது 40 கப்பல் கொண்ட 'திருட்டுக் கடற்படை' ஒன்று இருக்கிறது. 1946-இல் ஹாங்காங்கின் அருகில் கடலில் இருந்த ஏராளமான கேபில் கம்பிகளை இவள் கூட்டத்தார் திருடி, 'பிளாக் மார்க்கெட்'டில் பாதிக்கு மேல் விற்றுவிட்டார்கள். தன் ஆட்களை ஏவுவதோடு தானும் துணிச்சலாக இந்தமாதிரி கொள்ளையில் இவள் கலந்து கொள்கிருள். 'வான் ஹூஸ்' என்ற டச்சுக்கப்பலை இவள் ஒரு சமயம் மடக்கி 15 மணி நேரம் சோதனை போட்டாள். அப்போது தானே ஒவ்வொரு பெண் பிரயாணியாகப் பார்த்து அவர்களிடமிருந்த நல்ல நகைகளையெல்லாம் கழற்றி எடுத்துக் கொண்டாள். பாவம், அந்தப் பெண்கள் அழுது தீர்த்துவிட்டார்களாம். பிறகு தன்னோடேயே அவர்களுடைய புருஷர்களையும் ஏற்றிக் கொண்டு போய்விட்டாளாம் - மறுபடியும் அந்தப் பெண்களிடமிருந்து ஏராளமாகப் பணம பறிக்கத்தான்!

இப்போது சீனு, பிரிட்டன், போர்த்துக்கல் இந்த மூன்று நாட்டுப் போலீசாரும் இவளைத் துரத்திப் பிடிக்கப் படாத பாடு பட்டுவருகிருர்கள். இப்படித் திரிவது இவளுக்கு ஒரு தமாஷாகத்தான் இருக்கிறது!

பொதுவாக, இந்தமாதிரி கொள்ளைக் கூட்டத்தில் பல ஜாதியாரும் பல இனத்தாரும் கலந்திருப்பது வழக்கம். பழைய கடல் கொள்ளைக்காரர்கள் பல இடங்களில் ஏராளமான பொன்னும் மணியும் ஒளித்து வைத்துப் போயிருப்பதாக வதந்தி. இதை நம்பி அமெரிக்க, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அங்கங்கே போய்த் தேடிப் பார்த்தார்கள். ஆனல் இதுவரை அந்தமாதிரி புதையல் எங்கேயும் கிடைக்கவில்லை.

தொடர்ந்த காதல்

ஒரே பெண்ணை எப்போதும் காதலித்துக்கொண் டிருக்க முடியாது என்று சொல்லுவது அபத்தம். ஒரே வயலின் வாத்தியத்தை எப்போதும் வாசித்துக்கொண் டிருக்க முடியாது என்று சிறந்த சங்கீத வித்வான் எவனும் சொல்வதில்லை.

—'ஹனோர் டி பால்ஸாக்'

பாண்டுரங்கன் சந்நிதியில்

தி. பா. மோகாசி

"பாண்டுரங்கா! - ஜே ஜே, விட்டல! - விட்டல, விட்டல!" என்ற பஜனை நாடெங்கும் ஆர்ப்பரிக்கிறது. இந்தப் பாண்டுரங்கநாதர் சந்நிதியில் இன்று என்ன நடக்கிறது?

பண்டரபுரத்துக்குப் பத்து மைல் தூரத்தில், யாத்திரிகர்களின் ஊர்வலத்தில் நான் கலந்து கொண்டேன். முன்னால் முந்நூறு விட்டல பக்தர்கள் கூட்டமாக நடந்தார்கள். ஒவ்வொருவர் தலையிலும் ஒரு சிறு மூட்டை; கையில் தடி, கழுத்தில் மாலை, நெற்றியில் திலகப் பொட்டு, உடம்பில் கிழிந்த துணி. நடுநடுவே எவளாவது ஒரு பெண்மணி துளசி மாடத்தைத் தலையில் சுமந்து செல்வாள். எல்லாருடைய முகமும் சோர்ந்திருந்தன. வலுவிழந்த மாந்தர்களின் கூட்டமாக அது எனக்குத் தென்பட்டது. நடுவிலே துகோபாவின் பல்லக்கு வந்தது. பின்னால் மர நிழலில் பக்தர்கள் அங்கங்கே சிறிது இளைப்பாறினார்கள்.

பல்லக்கைத் தாங்கிய வெண் குதிரையை ஒரு சிப்பாய் கையால் பிடித்து நடத்திவந்தான். பக்தர்கள் குதிரையின் நெற்றியைத் தொட்டு வணங்கினார்கள். உயரமான குதிரையின் நெற்றியை நமஸ்காரத்துக்காக அடிக்கடி தாழ்த்துவது, அந்தச் சிப்பாய்க்கும் பெருந் தொல்லையாக இருந்தது. ஜனங்கள் அந்தக் குதிரைக்குப் பேரீச்சம்பழமும் தீனியும் கொடுத்தார்கள். வருஷத்துக்கு ஒரு தடவை இப்படி யாத்திரை கிளம்புவதைத் தவிர்த்து அந்தக் குதிரைக்கு வேறு வேலை கிடையாது. ஆனால் இந்த ஒரு தடவையிலேயே ஒரு வருஷத்துத் தீனி அதற்குக் கிடைத்துவிடும்.

வழியில் வயல்புறமாக ஓரிடத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்தார்கள். நடுவே ஐந்தடி வளையம் விட்டு, சுற்றி ஜனங்கள் நின்றார்கள். இந்த இடத்துக்கு வந்ததும், குதிரை அந்த வளையத்தைச் சுற்றி ஏழெட்டுத் தரம் ஓடியது. இவ்வளவுதான் வேடிக்கை! இதைப் பார்க்கப் பத்துப் பதினைந்து மைல் தூரத்திலிருந்து பல பேர் வந்திருந்தார்கள்.

பிறகு மைதானத்தில் பஜனை ஆரம்பித்தது. வெவ்வேறு மெட்டுக்களில் அபிநயத்தோடு பக்தர்கள் பாடினார்கள். காலின் கீழே கையைக் கொண்டுபோய்த் தட்டுவது, தரையில் புரள்வது, எகிறி எகிறிக் குதிப்பது, தலையைத் தரையில் முட்டிக்கொண்டு முதுகுப்புறமாகத் தாளம் போடுவது - இப்படி அவர்கள் ஸர்க்கஸ் காட்டினார்கள்.

காப்பிரைட்: கிர்லோஸ்கர் (மராட்டி: ஜூலை '49),
கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா ஜில்லா.

ஜனங்களும் அலுக்காமல் ஆச்சரியத்தோடு அதைப் பார்த்தார்கள்.

சற்று நேரத்துக்கெல்லாம் பல்லக்குப் புறப்பட்டது. இங்கிருந்து பண்டரபுரத்துக்குச் சத்த வண்டிகள் போகின்றன. மழைக் காலமானதால் வாடகை அதிகம். ஒரு மரத்தடியில் ஒரு குடியானவன் கொதிக்கும் ஜுரத்தில் மழையில் நனைந்து படுத்திருந்தான். வண்டிக்காரன் நாலணா சத்தம் கேட்டான்; இவன் இரண்டணாவுக்குப் பேரம் செய்தான். வண்டிக்காரன் இவனுடைய அப்பனைத் திட்டினான். இவன் பேசாமல் வண்டியில் ஏறினான். "பணமில்லாமல் இந்தச் சாவான்கள் எதற்குத்தான் பண்டர்புருக்கு வருகிறார்களோ?" என்று அந்த வண்டிக்காரன் வழி முழுக்கச் சொல்லிக்கொண்டே வந்தான். ஆனால் இதே பேச்சை அங்கே எல்லா வியாபாரிகளுமே சொல்வதைப் பிறகு நான் கவனித்தேன்.

பக்தி யாத்திரை

அன்றிரவு நான் சத்திரத்தில் தங்கினேன். இருநூறு முந்நூறு மைல் தூரம் நடந்து வரும் இந்தப் பக்தர்கள் தமக்குள் என்ன பேசுவார்களோ என்று ஆவலோடு பார்த்தேன். பண்டரபுரத்தைப் பற்றியோ விட்டலைப்பற்றியோ இவர்கள் ஏதும் பேசவில்லை; எல்லாம் சொந்த விஷயம், கிராமத்துச் சுகதுக்கங்கள்.

அங்கங்கே கதைகளும் கீர்த்தனங்களும் நடந்தன. இந்தக் கதாகாலட்சேபத்தில் இன்ன விஷயந்தான் வரும் என்று பிரம்மாகூடச் சொல்ல முடியாது. வேதாந்தம், மாயை, பிரம்மம், சமஷ்டி, அங்குஷ்டம் என்ற சொற்களை இடையிடையே தூவி, மனம்போன போக்கில் எதையாவது பேசிக் கடைசியில் விட்டல நாமத்தைச் சொல்வது சம்பிரதாயமாகிவிட்டது. "அதோ பாருங்கள், அந்தப் பெண்ணை. அவள் மாயை; உங்களைப் பாழாக்குகிறவள். விட்டல நாமஸ்மரணம் செய்யுங்கள்" என்ற மாதிரியில் காலட்சேபம் நடக்கும். 'நாம் ஏதோ பெரிய தத்துவத்தைச் சொல்கிறோம்' என்று கீர்த்தனகாரர்கள் நினைக்கிறார்கள். 'இந்த உலகம் பொய். நாம் மண் பொம்மைகள். பண்டரபுரத்துக்கு வந்து, சந்திரபாகையில் ஸ்நானம் செய்து, ஹரிகதையைக் கேட்டு, விட்டல தரிசனம் செய்வதுதான் மோட்சம்' என்பது பக்தர்களின் கொள்கை. வருஷத்துக்கு ஒரு தரம் இந்த எட்டுநாள் விழாவில் பண்டரபுரத்துக்கு வராதவனுடைய ஜன்மம் வீண் என்பது வாழையடி வாழையாக அவர்கள் மனத்திலே ஊறிய எண்ணம்.

'ஜய சந்திரபாகா' என்ற கூக்குரல் எங்கும் கேட்டது. ஜனங்கள்



திருவிழாக் கடைகள்

ஸ்நானம் செய்து, தானங்கள் வழங்கினார்கள். எங்கே பார்த்தாலும் பிச்சைக்காரர்களின் கும்பல். ஹோட்டல்களிலிருந்து லௌட் ஸ்பீகர்கள் கோஷம் போட்டன. துளசி மாலை, சந்தனம், ஊதுவத்தி, கர்ப்பூரம், பக்திப் புத்தகங்கள், மிட்டாய்கள், துணி, பாத்திரங்கள் - இப்படிப் பல பொருள்கள் விற்கும் கடைகள் வரிசையாக இருந்தன.

வருஷம் முழுவதும் சம்சாரத்துக்கு வேண்டிய துணிமணிகளும் பண்டங்களும் இங்கிருந்து வாங்கிப் போவது விட்டல பக்தர்களுடைய வழக்கம். ஆகையால் இந்த ஏழெட்டு நாளும் கடைகளில் கூட்டம் சொல்லி முடியாது. ஒவ்வொரு குடியானவனும், இந்தக் கடைக்குப் போவதா, அந்தக் கடைக்குப் போவதா என்று தயங்கி நிற்பான். இந்தப் பொருளின் விலை அதிகமா, மலிவா என்று சந்தேகப்படுவான். ஆனால் கடைக்காரரின் ஆட்கள் அவனை உள்ளே பிடித்துத் தள்ளுவார்கள். கடைக்குள் போனதும் பலவிதப் பண்டங்களை அவனுக்குக் காட்டிப் பரபரவென்று விலை சொல்லிக் கொண்டே போவார்கள். யோசிப்பதுக்கு அங்கே இடமே கிடையாது. அரை நிமிஷத்துக்குள் அவன் எதையாவது வாங்கினால் சரி. இல்லாவிட்டால் உடனே கழுத்தைப் பிடித்து வெளியே நெட்டித் தள்ளுவார்கள். இந்த யாத்திரிகர்கள் பித்துப் பிடித்தாற்போல இங்குமங்கும் அலைந்து, கெட்டுப் போன சாமான்களை ஏராளமான விலைக்கு வாங்கிக்கொண்டு சத்திரத்துக்குத் திரும்புவார்கள். இவர்களின் முகத்தில் சந்தேகமும் சோர்வுமே தென்படும்.

பண்டரபுரத்தில் கோயில்களுக்குக் கணக்கே இல்லை. ஆனால் முக்கியமானவை விட்டல், ருக்மிணி, புண்டரிகன் இவர்களுடைய கோயில்கள். நதிக்கரையிலே மணலில் புண்டரிகனுடைய கோயில்



பக்தரின் ஆலிங்கனம்

இருக்கிறது. குறுகிய திட்டி வாசல் வழியாக அதற்குள் போகவேண்டும். கோயிலுக்குள் வரிசையாகப் பூசாரிகள் தட்டை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். தட்டிலுள்ள பணத்தைக் கலகல வென்று ஓசைப்படுத்தி, "பணம், பணம், பணம் போடு, பணம் போடு!" என்று அவர்கள் கூவுகிறார்கள். புதிதாகப் பார்ப்பவனுக்கு இதைக் கண்டு வெறுப்பு வரும்; ஆனால் வழக்கமாய்ப் போகும் பக்தர்களுக்கு இது சகஜம். அவர்களுக்குத் தரிசனம் முக்கியம்; அதற்காக அவர்கள் என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கத் தயார்.

விட்டல தரிசனத்துக்காக ஒரு நாள் முழுவதுங்கூடக் கூட்டத்தில் காத்திருக்க வேண்டும். ஒவ்வொரு பிராகாரமாகக் கூட்டங் கூட்டமாய் ஜனங்களை விடுகிறார்கள். நூறு நூறு பேராக உள்ளே விட்டு, இரண்டு புறமும் பூட்டுப் போட்டுவிடுவார்கள். ஒரு மணி நேரம் பொறுத்து அடுத்த கட்டில் இடம் கிடைக்கும். போதாக்குறைக்குப் போலீஸ்காரர்களின் தொந்தரவு வேறு. "புண்டரிக வரதா!" என்ற கூச்சல் தவிர, வேறு ஏதும் காதில் விழாது. சபா மண்டபத்தில் ஜனங்களைப் பூட்டிவிட்டுப் பூசாரிகள் சாப்பாட்டுக்கோ டீ குடிக்கவோ கிளம்பி விடுவார்கள். அவர்கள் திரும்பும் வரைக்கும் ஜனங்கள் மண்டபத்தில் கிடக்க வேண்டும். வெளித் தாழ்வாரத்திலே, இஷ்டமில்லாவிட்டால் எழுந்து போய்விடலாம். ஆனால் மண்டபத்துக்குள் வந்ததும் அந்தப் பாச்சா பலிக்காது. நாலைந்து மணி நேரம் இங்கே கடுங்காவல்தான். விட்டல பக்தர்கள் இந்த மண்டபத்திலே தென்படும் ஒவ்வொரு பொருளையும் பக்தியோடு வணங்குகிறார்கள்; ஆவேசத்தோடு கம்பங்களைக் கட்டித் தழுவிக்கொள்கிறார்கள்.

மண்டபத்தைத் தாண்டி இருட்டில் காற்று இல்லாமல் அவிந்து இரண்டு மணி நேரம் நின்றால் விட்டல தரிசனம் கிடைக்கலாம். சக்கரவியூகம்போல வட்டமான வரிசையில் நிற்க வேண்டும். லட்சக்கணக்கான பக்தர்களின் காலும் கையும் தேய்ந்து தேய்ந்து வழுவழுப்பான படியிலிருந்து, நம்மை உள்ளே விட்டலுக்கு முன்னால் தள்ளுகிறார்கள். அங்கிருந்து நம்மைப் பிடித்துத் தள்ளப் பூசாரிகள் தயாராக நிற்கிறார்கள். உங்கள் கையில் என்ன பணம் இருந்தாலும் அவர்களிடம் கொடுத்துவிட வேண்டும். மிகவும் குறைந்த சமயத்தில் உங்களிடமுள்ள பணம் முழுவதையும் வாங்குவது அவர்களுடைய கலை. "இரண்டணாவா? எட்டணா எடடா! பிரசாதம், மாலை எல்லாம் வாங்கிக்கொண்டு போ. விட்டலுக்கு நாலணா, குருக்களுக்கு நாலணா. இதுவா அதிகம்? நீ பாவிடா, நரகத்துக்குத்தான் போவாய். இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு நீ என்னடா செய்யப் போகிறாய்? போடு, விட்டலின்

முன்னால் போடு! பணம் இல்லாமல் இங்கே என்ன, சாக வருகிறாயா? தள்ளுடா அவனைப் பிடித்து!" இப்படி அமிர்தவாஷம் காதில் விழும். இவ்வளவும் ஒரு நிமிஷத்துக்குள் நடந்துவிடும். யாத்திரிகர்களின் தலையைப் பிடித்து விட்டலின் முன்னால் கொண்டு வந்து முட்டுவதும், அவர்களுடைய பணத்தை வாங்கிக்கொண்டு பார்சலைப்போல வெளியே தள்ளுவதும் பூசாரிகளின் வேலை. இந்தச் சம்பிரமத்தில், நாம் எங்கே வந்தோம், என்ன பார்த்தோம், எவ்வளவு பணம் கொடுத்தோம் என்றே விட்டல பக்தனுக்குத் தெரிவதில்லை.

வாழ்க்கையின் லட்சியம் விட்டல தரிசனம். ஆனால் அது முடிந்த பிறகு விட்டல பக்தர்களான குடியானவர்களின் கோலம் பார்க்கப் பரிதாபமாகத்தான் இருக்கிறது. கையிலுள்ள பணம் முழுவதும் செலவழிந்து, உடலும் மனமும் சோர்ந்துபோய், சம்சார பாரத்தை விட்டலின் மேல் போட்டுவிட்டு இவர்கள் வீட்டுக்குப் புறப்படுகிறார்கள். செயலின்மையும் முட்டாள்தனமும் அறிவீனமும் பயமுமே இவர்களுடைய வாழ்க்கையில் தென்படுகின்றன. நமது சுதந்தர நாட்டில் பண்டரபுரம் போன்ற புண்ணிய க்ஷேத்திரங்கள் அறிவு நிலையமாக விளங்கும் காலம் எப்போது வரும்?



கதா காலட்சேபம்

oooo

குழந்தைகள் குறும்பு

இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்காதவற்றைத் திருப்பி அனுப்பமுடியாது. பதிலும் எழுத முடியாது.

—ஆசிரியர்.

நாங்கள் டாடா நகரிலிருந்து ரெயில் வண்டியில் வந்துகொண்டிருந்தோம். வண்டி பெஜவாடா ஸ்டேஷனில் நின்றது. அடுத்து வரும் புண்ணிய நதியான 'கிருஷ்ணா'வில் போடுவதற்காக என் பாட்டி, அம்மா, சித்தி எல்லாரும் மஞ்சள், வெற்றிலை பாக்கு, வெள்ளி அம்மன் காசு ஆகியவற்றை எடுத்துத் தயாராக வைத்திருந்தார்கள்.

"இதெல்லாம் எதுக்கு?" என்று கேட்டான் நாலு வயதுள்ள என் தம்பி.

பாட்டி உடனே அவன் கையிலும் ஒரு வெள்ளி அம்மன் காசும் வெற்றிலை பாக்கும் கொடுத்து, "ரெயில் போகும்போது எறி. புண்ணியம் கிடைக்கும்" என்றாள்.

வண்டி புறப்பட்டது. ஸ்டேஷனிலேயே தன் கைக்காசையும் வெற்றிலை பாக்கையும் தம்பி எறிந்துவிட்டான்.

திரும்பி அவனைக் கவனிப்பதற்குள், வண்டி கிருஷ்ணா நதியை நெருங்கிவிட்டது.

அம்மா, பாட்டி, வண்டியிலிருந்த மற்றப் பிரயாணிகள் எல்லாரும் என்ன என்னவோ வேண்டிக்கொண்டு, காசும் வெற்றிலை பாக்கும் வீசி எறிந்தார்கள்.

தம்பி இதைக் கண்டான். தன் கை காலியாகிவிட்டதால், சுற்றுமுற்றும் பார்த்தான். கைக்கு அகப்பட்ட தங்கையின் சீப்பு, அம்மாவின் கண்ணாடி, என் பேனா எல்லாவற்றையும் பரபர என்று எடுத்து நதியில் எறியத் தொடங்கிவிட்டான். விஷயம் இன்னும் மிஞ்சிப்போகு முன் அவனை நான் தடுத்து நிறுத்தவேண்டியதாயிற்று.

—கே. பாலசுப்பிரமணியன்,
கும்பகோணம்.

ரெயில் வண்டியில் முதல் முதல் பிரயாணம் செய்துகொண்டிருந்த சிறுமி, தன் தாயைப் பார்த்து, "அம்மா, அம்மா, அதோ அதெல்லாம் என்ன?" என்று கையை வெளியே சுட்டிக் காட்டிக் கேட்டாள்.

"அடி கண்ணுட்டி, நம் வீட்டுக் கொல்லையிலே இல்லையா? அந்த மாதிரி மரங்கள் அதெல்லாம்" என்றாள் தாய்.

"அதெல்லாம் எங்கே ஓடறது?" என்று மறுபடியும் கேட்டாள் சிறுமி.

—ஒரு பிரயாணி.

ஒரு நாள் எங்கள் அப்பா ஒரு புஸ்தகம் வாங்கிக்கொண்டு வந்தார். 'குழந்தை வளர்ப்பது எப்படி?' என்று அதற்குப் பெயர்.

அப்பா வெளியே போயிருந்த போது, எட்டு வயதுள்ள என் தம்பி அந்தப் புஸ்தகத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்துக்கொண் டிருந்தான்.

இந்தச் சமயத்தில் திரும்பி வந்து விட்டார் அப்பா. அவர் கோபத்தோடு, "என் புஸ்தகத்தைத் தொடாதே, தொடாதே என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்! அதை வைத்துக்கொண்டு



என்னடா செய்கிறாய்?" என்று கேட்டார்.

தம்பி சாவதானமாக, "நீ என்னைச் சரியாக வளர்க்கிறாயா என்று பார்த்துக்கொண் டிருக்கிறேன்" என்றான்.

—எஸ். ஸ்ரீரங்கன், மயிலாப்பூர்.

ஒரு பூனையைத் தூக்கிக்கொண்டு, பங்களாவில் நுழைந்தான் ஒரு சிறுவன்.

பங்களா எஜமானி: பையா, எங்கே வந்தாய்?

சிறு: காணாமற் போன தங்களுடைய பஞ்சவர்ணக் கிளியைக் கண்டுபிடித்துக்கொண்டு வருகிறவர்களுக்கு 5 ரூபாய் பரிசு தருவதாக விளம்பரம் செய்திருக்கிறீர்களே?



எஜ: வாஸ்தவம். ஆனால் நீ ஒரு பூனையை அல்லவா கொண்டு வந்திருக்கிறாய்?

சிறு: உங்கள் பஞ்சவர்ணக் கிளி இந்தப் பூனையின் வயிற்றுக்குள்ளே தான் இருக்கிறது.

—கே. ஜி. எஸ். மணியன், தி. நகர்.

என் தங்கை மகன் ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வரும்போது, சந்தோஷமாய்க் கூச்சவிட்டுக்கொண்டே, "எனக்கு எழுதத் தெரிஞ்சுபோச்சு. நான் எழுதக் கத்திண்டுட்டேன்" என்று பெருமையாய்ச் சொன்னான்.

"நீ என்ன எழுதுவாய்?" என்று நான் கேட்டேன்.

"அது எனக்கு எப்படித் தெரியும்? நான் இன்னும் படிக்கக் கத்திக்கலையே!" என்றான் சிறுவன்!

—ஒரு மாமன்.



வாழ்க்கையிலே எத்தனை எத்தனையோ
பிரச்னைகள். இதோ இரண்டு.

இனிப்பும் கசப்பும்

கிரிபாலே

தங்கச்சி, என் பதில் இரண்டு நாள் முன் பின் வந்தாலும் நீ கோபித்துக்கொள்ளக் கூடாது; அநாவசியமாகக் கோபித்துக் கொள்ளுவதாலோ அலட்டிக் கொள்ளுவதாலோ லாபம் என்ன, சொல்? உடம்புக்கு அதிர்ச்சியும் பலவீனமுந்தான் உண்டாகும்.

இதெல்லாம் இருக்கட்டும். விஷயத்தைச் சொல்லுகிறேன். நீ என்ன நினைத்துக்கொள்வாயோ என்னவோ? ஏதோ பெரிய காரியம் கைகூடிவிட்டதாகவே எனக்கு எண்ணம். குடியானவப் பெண் சென்னியைத் தெரியுமோ, இல்லையோ உனக்கு? அவர்கள் ஜாதியில் வருஷத்துக்கு ஒரு பெரிய பண்டிகையாம். பூதத்துக்குப் பூசையாம். எவ்வளவோ பலி கொடுக்க வேண்டுமாம். எத்தனையோ வருஷமாக இந்தப் பூசை நடக்கிறதாம். இதுவரையில் நானும் அதிகமாக இதைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லை. ஒரு வாரத்துக்கு முன் சென்னி கையைப் பிசைந்துகொண்டு வந்து நின்றாள். முகத்தைச் சுண்ட வைத்துக்கொண்டிருந்தாள். "என்னடீ?" என்றேன். அவள் சொன்னதைக் கேட்டு எனக்கே தூக்கி வாரிப்போட்டது. அவள் ஒரு நாளும் என்னை ஐந்து ரூபாய்க்குமேல் கடன் கேட்டதில்லை. திடீரென்று ஐம்பது ரூபாய் கடன் வேண்டும் என்றாள். பிறந்தது முதல் அவ்வளவு தொகையைக் கண்ணால்கூடப் பார்த்திருக்கிறாளோ, இல்லையோ; சந்தேகந்தான். "என்னடீ வந்துவிட்டது?" என்றேன். "எவ்வளவோ வருஷமாகச் செய்யவில்லை. பூதப் பிரீதி செய்ய வேண்டும்" என்றாள். பெரிய கலசம் வைத்துக் கோழி, ஆடு பலி கொடுத்து 40 சேர் அரிசிச் சாதம் படைக்கவேண்டுமாம். அவள் ஒருத்தி மாத்திரம் இல்லை. இன்னும் எவ்வளவோ பேர் ஒவ்வோர் இடத்திலும் நடத்துவார்களாம். "இதெல்லாம் ஒழியவே ஒழியாதுபோல் இருக்கிறதே! இவ்வளவு வருஷமாக ஒன்றுமில்லை. திடீரென்று என்ன வந்ததடீ உனக்கு?" என்று கேட்டேன். அவளுக்கு அழுகை வந்துவிட்டது. "கைக்குழந்தை எலும்புக் கூடாகி இருக்கிறது. முன்னே செத்துப்போன குழந்தையின் பிசாசு அதைப் பிடித்துக்கொண்டிருக்கிறதாம். பூதத்தைத் திருப்தி செய்தால்தான் குழந்தையை விடுமாம். பூசை செய்துதான் ஆகவேண்டும்" என்றாள். "ஐயோ பைத்தியமே!" என்று அவளோடு ஒரு நாளெல்லாம் வாதித்தேன். எவ்வளவு சொல்லி என்ன? இதெல்லாம் அவர்களுக்கு வேர் ஊன்றிப் போய்விட்டது. ஒரு நாளெல்லாம் அவளோடு மன்றாடி மல்லுக்கு நின்றேன். ஏதோ அரை மனத்தோடு

மூலம்: கதாவளி (கன்னடம்: ஆகஸ்ட் '49), பெங்களூர்.

சமாதானத்துக்கு வந்தாள். அப்பாடா, ஒரு வழிக்கு வந்தாள் என்றால், அவள் பாட்டியாம் ஒரு கிழம் - பேய்தான் - நான் இவளிடம் வாயே கொடுக்கவில்லை; என்னோடு சண்டைக்கு வந்துவிட்டாள். "எங்கள் கோத்திரம், தெய்வம், பூசை, குலம், நம்பிக்கை, பெரியவர்கள் ..." என்று அவள் பேசிய பேச்சு, எடுத்துக் காட்டின தருமம் இதற்கெல்லாம் கங்கு கரையே இல்லை. "எங்கள் ஜாதிக் கட்டுப்பாடுகளைப் பற்றி நீங்கள் இப்படியெல்லாம் பேசக் கூடாது" என்று கண்டிக்கக்கூட ஆரம்பித்துவிட்டாள். அடியம்மா, அவளை ஒரு வழிக்குக் கொண்டு வருவதற்குள் என் உயிரே போய்விட்டது, போ! கடைசியில், "ஐம்பது ரூபாய் என்னவோ கொடுக்கிறேன்; ஆனால் ஒரு நிபந்தனை" என்றேன். "முதலில் குழந்தையைக் கொண்டு வா. எங்கள் வைத்தியரிடம் காட்டி மருந்து வாங்கிக் கொடுக்கிறேன். அது பலிக்காவிட்டால் உங்கள் பூதப் பூசை செய்யலாம்" என்றேன். கிழவி ஒப்புக்கொண்டாள். ஐம்பது ரூபாயையும் அவள் கையில் போட்டேன். உடனே குழந்தையை எடுத்துவரச் சொல்லி வைத்தியரிடம் காட்டி மருந்து வாங்கினேன். ஒரே வாரந்தான்; குழந்தை நன்றாகத் தெளிந்து விளையாடுகிறது; சாப்பிடுகிறது. இனிமேல் பலி கொடுப்பதில்லை என்று ஒப்புக் கொண்டு கிழவி முதல் எல்லாரும் என்னிடம் வந்து ஆணை இட்டார்கள். சென்னிக்கும் கிழவிக்கும் ஒரே சந்தோஷம். இதோடு விடவில்லை. கிழவி லேசுப்பட்டவள் இல்லை; வீடு வீடாய்ப் போய்ப் பிரசாரம் செய்யவும் ஆரம்பித்திருக்கிறாள்.

இது போக, எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதற்குப் பதில் எழுதியாகவேண்டும். அது குடகிலிருந்து வந்தது.

அதை அப்படியே எழுதுகிறேன், படி :

"எனக்கு வயது இப்போது இருபது. பம்பாயில் என் அக்காவுடன் இருந்தேன். அப்போது அவளுக்குத் தெரிந்த ஒரு வாலிபருடன் எனக்கு நட்பு ஏற்பட்டது. நன்றாய்ப் படித்தவர். கௌரவமுள்ள குடும்பத்தில் பிறந்தவர். எங்கள் நட்பு நாளுக்கு நாள் வளர்ந்து காதலில் வந்து முடிந்தது. எனக்கு எந்த விதத்திலும் திருப்தியாக இருந்தது. இப்படி இருக்கிற சமயத்தில் ஊரில் என் தாய்க்கு ஏதோ ஜுரமென்று கடிதம் வந்தது. ஊருக்கு வந்தேன். புறப்படுவதற்கு முதல் நாள் நாங்கள் இருவரும் எங்கள் விலாசங்களை ஒருவருக்கு ஒருவர் தெரிவித்துக்கொண்டு காதலையும் மறக்கக் கூடாதென்று உறுதி மொழியோடு பிரிந்தோம். ஊருக்கு வந்து என் தாய் தந்தையரிடம் தெரிவித்தபோது இந்தச் சம்பந்தத்தைப்பற்றி அவர்களும் சந்தோஷப்பட்டார்கள். எங்களுக்குள்ளே கடிதப் போக்கு வரத்தும் நடந்தது.

"ஆனால் அந்த வாலிபரின் தாய்க்கு வேறு எண்ணம். தன் தம்பியின் பெண்ணைப் பிள்ளைக்குக் கல்யாணம் செய்துவைக்க வேண்டுமென்று இருந்தது. அந்தப் பெண்ணும் படித்தவள்தான். அதோடு பணமும் படைத்தவள். அதனால் தான் சபலம். இதை நிச்சயம் செய்யப் போகிறார்கள் என்று என் காதுக்கு எட்டியது. உடனே எனக்கு உறுதி கொடுத்திருப்பதை அவர் மறந்துவிட்டாரோ என்னவோ என்று கடிதம் எழுதினேன். அவர் உடனே பதில்

போட்டார். 'எனக்கு அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டமில்லை. அதற்காக நான் யாரை விரோதித்துக்கொள்வதற்கும் தயார். உன்னை மறக்க மாட்டேன்' என்று அவர் எழுதியது என் பெற்றோருக்குப் பெருமையாக இருந்தது. சீக்கிரமே கல்யாணம் செய்துவிட வேண்டுமென்று முகூர்த்தம் பார்த்தார்கள். அவருக்கும் கடிதம் போட்டோம்.

"எதனாலோ பதிலே வரவில்லை. என் உள்ளத்தில் கவலையும் வேதனையும் கொந்தளித்தன. உலகமே அஸ்தமித்துவிட்டது போல் தோன்றியது. நானே எழுதினேன். வந்து உடனேபார்க்காவிட்டால் பிராணனை விட்டுவிடுவேன் அதற்கும் பதில் இல்லை. திடீரென்று எதிர்பாராத செய்தி வந்தது. அவருக்கு க்ஷயம் என்றும் அத்திம்பேரும் தானும் அவரை அழைத்துக்கொண்டு சீக்கிரத்திலேயே வருவதாகவும் அக்கா எழுதி இருந்தாள். என் பிராணனே போய்விடும் போல் ஆகிவிட்டது. அவருக்கு க்ஷயம் என்று கவலையானாலும் அவர் வருகிறாரே என்று எப்படியோ நாளைக் கடத்தினேன். அவருடன் இரண்டு பேரும் வந்தார்கள். அவர்களுக்கும் எங்களுக்கும் அவரை வீட்டிலேயே வைத்துக்கொண்டு வைத்தியம் பார்க்க வேண்டுமென்ற எண்ணம். ஊர் வாய் சும்மா இல்லை. அவர் காதிலும் எட்டியதோ என்னவோ வீட்டில் தங்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார். தம் வீட்டுக்குப் போகவும் ஒப்பவில்லை. கடைசியில் மைசூர் டி. பி. சானடோரியம் அவரை ஏற்றுக்கொண்டது. எனக்கு என்னவோ கடிதம் எழுதிக்கொண்டிருந்தார். நாட்கள் ஓட ஓட என் பெற்றோருக்கு அவர்மேல் நம்பிக்கை போய்விட்டது. எல்லாரும் 'க்ஷயம் வந்தவர் பிழைக்கமாட்டார்' என்றார்கள். எனக்கு வேறு வரன் பார்ப்பது வரையில் வந்துவிட்டது. அவருக்கு இனிமேல் கடிதம் எழுதக் கூடாதாம். அவரிடமிருந்து வருவதையும் தடுத்துவிட்டார்கள். இந்த நிர்ப்பந்தம் எனக்குப் பொறுக்கவில்லை. என்ன கல்யாணம்? எல்லாரையும் திருப்தி செய்ய ஒரு கல்யாணம் செய்துகொள்வதா? அல்லது எல்லாரையும் துறந்து நோயில் வாடும் அவருக்காக உயிர் வாழ்வதா? கன்னியாக வாழ்வதா? உயிரையே விட்டுவிடுவதா? எதற்கும், எனக்கு ஒரு வழி நீங்கள்தான் சொல்ல வேண்டும்.
—லீலா."

கேட்டாயா? இவ்வளவு உபத்திரவம் எனக்கு! 'உனக்கு ஏன் தலையிலெழுத்து இதெல்லாம்?' என்கிறார் உன் அத்திம்பேர். இதற்குப் பதில் எழுதுவதற்குள் என் மூளை குழம்பிப் போய்விடப் போகிறது. அப்புறம் என்ன எழுதினேன் என்று பின்னால் எழுதுகிறேன்.

ஜனநாயகம்

பிரிட்டனிலே நாங்கள் புதிய சர்க்காரைத் தேர்ந்தெடுப்பதில்லை; பழைய சர்க்காரை விரட்டிவிடுவோம். அவ்வளவுதான்.

—டபிள்யூ. ஜே. பிரௌன், 'ஈவினிங் ஸ்டாண்டர்டு.'

இதுதான் பிழை

[31-ஆம் பக்கத்தில் உள்ள வாசகத்தை நீங்களே திருத்திப் பார்க்குமுன் இதைப் படிக்க வேண்டாம்.]

1. கிணற்றைக் குறிக்க வரும் சொல் துரவு; துறவு என்பது சந்நியாசத்தைக் குறிக்கும்.

2. மேலும் மேலும் என்றோ மேன்மேலும் என்றோ சொல்வது தான் சரி. மென்மேலும் என்பது தவறு. மெல் என்பது மென்மை என்பதன் பகுதி. அதற்கு இங்கே வேலை இல்லை.

3. உடைத்தாய் என்பது அஃறிணை ஒருமையைக் குறிக்கும் சொல்; மக்கள், உயர் திணைப்பன்மை. ஆகவே உடையவர்களாயிருக்கிற மக்கள் என்று எழுதுவதுதான் சரி.

4. தனியாக என்ற பொருளில் பேச்சுவழக்கில் ஒண்டியாக என்று சொல்கிறோம். ஒன்றியாக என்பதன் மாறிய உருவம் அது. ஒன்று என்பதிலிருந்து ஒன்றி என்பது வந்தது.

5. மும்மூர்த்திகளின் பெயரை யும் சொல்லிவிட்டு, முதலிய என்று சொல்லுதல் பிழை. அந்த வரிசை யில் இன்னும் சிலர் இருந்தால் முதலிய என்று கூறலாம். இங்கே பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் என்று சொல்வது தான் சரி.

6. விஞ்ஞான ஆராய்ச்சியினால் விஞ்ஞானிகள் புதிய பொருள் களை உண்டாக்கலாம்; ஆனால் புதிய கிரகங்களை உண்டாக்க முடியாதே! அவற்றைக் கண்டு பிடிக்கலாம். முன்பே இருந்த ஒன்றைக் கண்டு பிடிப்பது வேறு; இல்லாததை உண்டுபண்ணுவது வேறு.

7. காங்கிரஸ் மகாநாடுகளில் தலைமை வகிக்காத பல பெரியதேச பக்தர்கள் இருக்கிறார்கள். பழங் காலத்துத் திலகரும் கோகலேயும் அத்தகையவர்கள்; இந்தக் காலத்து ராஜாஜியும் அப்படித்தானே?

8. உதகமண்டலம் என்பது இயல்பான பெயரன்று; காரணத் தால் ஏற்பட்டதும் அன்று. ஒற்றைக் கல் மன்று என்ற பெயர் ஒத்தைக் கல் மந்த் ஆகி, உதகமண்டலம் ஆகி விட்டது. நீலகிரியில் வாழும் தொதுவர்கள் அதை ஒத்தை என்று சுருக்கிச் சொல்வார்கள். நாமோ உதகமண்டலத்தைக் குறுக்கி உதகை ஆக்கிவிட்டோம்.

9. நீலகிரிமலையில் கிரி வேறு, மலை வேறா? நீலகிரி என்பதே போதுமே.

10. கம்பராமாயணத்தில் உள்ள கவிகளில் பெரும்பாலன விருத்தங் களே. விருத்தம் என்பது மூன்று வகைப் பாவினங்களில் ஒன்று. அந்த வகையைச் சேராத பாடல்களும் ராமாயணத்தில் உண்டு. தரவு கொச்சகக் கலிப்பா, கலித்துறை என்னும் பிற கவிகளையும் அதில் பார்க்கலாம்.

11. பாரத வெண்பாவில் வெண் பாவோடு அகவலும் இடை யிடையே உரைநடையும் உண்டு.

12. தொல்காப்பியம் காவியம் அல்லவே! அது இலக்கண நூல் அல்லவா? தொல்காப்பியர் என்ற ஆசிரியர் செய்தமையால் நூலுக் குத் தொல்காப்பியம் என்ற பெயர் வந்தது; அகத்தியர் இயற்றியதை அகத்தியம் என்று சொல்வதைப் போல அமைந்தது.

நாட்டியத்திலிருந்தே ஜப்பானிய நாடகம் பிறந்தது. அதிலே இயற்கைக் காட்சிகள் நிறைந்திருக்கும்.

ஜப்பானிய நாடகம்

கராசூர் நஞ்சப்பா

ஜப்பான் தேசத்து நாட்டியக் கலையும் நாடகமும் சுமார் 60 வருஷங்களுக்கு முன்பே உயர்ந்த நிலையை அடைந்து விட்டன. ஆனால் அப்போது அழகிய வாலிபரோ, பெண்களோ மேடைக்கு வரக்கூடாதென்று அரசாங்கத்தாரின் தடை உண்டு. இப்போது அந்தத் தடை போய்விட்டது. மக்களில் எவர் வேண்டுமானாலும் நடிக்கலாம்.

ஜப்பானியர் பார்வைக்கு வெள்ளைக்காரர்போல் இருந்தாலும், நடை, உடை, பாஷை, கலை முதலியவற்றில் அநேகமாக நம்மைப் போலவே இருக்கிறார்கள். இதுவரைக்கும் தங்களுடைய பழமையான கலைகளை விடாது வளர்த்து வருகிறார்கள். இந்த வளர்ச்சிக்கு வேண்டிய அளவு உதவி புரிந்தவை சீனா தேசமும் இந்தியாவுந்தான்.

ஜப்பானிய நாடகக் கலைக்கு, 'ககுரம்' என்பதுதான் ஆதாரம். அது ஒருவித நாட்டியம். அவர்களுடைய புராணங்களிலும் நாட்டியம் உண்டு. இதைப்பற்றி அவர்கள் ஒரு கதை சொல்லுகிறார்கள். சூரியனைப் 'பெண் தேவதை'யாகப் பாவித்துப் பூஜை செய்து வருபவர் ஜப்பானியர். இந்தப் பெண்தேவதையின் அண்ணன் பெயர் 'சுசானோமிகோடோ.' அவன் மிகவும் கொடியவன். அண்ணனின் ஹிம்சை தாங்காமல், சூரிய தேவதை மலைகள் நிறைந்த சொர்க்கத்தில் போய் ஒரு மாளிகையில் ஒளிந்துகொண்டு விட்டாளாம். உலகம் எங்கும் ஏக இருள் வந்து கவிந்துகொண்டது. எவருக்கும் ஒன்றும் தோன்றவில்லை. ஒரே குழப்பம். அப்போது 'உஜுமி' என்ற சின்னத் தேவதை ஒருத்தி ஓடி வந்தாளாம். சூரியதேவதை எந்த மாளிகையில் கதவைத் தாழிட்டு ஒளிந்துகொண்டாளோ அதன் வாசலில் நாட்டியமாட ஆரம்பித்தாள். அவள் ஆட ஆடச் சொர்க்கத்தில் உள்ள அனைவருமே அதில் மயங்கி வந்து குவிந்துவிட்டார்கள். சூரிய தேவதையாலும் கதவை அடைத்துக்கொண்டிருக்க முடியவில்லை. வெளியில் வந்தாள். உடனே தயாராகக் காத்துக்கொண்டிருந்தவர்கள் அந்தக் கதவை அடைத்துப் பத்திரமாக மூடிவிட்டார்கள். அப்போதுதான் மறுபடியும் உலகத்துக்கு வெளிச்சம் வந்தது.

இது ஜப்பானியரின் புராணக் கதைகளில் ஒன்று. இது முதல் நாட்டியக் கலையின் ஆரம்பம்.

1186-இல் சீனாவிலிருந்து ஜப்பானுக்கு 'நோ' என்ற நாடகம் வந்தது. சீனாவில் நடிப்பவர்கள் சாதாரணமாக முக

மூலம்: ரங்கபூமி, (கன்னடம்: நூறுவது விசேஷ மலர்), மைசூர்.

மூடி போட்டுக்கொண்டுதான் ஆடு வது வழக்கம். கதையைப் பின் பாட்டுக்காரர்கள் சொல்லுவார்கள்; நடிப்பவர்கள் பேசுவதுமில்லை, பாடு வதுமில்லை. எல்லாம் அபிநயந் தான். இதைப் படைவீரரும் பாளை யக்காரரும் ஆதரித்துவந்தார்கள். இது எல்லாருக்கும் ரசிக்கவில்லை யாதலால் வேறு வித நாடகங்களை இயற்ற ஆரம்பித்தார்கள்.

1704-இல் ஒகுனி என்ற தேவ தாசி, நாடகம் ஒன்றை ஆரம்பித் தாள். அதில் பாட்டு, நாட்டியம் எல் லாம் உண்டு. அதைத்தான் 'கபூகி' என்கிறார்கள். 'கபூகி' என்பதற்குச் சீனபாஷையில் சங்கீதம், நாட்டியம், கலை என்று அர்த்தம். இந்தக் 'கபூகி' யை முதல் முதல் ஆற்றங்கரையில் மேடை போட்டு ஆட ஆரம்பித் தாள் அவள். அநேகமாய் எல்லாரும் இதை ரசித்தார்கள். இதனால் ஒகு னிக்கும் அவளுடைய நாடகத்தில் நடிப்பவர்களுக்கும் நல்ல புகழும் வருமானமும் கிடைத்தன. உயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிய ஆரம் பித்தார்கள். தபலா, மிருதங்கம் இவற்றோடு புல்லாங்குழல், வீணை எல்லாம் சேர்ந்தன. வீணையை அவர்கள் 'ஸாமஸீகா' என்கிறார்கள். நாளடைவில் நல்ல பாட்டுக்களையும் கீர்த்தனங்களையும் இயற்றினார்கள்.

'கபூகி' அபிவிருத்தி அடைய அடைய அதனால் அதிகக் கேடுகள் விளைய ஆரம்பித்தன. தேவதாசிகள் வேஷம் போட்டு நடிப்பது எல் லாரையும் மயக்க ஆரம்பித்து விட்டது. அநேக விதமான கலகங் கள் தலையெடுத்தன. 1629-இல் பெண்களே இதில் நடிக்கக் கூடா தென்று அரசாங்கம் உத்தரவு போட்டது. இருபத்தைந்து வருஷங்களாகச் செழித்து வந்த நாடகத்தை நிறுத்த ஒகுனிக்கு மனம் வரவில்லை. ஆண்களையே முழுதும் நடிக்க வைப்பது என்று முடிவு செய்து அப்படியே நடத்தவும் நடத்தினாள். சில வருஷங்களுக்குப் பிறகு பெண் கள் மேடைக்கு வந்தார்கள். என்றாலும் 'கபூகி'க்கு மட்டும் வர வில்லை. 1630-இலிருந்து புருஷரே ஆடிவந்த 'கபூகி'க்கு ஏனோ கேடுகாலம் வந்தது. ஜனங் கள் உற்சாகத்தோடு கூட்டங் கூட்ட மாக நாடக மேடைகளில் குவிந் தார்கள். அவர்கள் நடத்தையில் சீர்கேடு ஏற்பட்டது. சர்க்கார் மிகவும் கடுமையான சட்டங்களை இயற்றி நாடகம் ஆடுவதையே நிறுத்தி விட்டார்கள். இவ்வ ளவு நடந்தும் 'கபூகியை' அடியோடு ஒழிக்க முடியவில்லை. அது எப்படியோ ஒருவிதமாக நடந்துகொண்டே வந்தது. 1653-இல் சற்று வயதான ஆண் கள், அதுவும் உச்சிக் குடுமி வைத் துக் கொண்டவர்கள் மட்டும் நடிக்கலாம் என்று உத்தரவு பிறந் தது. இவ்வளவு நிர்ப்பந்தத்திலும் ஆண்கள் இதில் மிகவும் முன் னேற்றம் அடைந்தார்கள்; பெண் வேஷம் போடுவதில் மிகவும் தேர்ச்சி பெற்றதோடு வாழ்க்கை யில் சுபாவமாகவே பெண்களைப் போல நடந்துகொள்ளும் பழக் கம் அவர்களுக்கு ஏற்பட்டது. இப்போது யார் வேண்டுமானாலும் 'கபூகி'யில் நடிக்கலாம். இப்படி நடிப்பவர்களில் இன்று உட்மோன் என்பவர் சிறந்து விளங்குகிறார். அவருக்கு வயது அறுபது. ஆனாலும் அவர் 'கபூகி'யில் பெண் வேஷம் போட்டு நடிப்பதைப் பார்த்தால் அவரைப் புருஷன் என்றே எவ ரும் சொல்ல முடியாது. இப்படி எவ்வளவோ நடிகர்கள்.

'கபூகி'யைத் தவிர 'நோ' என்று ஓர் ஆட்டமும் உண்டு. இது முக மூடிகளைப் போட்டுக்கொண்டு ஆடு வது. இதில் பொம்மலாட்டமும் வேண்டியது உண்டு. இதில் நடிப்ப வர்கள் பாடவோ பேசவோ வேண் டாம். எல்லாம் பின்பாட்டுக்காரர் அல்லது பக்கவாத்தியக்காரர் பாடு. ஆனல் எல்லாரும் அதிகமாக விரும்புவது 'கபூகி'தான்.

இப்போது நடைமுறையில் இருக்கும் நாடகங்களில் இரண்டு விதம்: ஒன்று, புராணங்களைத் தழுவி வரும் கதைகளாக நடிப் பது. மற்றது, சமூக மாறுதல்களை ஒட்டியது. இப்படி 1688-இலிருந்து நடந்துவருகிறது. இரண் டிலும் நாட்டியம் என்பது தனியே நடக்கும்.

ஜப்பானில் உள்ள நாடக மேடை கள் எல்லாம் சுற்றும் மேடைகள் (Revolving Stages). வெள்ளைக் காரருக்கு முன்பே இதை ஜப்பானி யர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள். இந்தச் சுழலும் மேடைகளோடு ஒட்டினுற்போல் பூம்பாதை ஒன்று அமைத்திருப்பார்கள். இந்தப் பாதையின் இரண்டு பக்கத்திலும் அழகிய பூஞ்செடிகள் கண்ணைப் பறிக்கும். இதை அவர்கள் 'ஹன மாசி' என்கிருர்கள். இது எல்லா ரும் பார்க்கும்படி அமைந்திருக்கும். நாடகத்தில் நடிப்பவர்கள் தங்கள் பாகம் முடிந்ததும் மேடையி லிருந்து இறங்கி இதன் வழியாகத் தான் போகவேண்டும். அப்போ தும் நாம் அவர்களை நன்ருய்ப் பார்க்கலாம். 'கபூகி'யில் பாட்டைப் போலவே ராகம் போட்டுப் பேசுவது வழக்கம். அநேகமாய் எல்லாம் கூத்துப் போலவே இருக் கும். பாஷையும் அப்படித்தான்.

நாடக மேடைகளில் இயற்கைக் காட்சிகளே அதிகம். ஜப்பானியர் கள் சுபாவத்திலேயே இயற்கையை ரசிப்பவர்கள். ஜப்பானிய ஓவியர்களை இயற்கையின் அடிமைகள் என்றே சொல்லலாம். திரைகளில் காட்சி களைக் காணும்போது சிலர் மெய்ம் மறந்துவிடுவார்கள். 'கபூகி' பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகி இரவு 11 அல்லது 12 மணிக்கு முடியும். இந்த நேரத்தில் ஐந்து விதமான ஆட்டம் காட்டுவார்கள். டிக்கெட்டின் விலை மூன்று யென் கள் முதல் 15 யென் வரை உண்டு. நாடகம் பார்க்க வருவோரில் பெண்கள்தான் அதிகம். வந்தவர் கள் அதை முழுவதும் பார்த்துக் கண்ணீர் விடவேண்டும். இல்லா விட்டால் நாடகம் பிரயோஜன மில்லையாம். ஐந்து அங்கமுள்ள நாடகத்தில் ஒரு கட்டம் நிச்சயம் துக்கம் தருவதாக அமைந்திருக்க வேண்டும். 'கபூகி'யில் உடைகள் எல்லாம் சரிகையாகவே இருக்கும்.

'தகரஜூக' என்பது ஆங்கில நாடகங்களைத் தழுவி அமைந்தது. இதில் நடிப்பவர் எல்லாரும் பெண்கள். ஜப்பானில் ஆட் டமோ, கூத்தோ எல்லாம் இரவு 10 மணி வரையில்தான். 70 லட்சம் மக்கள் வசிக்கும் டோக்கி யோவை இரவு 10 மணிக்கு மேல் பார்த்தால் ஒரே பயங்கர மாக இருக்கும். ஒரு மூலையில்கூட விளக்கு இராது. நாடக மேடை களிலோ கொட்டகைகளிலோ ஒரு வர் மேல் ஒருவர் விழாமல் ஜனங் கள் ஒரே வரிசையாக எறும்புச் சாரிபோல் ஊர்ந்து சென்று டிக் கெட் வாங்குவார்கள். அவர்கள் தங் களுடைய கலைகளை அலட்சியம் செய்வதில்லை. இந்த விஷயத்தில் நாம் அவர்களை அவசியம் பின்பற்ற வேண்டும்.

மரண தண்டனை

ஆர். கே. ரானடே

கொலை செய்தவனைப் பழிக்குப் பழி வாங்குவது சரியா? நம் புராதன முனிவர்களும் புதிய ஆராய்ச்சிக்காரர்களும் சொல்வதை இங்கே பார்ப்போம்.

பழங்கால முதற்கொண்டு உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் மரண தண்டனை பல உருவத்தில் இருந்து வருகிறது. மனிதன் வனவாசியாக வாழ்ந்த காலத்தில் மரண தண்டனையைப் பிரமாதமாகக் கருதவில்லை. மனித சமுதாயம் வளர வளர மனிதனுடைய உயிரின் மதிப்பு அதிகமாயிற்று; மரண தண்டனை விஷயம் மிகவும் சிக்கலாகிவிட்டது. மரணதண்டனை வேண்டுமென்றும் வேண்டாமென்றும் சொல்லும் இரு வேறு கட்சியினரும் தங்கள் தங்கள் கட்சியைப் பலமாக எடுத்துச் சொல்லிக்கொண்டே வருகிறார்கள். சட்டத்தின் பேரைச் சொல்லிப் பலியிடுவதற்கு மனித உயிர் அவ்வளவு சாமான்யமானது அல்ல, புனிதமானது என்றும், குற்றத்துக்காகக் கடுந்தண்டனை விதிக்க வேண்டுமானால் வேறு வகையில் போதுமானபடி தண்டிக்கலாம் என்றும் மரண தண்டனை கூடாதென்பவர்கள் சொல்கிறார்கள். அநுஷ்டானத்தில் நடக்க முடியாதென்றும், கருணை காட்டினால் அபாயத்துக்கு உள்ளாகவேண்டுமென்றும் மற்றக் கட்சியார் சொல்கிறார்கள்.

பழங்காலத்தில் அடிக்கடி போர்கள் நடந்துகொண்டேயிருந்தன. ஹிம்சையால் ஏற்படும் மரணம் சர்வசாதாரணமான சமாசாரம். ஆகவே, மரணதண்டனையை அந்தக் காலங்களில் அசாதாரணமான காரியமென்று நினைக்கவில்லை. குற்றத்துக்குரிய தண்டனையாகவும், பிறர் குற்றம் செய்யாமல் தடுக்கும் உபாயமாகவும் அதைக் கருதினார்கள்.

இப்போது மனப்பான்மை மாறியிருக்கிறது. மனிதனுடைய உயிர் புனிதமானது என்ற உணர்வு வந்திருக்கிறது. மரண தண்டனையிருந்தால் குற்றம் செய்யப் பயப்படுவார்கள் என்னும் விஷயமே சந்தேகமாக இருக்கிறது. குற்றம் செய்யும் மனப்பான்மையுடையவர்கள் தண்டனை அடைந்தவர்களின் முடிவைக் கண்டு பயந்து போய் அந்த மாதிரி குற்றங்களைச் செய்யமாட்டார்கள் என்பது பழைய காலத்தவர் அபிப்பிராயம். விஞ்ஞான ரீதியாகப் பார்த்தால் எல்லா மன இயல்புகளுக்கும் இது ஒத்ததாக இல்லை.

நியாயஸ்தலத்தில் குற்றவாளி என்று தீர்ப்பு அளிக்கிறார்கள். அந்தத் தீர்ப்பு உண்மையை ஒட்டியது என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ஆனால் மரணதண்டனைக்குப் பரிகாரம் ஒன்றும் இல்லை. இதனால் எல்லாக் கொலைகளையும் விடக் கொடுமையானது சட்டபூர்வமான இந்தக் கொலை என்று அறிஞர்கள் காரணம் காட்டுகிறார்கள்.

காப்பிரைட்: இந்தியன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஜூலை '49), சென்னை.

அன்றியும் தண்டனை அளிப்பது குற்றவாளியைத் திருத்தும்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. மரணதண்டனை விஷயத்தில் இந்த நோக்கம் பயன்படாது.

இந்தியன் பீனல் கோடின்படி, மரணதண்டனை அல்லது ஆயுள் தண்டனை பின்கண்ட குற்றங்களுக்கு வழங்குவதற்குரியது: (1) அரசரை எதிர்த்துப் போர் தொடுப்பது (பிரிவு 131), (2) உண்மையில் நடந்த கலகத்துக்குத் தூண்டு கோலாக இருப்பது (பிரிவு 132), (3) நிரபராதி ஒருவனை மரண தண்டனை அடையத் தக்கபடி பொய்ச்சாட்சி சொல்வது அல்லது தயார் செய்வது (பிரிவு 194), (4) கொலை (பிரிவு 302), (5) மைனரையோ புத்தி ஸ்வாதீனமில்லாதவரையோ போதையுள்ளவரையோ தற்கொலை செய்து கொள்ளத் தூண்டுவது (பிரிவு 305), (6) கொள்ளையும் கொலையும் (பிரிவு 396), (7) ஆயுள் தண்டனை பெற்ற குற்றவாளி கொலை செய்ய முயலுதல் (பிரிவு 307).

கொலையைப்பற்றிய செக்ஷனில் யார் அந்தக் குற்றத்தைச் செய்தாலும் அவருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்க வேண்டுமென்று இருக்கிறது. இந்தியன் பீனல் கோடின் திட்டத்தைப் பொறுத்தவரையில் சாதாரணமாக எது குறைவான தண்டனையோ அதையே கொடுக்கவேண்டுமென்றும் அசாதாரணமான சந்தர்ப்பங்களில் கடுமையான தண்டனை அளிக்க வேண்டுமென்றும் சொல்லலாம். எப்படியானாலும் கொலைக் குற்றங்களில் நடந்துள்ள வழக்குகளின்படி சாதாரணமாகக் கொலை செய்தவனைத் தூக்கிலிடுவதும் அசாதாரணமான சந்தர்ப்பங்களில் ஆயுள் தண்டனை தருவதும் விதியாகப் போய்விட்டன. இதை ஆதரிக்க மூலச் சட்டத்தில் ஒரு குறிப்பும் இல்லை. கிரிமினல் புரொஸீஜர் கோட், மரண தண்டனையே சாதாரண தண்டனை யென்றும், ஆயுள் தண்டனை விசேஷ தண்டனை என்றும் தெளிவாகச் சொல்லவில்லை. பீனல் கோடின் ஆசிரியர்கள் மரண தண்டனை மிகவும் அபூர்வமாகவே அளிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள ஹைகோர்ட்டுகள் பலவற்றிலும் நடைபெற்ற வழக்குகளை ஆராய்ந்தால், பல சந்தர்ப்பங்கள் மரண தண்டனை விதிக்கவொட்டாதபடி அமைந்திருந்ததை உணரலாம். மிகவும் இளமை, மிக்க முதுமை, பெண்பாலாக இருத்தல், தன் மனைவியின் கற்பில் கொலையாளிக்கு இருந்த சந்தேகம், முன் ஏற்பாடு இல்லாமல் செய்தது, சச்சரவுகள் ஆகிய காரணங்களைக்கொண்டு குறைவான தண்டனையை விதித்திருக்கிறார்கள். வேறு சில வழக்குகளில் நெடுங்காலம் தண்டனையை நிறைவேற்றாமல் இருந்து, அந்தக் காலத்தில் குற்றவாளி அநுபவித்த வேதனையை எண்ணி மரண தண்டனையை மாற்றியிருக்கிறார்கள். பல சட்ட அறிஞர்கள் இந்தியாவில் மரண தண்டனை பற்றிய சட்டம் திருப்தியளிக்கும் வகையில் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

நார்வேயில் 1905 ஜனவரி முதல் தேதியிலிருந்து மரண தண்டனையை அடியோடு நிறுத்திவிட்டார்கள். அதன் பிறகு கொலைக் குற்றங்கள் குறைவாக இருப்பதாக ஓர் அறிக்கை கூறுகிறது. அப்படியே ஸ்வீடன்

சிறையதிகாரி ஒருவர், அங்கே மரண தண்டனையை எடுத்து விட்ட பிறகு குற்றம் குறைந்திருக்கிற தென்று சொல்கிறார்.

நார்வே, ஸ்வீடன், டென்மார்க், பின்லந்து, ஹாலந்து, பெல்ஜியம், இத்தாலி, போர்ச்சுகல், ஸ்விட்ஸர்லாந்து, கிரீன்ஸ்லாந்து, உருகுவே முதலிய இடங்களில் மரண தண்டனையை ஒழித்துவிட்டார்கள். இதனால் குற்றங்கள் அதிகமாகி யிருப்பதாகத் தெரியவில்லை; உண்மையில் குறைவாகவே இருக்கின்றன.

மகாபாரதம் சாந்திபர்வத்தில் ஓரிடத்தில் த்யுமத்ஸேனனென்னும் அரசனுக்கும் அவனுடைய குமாரன் சத்தியவானுக்கும் சம்பாஷணை நடைபெறும் கட்டம் வருகிறது. "சில சமயங்களில் புண்ணியம் பாவத்தைப் போலத் தோற்றுகிறது. பாவம் புண்ணியத்தைப் போலத் தோற்றுகிறது; தனி மனிதனைக் கொல்வது தருமமாகாது" என்று அரச குமாரன் சத்தியவான் சொல்கிறான். த்யுமத்ஸேனன், "தூக்கிவிட வேண்டிய குற்றவாளிகளை அப்படிச் செய்யாமல் விடுவது தருமமானால் பிறகு தருமத்துக்கும் அதருமத்துக்கும் வித்தியாசமே இராது" என்கிறான்.

சத்தியவான் விடை கூறுகிறான்: "குற்றவாளியின் உடம்பை அழிக்காமல் சாஸ்திரங்களில் சொல்லியபடி அவனை அரசன் தண்டிக்க வேண்டும். குற்றவாளியைக் கொல்வதனால் அரசன் பல நிரபராதிகளைக் கொல்பவனாகிறான். ஒரு திருடனைக் கொன்றுவிடுவதனால் அவனுடைய மனைவி, தாய், தந்தை, குழந்தைகள் எல்லாரும் உயிரை இழக்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். கெட்டவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் விஷயத்தில் அரசன் நன்றாக ஆலோசிக்க வேண்டும். சில சமயங்களில் கெட்டவன் பக்தியுள்ளவர் ஒருவரால் திருந்துகிறான். கெட்டவர்களுக்கு நல்ல பிள்ளைகள் பிறப்பதையும் பார்க்கிறோம். ஆகவே, கெட்ட மனிதர்களை அழித்துவிடக் கூடாது. நித்தியமான தருமத்துக்கு அது பொருந்தாது. அவர்களுக்குச் சாமான்யமான தண்டனை விதிக்கலாம். விலங்கு பூட்டலாம்; சிறையில் அடைக்கலாம்; அங்கவீனம் செய்யலாம்; இவற்றால் அவர்கள் தங்கள் குற்றத்துக்கு இரங்கும்படி செய்ய இடமுண்டு. அவர்களுக்கு மரண தண்டனை விதித்து அதனால் அவர்களின் உறவினர்களைத் தண்டிப்பது கூடாது."

இதனால் பழைய காலத்து முனிவர்கள் மரண தண்டனையைப் பற்றி எவ்வளவு கவனமுள்ளவர்களாக இருந்தார்கள் என்பது தெரியவரும்.

நவீன ஆராய்ச்சியில் குற்றத்தை விடக் குற்றவாளியைப் பற்றிய கவனந்தான் அதிகம்; குற்றத்துக்குப் பரிகாரம் வேண்டும் என்பது மாறிக் குற்றவாளியையும் சமுதாயத்தையும் திருத்த வேண்டும் என்ற நோக்கம் வந்திருக்கிறது. மனிதனுடைய நடத்தையை உருவாக்குவதற்கும் குற்றம் செய்வதற்கும் காரணங்கள் என்ன என்று ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அதனால் விஞ்ஞான ரீதியாகக் குற்றங்களுக்குரிய தண்டனைகளை விதிக்கும் முறை உருவாகி வருகிறது. விஞ்ஞானம் வளர வளர, மனித சமுதாயத்தைத் திருத்த வேண்டும் என்ற எண்ணம் வளர வளர, குற்றவாளியைத் தனிப்பட்ட நோயாளியாகக் கவனிக்கவேண்டிய நிலை இப்போது

வந்திருக்கிறது. குற்றங்களைச் சொல்லி அவற்றிற்கு இன்ன இன்ன தண்டனைகளென்று பட்டியல் கொடுக்கும் பழைய முறை காட்டுமிராண்டித்தனமானது என்ற கருத்து உண்டாகியிருக்கிறது. குற்ற ஆராய்ச்சி சாஸ்திரத்தில் இப்போது குற்றவாளியை நோயாளியைப் போலக் கவனிக்கும் முறை முன்னிடம் பெற்றிருக்கிறது; குற்றத்தைக் கவனிப்பதல்ல.

மரண தண்டனை சம்பந்தமாகப் பொதுவாக இந்தியாவில் கோர்ட்டுகளில் ஏற்பட்ட முடிவுகளெல்லாம், குற்றத்தின் அளவையும் அதைச் செய்ய நேர்ந்த சந்தர்ப்பங்களையும் கவனிப்பது நீதிபதிகளின் கடமை என்ற கொள்கையைச் சார்ந்தவை. சகவாசம், முன் நிகழ்ச்சிகள், குற்றவாளியின் வளர்ப்பு முறை, சமுதாயப் பொருளாதாரச் சூழ்நிலை ஆகிய இவை நியாயஸ்தல விசாரணைக்கு அப்பாற்பட்டவை. இந்த விஷயங்களை, புதிய குற்ற ஆராய்ச்சியின்படி, முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை. இவற்றைக் கவனிக்காமல் கொடுக்கும் தண்டனை தவருக இருக்க நேரலாம்.

சுதந்தர இந்தியாவில் மரண தண்டனையைப்பற்றிய சட்டத்தை, முன்னேற்றமடைந்துள்ள மற்ற நாடுகளைப் போன்ற வகையில் சீர்திருத்த வேண்டும். குற்றத்தைக் காட்டிலும் குற்றவாளியைப்பற்றிச் சிந்தித்து இந்தத் திருத்தம் நடைபெற வேண்டும்.

க்விஸ் விடை

(19 - ஆம் பக்கத்திலுள்ள கேள்விகளுக்கு விடை)

அரசியல்: (1) இந்திய சுதந்தரச் சட்டம். (2) பிரிட்டிஷ் பார்லிமெண்ட். (3) இந்தியா.

விஞ்ஞானம்: (1) கண்கள் இல்லை. ஆனால் தனது மெல்லிய தோலினால் இருளையும் ஒளியையும் அது உணர்கிறது. (2) தண்ணீரின் மேற்பரப்பில் நீர் அணுக்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொண்டு மெல்லிய ஜவ்வுத் தோலைப்போல் அமைந்திருக்கின்றன. இதை 'மேற்பரப்பு டென்ஷன்' என்பார்கள். இந்தத் தோலைப் பீறினால்தானே வேறு வஸ்து உள்ளே புக முடியும்? ஊசி, பிளேடு இவற்றின் நிறை அப்படிப் பீறப் போதிய கனம் அல்ல. (3) எப்போதும்போல் வாழ்வோம்.

சரித்திரம்: (1) 6-10-1906. (2) பாரதியாரின் 'இந்தியா' தான் முந்தியது.

பொது: (1) 'காஸொலீன்' என்கிருர்கள். (2) "இந்தியாவுக்கு" என்று சொல்லியிருப்பார். (3) வின்ஸ்டன் சர்ச்சில்.

தர்க்க அறிவு: 1. விஷயம் உண்மைதான். ஆனலும் ஊகம் தவறு. 2. இதிலும் விஷயம் உண்மையே. ஊகம்தான் தவறு. 3. தவறு; ஏனென்றால், பொன்னி ஒரு நாய்க்குட்டியாகக்கூட இருக்கலாம். 4. சரி. 5. சரி.

சிறு கதை :

ராஜபோக ஹோட்டல்

ரா. க. கும்போஜ்கர்

பள்ளிக்கூடப் படிப்பில் தவறிய வசந்தன், வாழ்க்கையில் போட்ட புள்ளி எதுவும் தவறியதில்லை. ஆனால் நாளடைவில் அவன் போன வழி, சர்வாதிகாரியின் வழி. ஒரே நாளில் அவனுடைய திட்டம் அத்தனையும் புஸ்வாணமாயிற்று. 'எல்லாருடைய முன்னேற்றத்திலும் நம்முடைய முன்னேற்றம் இருக்கிறது' என்ற கொள்கை இல்லாதவன் எவனும், தொழிலில் மட்டுமல்ல, வாழ்க்கையின் எந்தத் துறையிலும் நிலைக்க முடியாது.

ஹிட்லர் ஜெர்மனியில்தான் பிறந்தான் என்றோ, அரசியலில்தான் முன்னேறினான் என்றோ நினைக்கவேண்டிய அவசியமில்லை. எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் எந்தத் துறையிலும் ஹிட்லர் இருக்கிறான். சிக்கிமுக்கிக் கல்லும் இரும்பும் மோதியவுடனே நெருப்புப் பொறி பறக்கிறது. குறிப்பிட்ட ஒரு மனித சுபாவமும், நிலைமையும் மோதும்போது ஹிட்லர் பிறக்கிறான். ஹோட்டல் தொழிலில் வசந்தன் இப்படித்தான் ஒரு ஹிட்லரானான்.

நான் எஸ். எஸ். எல். ஸி., வகுப்புக்குப் போன புதிதில் அவனுக்கும் எனக்கும் பழக்கம் ஏற்பட்டது. முந்திய வருஷத்துப் பரீட்சையில் தவறிப்போன மாணவர்களில் அவனும் ஒருவன். சில நாளைக்கெல்லாம் நாங்கள் நெருங்கிய நண்பர்களானோம். அவனுக்குத் தெரியாத பாடத்தை நான் சொல்லிக் கொடுப்பேன். அதற்குப் பதிலாக அவன் என்னை ஹோட்டலுக்கு அழைத்துப் போய், பலகாரம் வாங்கிக் கொடுப்பான். அவன் ஒரு நாளாவது என்னைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போனதில்லை. வீட்டிலே அவனுடைய சொந்தத் தாய் இல்லாததுதான் அதற்குக் காரணம்.

அவனைப் பெற்றெடுத்ததும், சீக்கிரமே அவன் தாய் சொர்க்கத்தைப் பார்க்கப் போய்விட்டாள். கொஞ்ச நாள் கழித்து, அவனுக்குச் சித்தி வந்தாள். ஆனால் அவனை வளர்த்துப் பெரியவனாக்கியவள், அவனுடைய தாயின் தாய்: அதாவது பாட்டி. பாட்டிக்கு அவள் ஒரே பெண்; ஆகையால் பேரனைப் பாட்டி அருமையாக வளர்த்தாள். வசந்தனுடைய பாட்டியின் வீடு கன்னட தேசத்திலே இருந்தது. அந்த ஊரிலே மராட்டி கற்றுக் கொள்ள அவனுக்கு வசதி இல்லை. ஆகையால் அவன் சற்றுப் பெரிய

காப்பிரைட்: வஸந்த் (மராட்டி: ஜூலை '49) பம்பாய்.

வன் ஆனதும், அவன் தகப்பனுர் அவனைத் தம் வீட்டுக்கு அழைத்து வந்து, மராட்டிப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்.

நடுவில் அவனுடைய சித்திக்குக் குழந்தைகள் பிறந்திருந்தன. வசந்தன் வந்தது அவளுக்கு ஆனந்தமாகத்தான் இருந்தது. பையன் வந்துவிட்டானே என்பது அல்ல அதற்குக் காரணம்; தன் அதிகாரத்துக்கு உட்பட்டு வேலை செய்யக் கையோடு காவலாக ஒரு பையன் வந்திருக்கிருனே என்றுதான் அவள் மகிழ்ந்தாள். இந்த நிலைமையில் வீட்டில் இருப்பதென்ருல் முள் மேல் இருப்பதுபோலத்தான் அவனுக்குத் தோன்றியது. லீவு விட்டதும் அவன் பாட்டிவீட்டுக்குப் போய்விடுவான். மாற்ருந்தாயிடம் தான் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுவதை அவளிடம் சொல்வான். அவள் அவனை அணைத்துக்கொண்டு அழுது ஓலமிடுவாள். விடுமுறை தீர்ந்து அவன் புறப்படும்போது அவனிடம் கொஞ்சம் பணம் கொடுத்து, "உனக்குப் பசித்தால் நீ நேராக ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிடடா" என்று உபதேசிப்பாள்.

இப்படிப் பாட்டியின் பணமும் உபதேசமும் கிடைத்தபிறகு ஹோட்டலுக்குப் போக யாரிடந்தான் வசந்தன் பயப்பட வேண்டும்? எங்கள் நகரத்திலுள்ள எல்லா ஹோட்டல்களும் அவனுக்குத் தெரியும்; இன்ன ஹோட்டலுக்கு இதனுல் பெருமை என்று அவன் மனப்பாடமாக ஒப்பிப்பான்.

அந்த வருஷம் அவன் படிக்க நான் உதவி செய்துங்கூட, அவன் மறுபடியும் தவறிவிட்டான். ஒரு நாள் ஹோட்டலில் நாங்கள் பாதாம் ஹல்வா சாப்பிட்டோம். எப்போதுமே என் பணத்தையும் அவன்தான் கொடுப்பது வழக்கம். ஆனுல் இந்தச் சமயத்தில் அவன் பணம் கொடுப்பது எனக்கு உசிதமாகத் தோன்றவில்லை. "என்னடா வசந்தா, மேலே என்ன செய்யப்போகிருய்? கஷ்டப்பட்டுப் படித்து இன்னும் ஒரு வருஷம் பார்த்துவிடேன்" என்று நான் அநுதாபத்தோடு சொன்னேன்.

"சேச்சே! இந்த மூளை வேலையெல்லாம் என்னுல் ஆகாது. என்னுடைய மூளை என் தலையில் அல்ல; வயிற்றிலே இருக்கிறது!" என்று அவன் பதில் சொன்னுன்.

மூளைவேலைக்கு அவன் லாயக்கில்லை என்று யாராவது சொல்ல முடியுமா? 'மூளைவேலை என்ருல் படிப்பு' என்ற அர்த்தத்தில்தான் அவன் இதைச் சொன்னுன்.

நான் மேல்படிப்புக்குப் பட்டணத்துக்குப் போய், பி. ஏ., பாஸ் செய்து திரும்பி வந்தபோது, வசந்தன் எங்களூரில் பெரிய பணக்காரனுகிவிட்டான். சாயங்காலம் நான் அவனைப் பார்க்க, அவனுடைய 'ராஜபோக லஞ்ச் ஹோமு'க்குப் போனேன். உட்கார்ந்து அவனோடு வம்படிக்கும் நேரமல்ல அது. 'ராஜபோக லஞ்ச் ஹோமி'ல் ஒரே கூட்டம். இரவு பத்து மணிக்கு அவன் என்னைப் பார்க்க வரச் சொன்னுன்.

மறுபடி போனேன். என்னைப் பார்த்ததும் அவன் தன் உதவியாளைக் கௌண்டரில் உட்கார வைத்துவிட்டு, ஹாலுக்குப் பக்கத்திலிருந்த தன் அறைக்கு என்னை அழைத்துப் போனுன்; நல்ல டிபன் கொண்டு வரச் சொன்னுன். நாங்கள் இருவரும் பழைய நாள் சிநேகிதத்தோடு பேசினேம். கௌண்டரில் இருந்த ஆசாமியின் நடவடிக்கைகள்



வசந்தன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து நன்றாகத் தெரிந்தன; பேச்சின் நடுவில் அவன் அந்தப் பக்கமாக இரண்டொரு தடவை பார்த்தான். அவனிடம் பேசியதில் நான்கு வருஷத்திய சரித்திரம் எனக்குத் தெரிந்தது.

பரீட்சையில் இரண்டாவது தடவை தவறியதும், படிப்புக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு, ஹோட்டல் வைப்பதென்று வசந்தன் தீர்மானித்தான். ஹோட்டல் வைப்பதென்றால் மூன்று விஷயங்களை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். முதலாவது, ஹோட்டலில் தின்பண்டங்களும் 'டிரிங்கு'களும் உயர்தரமாக இருக்க வேண்டும். இரண்டாவது, ஹோட்டலின் முழு மேற்பார்வையிலும் சிறந்த திறமை இருக்கவேண்டும். மூன்றாவது, ஹோட்டல் உள்ளும் புறமும் கவர்ச்சிகரமாக இருக்கவேண்டும். முதலாவது விஷயத்துக்கு மட்டும் வசந்தனுக்கு ஒரு நல்ல துணை வேண்டியிருந்தது. அவன் தனக்குத் தெரிந்த யார் யாரைப் பற்றியோ யோசித்துப் பார்த்தான். கடைசியில் அவனுடைய பரீட்சையில் தேறியவர், கிரீன்ஸ் உடுப்பி ஹோட்டலில் இருந்த முக்கியச் சமையற்காரர்தான். இரவு ஒன்பது மணிக்குமேல் வசந்தன் கிரீன்ஸ் ஹோட்டலுக்குப் போய், உள்ளே ஓர் அறையில் டீ குடித்தபடி சிறிது பொழுது போக்கினான். அந்த வேளைக்குத்தான் அந்தச் சமையற்காரர் சாவகாசமாக வந்து அங்கே சிகரெட்டுக் குடிப்பது வழக்கம்.

வசந்தன் சிறுவயதில் கன்னட தேசத்தில் வளர்ந்தவனுகையால் அவனுக்குக் கன்னடம் தெரியும். நடுநடுவே அவன் அங்கே லீவில் போய்வந்ததனுல், வெகு நன்ருகக் கன்னடம் பேசுவான். உடுப்பிக் காரரைத் தன் பக்கம் இழுத்துக் கொள்ள, அவனுக்கு இது பயன் பட்டது. அவருக்கும் ஹோட்டல் சொந்தக்காரருக்கும் அடிக்கடி தகராறு இருந்ததனுல், மாதம் நூறு ரூபாய் சம்பளம் என்று சொன்னவுடனே அவர் அவனிடம் வேலை செய்ய ஒப்புக்கொண்டார்.

வசந்தன் முதல் சேகரிக்க முயன்ருன். உடனே பாட்டியின் ஊருக்குப்போய், பத்துப் பதினைந்து நாள் இருந்து எப்படியோ கொஞ்சம் முதல் சேகரித்துக்கொண்டு வந் தான். நல்ல வேளையாக, அவனுக்கு இடமும் வசதியாகக் கிடைத்தது. ஒரு நல்ல முகூர்த்தத்தில் அவன் 'ராஜபோக லஞ்ச் ஹோம்' ஆரம் பித்துப் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்தான்.

முதல் மாதக் கடைசியில் வரவு செலவுக் கணக்குப் பார்த்தபோது, தன்னைக் கட்டிக்கொண்டு போயிற்று. இரண்டாவது மாதத் திலிருந்து ஜனக்கூட்டம் அதிக மாயிற்று. எங்கே பார்த்தாலும் புது ஹோட்டலைப் பற்றித்தான் பேச்சு. தினசரி விற்பனை பத்து, நூறு, ஆயிரம் என்ற வரிசையில் வளர்ந்தது.

உலக மகாயுத்தம் மும்முரமாக இருந்த காலம். ஹிட்லரின் விமானப் படை லண்டன் நகரைத் துவம்சம் செய்தது. ஐரோப்பிய நாடுகள் கதி கலங்கின.

இந்தியாவில் ரேஷன் ஏற் பட்டது. ஹோட்டலுக்கு வேண்டிய சர்க்கரை முதலான அவசியப் பொருள்கள் கிடைப்பது அரிதா யிற்று. ஆனல் வசந்தனுடைய திறமை இந்தச் சங்கடங்களுக்கெல் லாம் ஈடு கொடுத்தது. மற்ற ஹோட்டலுக்குப் போகிறவர்கள் கூட இவனுடைய ஹோட்டலுக்கு வர ஆரம்பித்தார்கள்.

'ராஜபோக லஞ்ச் ஹோம்'ல் மகாராஷ்டிரம், வங்காளம், மைசூர், தமிழ்நாடு - அவ்வளவு ஏன், எந்த ஊர்ப் பட்சணம் வேண்டுமானுலும் கிடைக்கும். நடுவிலுள்ள பிரம் மாண்டமான ஹாலில் சின்னஞ் சிறு மேஜைகள்; அவற்றைச் சுற்றி அழ கான சோபாக்கள்; எங்கே பார்த் தாலும் பெரிய பெரிய நிலைக்கண் ணுடிகள்; பல நாட்டு அழகிகளின் சித்திரங்கள்; மேஜைமேல் பல பாஷைப் பத்திரிகைகள், கண்ணைக் கவரும் வெளிநாட்டுப் பத்திரிகை கள் - இவ்வளவுக்கும் முத்தாய்ப்பு வைத்தாற்போல, வசந்தன் கௌண்டரில் ஒய்யாரமாக வீற் றிருப்பான்.

ஒவ்வொரு மேஜைக்கும் அவன் ஒரு பையனைப் போட்டிருந்தான். அவனுடைய ஹோட்டலுக்கு வரும் ஆசாமி ஒருவர், ஒரு பையனை வசப் படுத்திக்கொண்டார். அவர் வயி ருரச் சாப்பிட்டுவிட்டு, நாலணுவுக்கு அந்தப் பையனைப் பில் போடச் சொல்லுவார். கழுகுப் பார்வை யுள்ள வசந்தனுடைய கண்ணுக்கு இது தென்படாமலா போகும்? இரண்டு தடவை அவன் அந்தப் பையனை விட்டுவிட்டான். மூன்ரு வது தடவை அந்த ஆசாமி பணம் கொடுக்கக் கௌண்டருக்கு வந்த போது, வசந்தன் அந்தப் பையனை உரக்கக் கூப்பிட்டு,"எண்டா பயலே, இவருடைய பில் ஒன்றேகால் ரூபாய் ஆகவில்லையா? நாலணு என்று ஏன் போட்டாய்?" என்று

கேட்டுப் பளாரென்று அவன் கன்னத்தில் ஓர் அறை விட்டான். அந்த ஆசாமி பேசாமல் ஒரு கோட்டை வைத்துவிட்டு நழுவினார். மறுநாளிலிருந்து அவரும் அந்தப் பையனும் ஹோட்டல் பக்கமே காடவில்லை. ஹோட்டலில் இருந்த பெரிய கூட்டத்தின் நடுவில் இந்தச் சம்பவம் நடந்ததனால், வசந்தனுக்கு லாபமே உண்டாயிற்று. 'எஜமானர் உஷாராக இருக்கிறார்' என்ற எண்ணம் எல்லோருக்கும் ஏற்பட்டது. ஹோட்டலை அலங்காரமாக வைத்துக்கொள்ளப் பணத்தைத் தண்ணீராகச் செலவழித்துங்கூட வருஷக் கடைசியில் ஆயிரக் கணக்கான ரூபாய் மிச்சப்பட்டது.

"பணம் இன்று வரும், நாளை போகும். கங்கை வெள்ளம் போல அது பாயும்போதே நம்முடைய வேலைகளைச் செய்துகொள்ள வேண்டும்" என்பது வசந்தனுடைய கொள்கை. விலையேற்றம் உச்சநிலையில் இருந்துங்கூட, அவன் தன் 'ராஜபோக'த்துக்காக ஒரு பிரம்மாண்டமான பங்களாவைக் கட்டத் திட்டம் போட்டான். நான் போனபோது கட்டிட வேலை வேகமாக நடந்துகொண்டிருந்தது. நான் அதிக நாள் தங்க முடியாமல் பட்டணத்துக்குத் திரும்பி விட்டேன். மறுபடி ஊருக்குப் போனபோது வேறு செய்திகள் என் காதுக்கு எட்டின.

இந்தப் புறம் பங்களாவின் கட்டிடம் மேலும் மேலும் எழும்பியது; அந்தப் புறம் வசந்தனுடைய விரோதிகள் வியாபாரத்தில் நஷ்டம் தாங்காமல் தமக்குள் 'நண்பர் சங்கம்' ஒன்று ஸ்தாபித்துக் கொண்டு, அவனுடைய முன்னேற்றத்துக்கு வெடி வைத்தார்கள்: அவர்களும் வியாபார அநுபவமுள்ளவர்கள். ஆகையால் இதற்குச் சரியான திட்டம் வகுத்தார்கள். 'ராஜபோக லஞ்ச் ஹோமி'ல் இருந்த உடுப்பிக்காரரை அங்கிருந்து அகற்றுவதுதான் அவர்களுடைய முதல் திட்டம். சர்க்கார் அதிகாரிகளிடம் வசந்தனைப்பற்றிக் கோள் சொல்லி, சில வல்வழக்குகளை ஆரம்பிப்பது அடுத்த திட்டம். இப்படி வரிசையாகப் பல திட்டங்கள்.

உடுப்பிக்காரர் கொஞ்சம் கொஞ்சமாக முணுமுணுக்க ஆரம்பித்தார். அடிக்கடி தகராறு வலுத்தது. ஒரு நாள் அவர் அவனிடம் வந்து, "எனக்கு லாபத்தில் பாதி கொடுத்தால்தான் இங்கே இருக்க முடியும்" என்று சொன்னார். கால் பாகம் கொடுத்துச் சமாதானமாகப் போவதாக வசந்தன் சொன்னான். ஆனால் அவர்களுக்குள் உடன்படிக்கை ஏற்படவில்லை. இதற்குள் வசந்தன் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது - பல முன்னணிகளில் போராட வேண்டி வந்தது. ஒரு நாள் உடுப்பிக்காரருக்கும் அவனுக்கும் சரியான சண்டை. அவர் விர்ரென்று ஹோட்டலை விட்டு நடந்தார்.

அவருக்குப் பதிலாக எத்தனையோ பேரை வசந்தன் வேலைக்கு வைத்தான். ஆனால் அவருடைய திறமை யாருக்கும் வரவில்லை. 'பேஷான பட்சணங்கள் கிடைக்கும் ஹோட்டல்' என்ற புகழும் நாளுக்கு நாள் மங்கியது. ஹோட்டலில் கூட்டம் குறைந்தது.

வசந்தனுடைய ஹோட்டல் தொழிலைப்பற்றிப் பல விதமான அபவாதங்களை அவனுடைய எதிரிகள் கிளப்பிவிட்டார்கள். பங்களா கட்ட ஆரம்பித்தபோது அவன் பாங்கியில் கொஞ்சம் கடன் வாங்கி

யிருந்தான். பாங்கிக்காரர்கள் அவனை நெருக்க ஆரம்பித்தார்கள். வியாபார மந்தத்தோடு புதிதாகப் பணம் கிடைப்பதும் அரிதாயிற்று. இதன் நடுவில், கள்ள மார்க்கெட்டில் அவன் சர்க்கரை வாங்கியதைப் பற்றிக் கோர்ட்டில் ஒரு வழக்கு வந்தது. அதை எதிர்த்து வாதாட அவனுக்கு நிறையப் பணம் செலவழிந்தது. அரைகுறையான பங்களாவை முழுசாகக் கட்டி முடிக்க அவனால் முடியவில்லை.

பல முனைகளில் போராட நேரிட்டதனால் வசந்தனுக்கு மன நிம்மதி இல்லை. முன்போலத் திறமையும் காட்ட முடியவில்லை. வியாபாரம் திவாலாக வேண்டிய நிலைமை வந்துவிட்டது. ஸாவ்கார்கள் கோர்ட்டில் ஜப்தி உத்தரவு வாங்கிக்கொண்டு அவன் வீட்டுக்குப் போனார்கள். அவனை எங்கும் காணவில்லை. தற்கொலை செய்துகொண்டிருப்பான் என்று சிலர் சொன்னார்கள். அவன் இனிமேல் தலைகாட்டவே மாட்டான் என்று சிலர் சொன்னார்கள்.

ஹோட்டல் தொழிலில் திடீரென்று உதித்து, புகழ்ச் சிகரத்திலே பிரகாசித்த ஒரு நட்சத்திரம் அஸ்தமித்தது. வசந்தனுடைய எதிரிகள் வெகு ஆனந்தமாக வெற்றித் திருநாளைக் கொண்டாடினார்கள். ஆனால் அது நிலையான ஆனந்தமாக இருக்குமா? ஒரு ஹிட்லர் போய்விட்டதனாலே, ஹிட்லர் என்ற தத்துவம் எப்படிப் போய்விடும்? குறிப்பிட்ட மனித சுபாவமும் நிலைமையும் மோதும்போது மற்றொரு ஹிட்லர் மறுபடியும் பிறக்கத்தான் பிறப்பான்.

ஆஸ்திக் கணக்கு

டச்சுக்காரர் தங்கள் குடும்பத்தில் மிகவும் குறைந்த எண்ணிக்கை கொண்ட எந்த ஓர் உடைமையையுங்கூடக் கணக்காகத் தெரிந்து வைத்துக் கொள்வார்களாம்.

ஓர் உதாரணம்:

"ஹெய்னி!" என்று தகப்பனார் கூப்பிட்டார்.

"என்ன?" என்று கேட்டுக்கொண்டே வந்தான் பையன்.

"ஓடிப் போய், நம் வீட்டில் எத்தனை வாத்துக்கள் இருக்கின்றன என்று எண்ணிக்கொண்டு வா!"

"சரி!" என்று சொல்லிவிட்டுச் சென்றான் ஹெய்னி.

சிறிது நேரம் சென்றது.

"ஹெய்னி!"

"என்ன?"

"வாத்துக்களை எண்ணிவிட்டாயா?"

"ஓ! எண்ணிவிட்டேன்."

"நன்றாக எண்ணிப் பார்த்தாயா?"

"பார்த்தேன்."

"எத்தனை வாத்துக்கள்?"

"ஒன்று!" என்று பதில் வந்தது.

சரத் சந்திரர்



சுருக்கியவர் : **த. நா. குமாரஸ்வாமி**

“இந்தியா முழுவதற்கும் மாணவர்களின் பாடமாக வைக்கக்கூடியவை சரத்சந்திரரின் நாவல்கள்” என்று மகாத்மா காந்தியே ஒரு சமயம் புகழ்ந்திருக்கிறார். அவருடைய நாவல்கள் ஏழை மக்கள், துன்புறுவோர் இவர்களின் வாழ்வைச் சித்திரிப்பவை. அவருடைய சொந்த வாழ்க்கை அநுபவம் செறிந்தது; உருக்கமானது.

ஆதாரங்கள்: (1) ‘சரத்சந்திர சட்டோபாத்யாயர்’—விரஜேந்திர பானர்ஜி; (2) ‘வாதாயனம்’ - சரத் நினைவு மலர்; (3) ‘ஜயந்தி உத்ஸர்க்கம்’; (4) ‘பாரத வர்ஷ’, ‘ப்ரபாஸி’க் கட்டுரைகள்; (5) சரத்பாபுவின் கடிதங்கள்.

சரத் சந்திரர்

மனிதர் உள்ளத்தோடு நெருங்கிய உறவு கொண்டாடி, வாழ்க்கையில் கண்ட அநுபவங்களை உன்னத சித்திரமாகத் தம் கதைகளில் புனைந்தவர் சரத்சந்திரர். வங்க இலக்கியத்தில் அவர் நிரந்தரமான இடம் பெற்றுவிட்டார். அவர் இவ்வளவு பிரபலமாவாரென்பதற்கு எந்தமாதிரி விசேஷமான முன் அறிவிப்பும் இல்லை. ஹூக்ளி ஜில்லாவைச் சேர்ந்த தேவானந்தபுரம் ஒரு சிறு கிராமம். அங்கே மதிலால் சட்டோபாத்தியாயர் என்று ஓர் ஏழைப் பிராம்மணர் இருந்தார். அவருக்கு மூத்த மகனாக 1876-ஆம் வருஷம் செப்டம்பர் 15-ஆம் தேதி சரத்சந்திரர் பிறந்தார். மதிலாலுக்கு வீடு வாசல் இல்லை. அம்மான் வீட்டில் அடைக்கலம் புகுந்தார். யார் ஜோலிக்கும் போகாதவர் மதிலால். நிலை இல்லாத புத்தி. இலக்கியத்தில் விசேஷப் பற்று. கவிதை, கதை எழுதுவதில் மிகவும் ஆர்வம். குடும்பத்தில் கஷ்டம் இராத நாளே இல்லை. மனைவி புவனமோகினியின் சிக்கனத்தால் குடும்பத்தை ஒருவாறு சமாளித்து வந்தார். கடன் மென்னியைப் பிடிக்கும் சமயங்களில் அவர் மனைவி, குழந்தை குட்டிகளுடன் பாகல்புரிலுள்ள தன் பிறந்தகம் போய் இரண்டொரு மாதம் தங்கிவிட்டு வருவாள். மதிலால் சிரமப்பட்டுத் தேவானந்தபுரத்தில் வாங்கியிருந்த வீடும் தக்காமல் போய்விட்டது. அதே வருஷம் அவருடைய துர்ப்பாக்கியம், மனைவியையும் இழந்து நின்றார்.

1887-இல் பாகல்புரில் இருக்கும் அம்மான் ஆதரவிலேயே சரத்சந்திரர் வளர்ந்து வந்தார். விசித்திரம் நிரம்பியது இவருடைய இளம் பிராயம். விஷமக்காரச் சிறுவர்; வித்தியாரம்பம், அந்த ஊர்த் திண்ணைப் பள்ளிக்கூடத்தில்தான். துஷ்டத்தனத்துக்கெல்லாம் உடந்தை உபாத்தியாயரின் மகன். 'காசிநாதன்' என்ற இவருடைய நவீனத்தில் வரும் கதாநாயகன் இவனே. உபகாரச் சம்பளம் பெறும் பரீட்சையில் சரத் முதலாவதாகத் தேறினார். அதே வருஷம் பிஹாரில் எங்கோ வேலை பார்த்து வந்த மதிலாலுக்கு உத்தியோகம் போய்விட்டது. ஊர் திரும்பியதும் மகனை ஹூக்ளியில் உயர்தர ஆங்கிலக் கல்லூரியில் சேர்த்தார். ஹூக்ளிக்கும் தேவானந்தபுரத்துக்கும் மூன்றே மைல். சரத்சந்திரர் தலைமையில் ஐந்தாறு மாணவர்கள் கொண்ட ஒரு கோஷ்டி ஹூக்ளியில் உள்ள பள்ளிக்கூடத்துக்கு நடந்து செல்லும். அந்த ரஸ்தாவிலே வெயில் நாளில் ஒரே புழுதி; மழைக் காலத்தில் வெறும் சேறு. வழி மாள்வதற்குச் சரத் பல அற்புதமான கதைகளைச் சொல்லிக்கொண்டே போவார். நடுவழியில் தோட்டங்களில் புகுந்து பழங்களைத் திருடித் தின்பார்கள். இவர்கள் தங்கி இளைப்பாறுவதற்குப் பல மறைவிடங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று, ஒரு தனி ஆலமரம். அதை 'மொட்டை ஆலமரத்தடி' என்று சரத்சந்திரர் தம்

'தத்தா' என்ற நவீனத்தில் குறிப்பிடுகிறார். பகல் நேரத்திலே வகுப்பில் தலைகாட்டாமல், ஸரஸ்வதி ஆற்றங்கரையிலாவது அந்த ஊர் ஜமீன்தாருக்குச் சொந்தமான குளத்தங்கரையிலாவது இருப்பார். புதர் மறைவிலிருந்து தூண்டில் போட்டு மீன் பிடிப்பதில் இவருக்கு ஓர் இன்பம். துறைகளில் மீன் பிடிப்பவர் படகு இருக்கும். அவர்கள் இராத சமயம் பார்த்து, அதில் ஏறிக் கொண்டு மூன்று மைலுக்கு அப்பால் உள்ள கிருஷ்ணபுரம் வரைக்கும் போய்த் திரும்புவார். அங்கே வைஷ்ணவ சாமியார்களின் மடம் ஒன்று இருந்தது. 'ஸ்ரீகாந்தன்' என்ற இவருடைய நவீனத்தில் வரும் முராரிபுரத்து மடம் இதுவே. ஆற்றின்மேல் இவருக்கு அபார மோகம். பிற் காலத்தில் இவர் தம் அழகிய பங்களாவை ரூபநாராயண் ஆற்றங்கரையோரமாக அமைத்துக் கொண்டதிலிருந்து இது தெரிய வரும்.

1892-இல் சரத்தின் தந்தை தம் குடும்பத்தை மீண்டும் பாகல்புரில் மைத்துனர் வசம் ஒப்படைத்து விட்டு வேலை தேட வெளியூருக்குப் போனார். சரத்சந்திரர் தேஜோ நாராயண் ஜூபிலி ஸ்கூலில் பிரவேச வகுப்பில் சேர்ந்தார். தேவானந்தபுரத்தில் பதினாறு வயது வரை இருந்தார். தம் பிறந்த ஊரை விட்டு வர முதலில் இவருக்கு மனம் இல்லை. கூட விளையாடினவர்கள், அழகான ஆற்றங்கரை, யதேச்சையான வாழ்க்கை எல்லாம் சேர்ந்து இவரை அழைத்தன. வாலிபத்தில் எவ்வளவு துடுக்கோ அவ்வளவு இளகிய நெஞ்சம் உள்ளவர். தேவானந்த புரத்திலுள்ள குடும்பத்தவர்களுக் கெல்லாம் சரத்சந்திரரிடம் விசேஷமான பிரீதி. இவருக்கு ஒரு காயஸ்த குடும்பத்தாரோடு நெருங்கிய நட்பு உண்டு. அந்தக் குடும்பத்துப் பெண் சரத்சந்திரருடன் சேர்ந்து படித்தவள். இவர் செய்யும் சேஷ்டைகளில் அவளும் உதவியாக நிற்பாள். அவளைப் பல உருவில் சரத்சந்திரரின் நவீனங்களில் பார்க்கலாம். இதைவிட ஒரு மனிதன் தன் நன்றியையும் நேசத்தையும் எப்படித் தெரிவித்துக்கொள்ள முடியும்?

பிரவேசப் பரீட்சையில் இரண்டாவது ஸ்தானம் கிடைத்தது. எப். ஏ., வகுப்பில் சேர இருக்கும் போது தாய் புவனமோகினி காலமாகிவிட்டாள். படிப்பு நின்றது. மூன்று பிள்ளைகள், ஒரு பெண் இவர்களை வைத்துக்கொண்டு மதிலால் நிராதரவாய்த் தவித்தார். சரத்துக்கோ வேலை கிடைக்கவில்லை. வீட்டில் தங்காமல் திரிந்தார். அசாமான்யமான மேதை ஓங்கி வளர்வதற்கு வித்து இவருடைய சிறுவயதிலேயே ஊன்றியாகிவிட்டதென்று சொல்லலாம். சரத்சந்திரர் சங்கீதப் பித்தர். ஒரு சமயம் தம் ஊரில் சங்கீதம் கற்க வசதி இராமல், 'யாத்ரா' என்ற கூத்துக் கோஷ்டியில் சேர்ந்துவிட்டார். இது பெரியவர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் போய்ப் பையனை நல்லதனமாகவே அழைத்து வந்துவிட்டார்கள். பாகல்புரில் வசிக்கும் போது இவர் இலக்கியச் சங்கங்களில் நடுநாயகமாக இருந்தார். அந்தக் காலத்துக் கதை, காவியம், நாடகங்களைப்பற்றிய விமர்சனங்களை யெல்லாம் வாசிப்பார். பிரபல வக்கீல் ராஜா சிவசந்திர பந்தியோ

பாத்தியாயரின் மகன் சதீசன் சரத்தின் உயிர் நண்பன்; சங்கீதப் பிரியன்; 'பில்லியர்ட்', 'கிரிக்கெட்' போன்ற விளையாட்டுக்களில் கெட்டிக்காரன். அவனும் சரத் சந்திரரும் சேர்ந்து ஸ்தாபித்த 'ஆதம்பூர் கிளப்' அந்தச் சமயத்தில் பெயர் பெற்ற ஒரு சங்கம். அடிக்கடி அங்கே நாடகங்கள் போடுவார்கள். 'மிருணாளினி', 'வில்வமங்கள்', 'ஜனா' இவை பிரபலமான நாடகங்கள். கதாநாயகி வேஷத்தில் சரத் தோன்றுவார். இவருடைய அபாரமான நடிப்பும் இனிய சாரீரமும் தோற்றமும் பார்ப்பவர் மனத்தைக் கவர்ந்துவிடும். 'ஸ்ரீகாந்த'னில் வரும் இந்திரநாதனின் மூல உருவம் அந்தச் சங்கத்தைச் சேர்ந்த ராஜேன் மஜூம்தாரே. பைத்தியக்காரி வேஷத்தில் அவனை மிஞ்சக் கூடியவர்களே இல்லையாம். திடீரென்று ஓர் இரவு நாடகம் முடிந்தவுடன் ராஜேன் போன இடமே தெரியாமல் போய்விட்டான்; திரும்பவே இல்லை. சரத்சந்திரருக்குக் கிடைத்த கதாபாத்திரம் ஆச்சரியமான பேர்வழிதான்!

எத்தனை நாள் வீண் பொழுது போக்குவது? தந்தை படும் கஷ்டத்தைப் பார்த்து 'வனேலி எஸ்டேட்'டில் சில மாதங்கள் வேலை பார்த்தார். ஆனால் நாடோடியான இவருக்கு ஓர் இடத்தில் மனம் நிலைக்குமா? திடீரென்று காணமல் போய்விட்டார். இது நடந்தது 1900-இல்.

ஆண்டியாகப் பல இடங்களில் திரிந்தார். இவர் பார்க்காத ஊர் இல்லை; பழகாத மனிதர் இல்லை. ஒரு நாள் மஜபர்புரில் தோன்றினார். அங்கே பிரபல நாவலாசிரியையான அநுரூபா தேவியின் புருஷர் சிகரநாத பானர்ஜியோடு பழகி வந்தார். சரத் சந்திரருக்குச் சங்கீத ஞானமும், சுக சாரீரமும், இசைக் கருவிகளை வாசிப்பதில் நல்ல தேர்ச்சியும் உண்டு. இதை அறிந்த அந்த ஊர் ஜமீன்தார் மகாதேவ ஸாஹு--'ஸ்ரீகாந்த'னில் வரும் குமார சாகேப் - தம் ரசிகர் கூட்டத்தில் இவரையும் சேர்த்துக்கொண்டார். நல்ல மரியாதை உபசாரத்தோடு சில மாதங்கள் வரை இவர் அங்கேயே இருந்து வந்தார்.

1903-இல் தந்தை இறந்த செய்தியைக் கேட்டுப் பாகல்புருக்கு ஓடினார். பணம் இல்லாமல் கஷ்டப்பட்டபோதிலும் எப்படியோ தந்தையின் அபரக் கிரியைகளைச் செய்து முடித்தார். வேலைக்காக எத்தனையோ இடங்களில் அலைந்தார். கடைசியில் அம்மான் முறையாகும் லால் மோகன் காங்குலியைப் பிடித்தால் நடக்குமென்று கல்கத்தாவுக்கு வந்தார். அங்கும் சுகமில்லை. இந்தச் சமயத்தில்தான் இவர் எழுதிய முதல் கதை 'மந்திர்' (கோயில்) வெளியாயிற்று. 'குந்தலீன்' என்ற கூந்தல் தைலம் தயாரிப்பவர்கள் அதற்குப் பரிசு அளித்தார்கள். அன்றுதான் சரத்சந்திரர் தமக்குள்ள சக்தியை உணர்ந்தார்.

இவர் தம் நினைவுக் குறிப்பு ஒன்றில் எழுதுகிறார்:—

"வறுமையிலேயே என் இளமையும் யௌவன தசையும் கழிந்துவிட்டன. நான் அதிகமாகப் படிக்கவில்லை. தந்தையிடமிருந்து நிலையில்லாத புத்தியையும், இலக்கியத்தில் ஆழ்ந்த பற்றையும் தவிர நான் வேறு எதையும் பெறவில்லை. சிறு வயதிலேயே வீட்டைத் துறந்து இந்தியா முழுவதும் சுற்றிவிட்டு வந்தேன். என் தந்தையின்

ஆற்றலோ அபாரமானது. சிறு கதை, நவீனம், நாடகம், கவிதை இப்படி இலக்கியத்தின் எந்தத் துறையிலும் அவருக்குக் கைப் பழக்கம் உண்டு. ஆனால் அவர் எழுதியது ஒன்றுவது பூர்த்தியாக வில்லை. என் இளமையில் அவையே எனக்கு உற்சாகத்தைக் கொடுத்து என்னை எழுதத் தூண்டின. அவர் அரைகுறையாக விட்டுச் சென்ற விஷயங்களை எப்படி முடிக்கலா மென்ற கற்பனையிலேயே தூக்கம் இராமல் இரவு நேரங்களைக் கழிப் பேன். நான் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தபோது எனக்குப் பாட புஸ்த கங்கள் 'சீதையின் வனவாசம்', 'சாரு பாடம்' என்ற வாசகம், 'ஸத்பாவ சத கம்' (நன்னெறி நூறு), நேரடான ஓர் இலக்கணம். இவற்றைக் கட்டிக் கொண்டு நான் ஒவ்வொரு நாளும் வாத்தியாருடன் மாரடிக்க வேண் டும். இலக்கியத்தோடு பழக்கம் முத வில் எனக்குக் கண்ணீர் மூலமாகவே ஏற்பட்டது. நான் வளர்ந்த குடும் பத்திலோ நாவல், காவியம் என் றால் ஆகாது; அங்கே சங்கீதம் போன்ற கலைகள் நுழையவும் இட மில்லை. பிள்ளைகள் பரீட்சையில் தேறி வக்கீல் தொழில் நடத்த வேண்டும் என்று அவர்களுக்கு எண் ணம். என் நல்ல காலமோ என் னவோ, விஷயம் நேர்மாறாக முடிந்தது. வெளியூரிலிருந்து என் உறவினன் ஒருவன் எங்கள் வீட் டுக்குவந்திருந்தான். அவன் காலேஜ் மாணவன். சங்கீதப் பிரியன்; வீட் டுப் பெண்களை ஒன்று கூட்டி அவர் களுக்கு ரவீந்திரர் எழுதிய 'இயற் கையின் வஞ்சம்' என்ற நாடகத் தைப் படித்துக் காட்டினான். அதைக் கேட்டு எனக்குக் கண்ணீர் ஆறாகப் பெருகியது. அன்று முதல் வக்கீல் ஆக வேண்டுமென்ற ஆசையெல் லாம் பறந்தோடிவிட்டது. எனக்கு ஞானோதயமாயிற்று. அப்பாவின் பொத்தல் பீரோவிலிருந்து கிடைத்த புஸ்தகங்களைத் துருவிப் படிக்க ஆரம்பித்தேன். யாராவது பார்த்துவிடப் போகிறார்களே என்று மாட்டுத் தொழுவத் துக்குப் போய்விடுவேன். அப்புறம் பங்கிம் சந்திரரின் புஸ்தகங்களை ஒவ்வொன்றாகப் படித்து முடித் தேன். பாகல்புரில் இருக்கும் போது வாரத்துக்கு ஒரு முறை எங்கள் சபை கூடும். வீட்டுப் பெரியவர்களுக்கு இந்த விஷயந் தான் தெரியக்கூடாதே; மைதா னத்தில் எங்கேயாவது மர நிழலில் உட்காருவோம். எங்களைச் சேர்ந்த கிரீன் என்பவன் தவறு இல்லாமல் எந்தப் புஸ்தகத்தையும் படிப்பான். காவிய சர்ச்சை செய்வோம். 'சாயா' என்ற கையெழுத்துப் பத்திரிகை ஒன்று நடத்திவந்தோம். அந்த வயதில் நான் எழுதிய சில கதைகள் தொலைந்து போய் விட்டன. பெரிய நாவல் ஒன்று எழுதியிருந்தேன். பெயர்மட்டும் ஞாபகம் வருகிறது: 'அபிமானம்.' 400 பக்கத்துக்குமேல் இருக்கும். எத்தனையோ கை மாறி எடு ஏடாகப் பிய்ந்து கடைசியில் என் சகபாடி கேதார சிம்மனின் கைக் குப் போயிற்று. அப்புறம் திரும் பவே இல்லை."

1903-ஆம் வருஷம் சரத்சந்தி ரர் வெறுத்துப்போய் உற்றார் உற வினரோடு சொல்லிக்கொள்ளா மல் பர்மாவுக்குப் பிரயாண மானார். பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வருஷங்கள் பர்மா வில் இருந்தார். இதை அஞ்ஞாத வாசம் என்றே சொல்லவேண்டும். வங்காளம் அவரை மறந்தே

விட்டது. நடுவில் 1912-இலும், 1914-இலும் சில தினங்கள் கல்கத்தாவுக்கு வந்திருந்தார். ரங்கூனில் அக்கவுண்டெண்ட் - ஜெனரல் ஆபீசில் சாமான்ய குமாஸ்தா வேலைதான். அந்தக் காலத்தில் பர்மாவில் இவர் வாழ்ந்த விதத்தை ஒரு கடிதத்தில் தம் நண்பருக்கு எழுதியிருக்கிறார்:

"நான் எப்படிக் காலங் கழிக்கிறேனென்றுதானே கேட்கிறாய்? சுருக்கமாகச் சொல்லுகிறேன்:

"ரங்கூனுக்கு வெளியே நதியோரமாக ஒரு மைதானத்திலே சிறிய வீடு ஒன்றில் வசிக்கிறேன். 90 ரூபாய் சம்பளத்துக்கு ஆபீஸ் துரைக்குக் 'குலாம்' போடுகிறேன். வரும்படி போதவில்லை. சிறிய கடை ஒன்று வைத்திருக்கிறேன். ஏதோ கொஞ்சம் வருகிறது. அதை வைத்துக்கொண்டு போதும் போதாதுமாய்க் காலட்சேபம் செய்கிறேன். அடிக்கடி இருதயத்தில் நோய். எந்தச் சமயத்திலும் வாயைப் பிளந்துவிடலாம். நிறையப் புஸ்தகங்கள் படிக்கிறேன்: முக்கியமாக, தேசதத்துவம், ஜீவதத்துவம், மனத்தத்துவம்பற்றித்தான்; இதற்கு வேண்டிய அவகாசம் இருக்கிறது. ஆனல் ஒன்றுமே எழுதுவதில்லை. என் உடைமை தீக்கு இரையாகிவிட்டது - என் அருமையான லைப்ரரி, நான் எழுதி வைத்திருந்த 'சரித்ரஹீனன்' என்ற கையெழுத்துப் பிரதி உள்பட. 'பெண் மக்கள்' என்ற நூலில் 400 பக்கம் சாம்பலாகிவிட்டது. மூன்று வருஷமாக இந்த இருதய நோய். அது வரும்போதெல்லாம் புஸ்தகம் படிப்பதை நிறுத்திவிட்டுத் தைலசித்திரம் வரைய ஆரம்பிப்பேன். என்ன என்ன அழகான வர்ண சித்திரங்கள் சேகரித்து வைத்திருந்தேன், தெரியுமா? எல்லாம் அக்கினி பகவானுக்கே அர்ப்பணமாகிவிட்டன. எழுதும் கருவிகள்மட்டும் தப்பின."

இவர் பர்மாவில் இருக்கும்போது மேல்நாட்டு இலக்கியங்களை ஆழ்ந்து படித்தார். நண்பர்கள் வற்புறுத்தவே மீண்டும் இலக்கியத்துறையில் இறங்கினர். "எதிர்பாராத விதமாக இலக்கிய சேவைக்கு என்னை அழைக்கிறீர்கள். இன்று இளமையைத் தாண்டி முதுமையின் ஆரம்ப தசையில் நிற்கிறேன். உடல் குன்றிவிட்டது. ஆர்வமும் அடங்கி விட்டது. இருப்பதோ வேற்று நாடு. என் பிறந்த நாட்டோடு தொடர்பு விண்ட மாதிரிதான். உங்கள் எத்தனையோ பேருக்கு நான் புதியவன். ஆனலும், என் நாட்டினர் என்னை அழைக்கும்போது எப்படிச் சும்மா இருப்பேன்? எனக்கு ஆற்றல் உண்டா என்பதைக் குறித்து நான் சந்தேகப்படவில்லை. உங்களுடைய அழைப்பே எனக்கு உற்சாகத்தைக் கொடுக்கும்" என்று அவர்களுக்கு எழுதியிருந்தார்.

1919-20-இல் 'யமுனா' என்ற பத்திரிகையில், 'ராமனுக்குப் புத்தி வந்தது', 'வழிகாட்டல்', 'பிந்துவின் மகன்' என்ற கதைகள் ஒவ்வொன்ருக வெளியாயின. அவைகளுக்கு அமோகமான வரவேற்பு. 1920-22-க்கு இடையில் 'பாரதவர்ஷ' என்ற மாதப் பத்திரிகையில் 'விரஜாசுந்தரி', 'பண்டித மகாசயர்' 'கிராம சமூகம்' என்ற நாவல்கள் வரிசையாக வெளியாயின. சரத்சந்திரருடைய கீர்த்தி உச்சநிலைக்கு வர ஆரம்பித்தது. பர்மாவின் காற்றும் நீரும் சரத்சந்திரரின் உடம்புக்கு ஒத்துக்

கொள்ளவில்லை. வரவரப் பலவீனம் அதிக மாகிக்கொண்டே வந்தது. அந்தத் தேசத்தை விட்டொழித் தால்தான் உயிர் நிலைக்குமென்று இவருக்கு உள்ளூறப் பட்டுவிட்டது. 'பாரத வர்ஷ'த்தின் சொந்தக் காரரான ஹரிதாஸ் சட்டர்ஜி இவருடைய ஆப்த நண்பர். தம் நிலையைக் குறித்து அவருக்குக் கடிதம் எழுதினார். தம் பத்திரிகை யில் எழுதுவதற்கு மாதம் 100 ரூபாய் கொடுப்பதாக அவர் வாக்களித்தார்; சரத் சந்திரரை ரங்கூனை விட்டு வந்துவிடும்படியும் எழுதினார். பிழைப்போம் என்ற தைரியம் வந்தது இவருக்கு. ஒரு வருஷம் ஓய்வு எடுத்துக் கொண்டு கல்கத்தாவுக்குப் பிரயாண மானார். 1916 ஏப்ரல் 11-ஆம் தேதி ரங்கூனில் கப்பலேறினார்.

சரத்சந்திரர் பாஜேசிவபுரில் வசித்து வந்தார். 1920-இல் இவர் மறுபடியும் எழுதின 'சரித்ரஹீனன்' என்ற நவீனத்தை, 'பாரத வர்ஷ'த் தில் போட மறுத்துவிட்டார்கள். காரணம்: கதையின் போக்கு விபரீதமானது; சமூகத்துக்கே அதிர்ச்சியைத் தரக்கூடியது. பொது ஜனங்களுக்குப் பயந்து அதை அவர்கள் ஏற்கவில்லை. ஆனால் 'யமுனா'வில் அது தொடர்ச்சியாக வெளிவந்தது. கதையைப் படித்த பிறகு ரசிகர்கள் இதை இணையற்ற நவீனம் என்றார்கள். பத்திரிகை களில் இதைப்பற்றிக் கண்டனங் களும் புகழுரைகளும் கிளம்பின. இந்த நவீனமே இவருடைய புகழை நிலைக்கும்படி செய்தது. பிறகு இவருக்குப் புத்தக விற்பனை யிலிருந்து நிறையப் பணம் கிடைக்க ஆரம்பித்தது.

ஒரு சமயம் இவரைத் தூக்கி வைக்க யாரோ ஒருவர், "ரவீந்திரர் எழுதுவதே எனக்குப் புரிவ தில்லை. ஆனால் நீங்கள் எழுதிய தெல்லாம் அவ்வளவும் பிடிக்கிறது. எதையும் தெளிவாகச் சொல்லு கிறீர்கள்" என்றாராம். உடனே சரத்சந்திரர் தமக்கு இயல் பான நகைச்சுவையோடு, "அதற் குக் காரணம் தெரியவில்லையே உமக்கு? ரவீந்திரர் எங்களைப் போன்றவர்களுக்கு மட்டுமே எழுது கிறார். நாங்களோ உங்களுக்காக எழுதுகிறோம்" என்று சொல்லி வந்தவரை இறக்கிவிட்டார்.

சத்தியேந்திரநாத் தத்தர் என் பவர் பிரபல கவி. அவர் அகால மரணம் அடைந்தார்; அதைக் குறித்து வருத்தம் தெருவிக்கக் கல் கத்தாவில் ஒரு கூட்டம் கூடியது. அதற்குச் சரத் பாபு தலைமை வகித் தார். அங்கே அவர் அதிகமாக ஒன் றும் பேசவில்லை: "சத்தியேந்திர நாதர் என்னவோ இறந்துவிட் டார்; நாம் பேசுவதற்கு என்ன இருக்கிறது? இரண்டு பொட்டுக் கண் ணீர் விடப்போகிறோம்; அவ்வளவு தானே? எல்லாரும் அவரவர்கள் வீட்டுக்குப் போகலாம்" என்று சுருக்கமாக முடித்து விட்டார். வந்தவர்கள் திடுக்கிட்டார்கள். "உயி ருடன் இருக்கும்போது அவரை எந்த விதமாகவும் நீங்கள் கௌர விக்கவில்லை; பெரிய இலக்கியக் கூட்டங்களில் தலைமை வகிக்கவும் அவரை அழைக்கவில்லை. பட்ட தாரிகள், ராஜாக்கள் இவர்களையே உயர்வாக எண்ணினீர்கள் - இப் போது இந்தக் கண்ணீர் எதற்கு?" என்று சொல்லிக் கூட்டத்தைக் கலைத்துவிட்டார்.

சாரு பானர்ஜியும் சரத்சந்தி ரரும் இளமையிலிருந்து ஒன்றாக இழைந்த நண்பர்கள். டாக்காவுக்குப்

போகும் சமயங்களில் இவர் சாருவின் வீட்டிலே தங்குவது வழக்கம். ஒரே அறையில்தான் இருவரும் படுத்திருப்பார்கள். சரத்பாபு, "படுக்கை இவ்வளவு தாராளமாக இருக்கிறதே; உனக்கும் இடம் இருக்கிறது - நாம் இருவரும் பங்கிட்டுக்கொள்ளலாமே" என்று தமாஷாகச் சொல்லித் தம் நண்பருடன் இரவு முழுவதும் பல ரசமான விஷயங்களைப் பற்றிச் சம்பாஷித்துக்கொண்டே இருப்பாராம்.

சரத்சந்திரருக்கு முன்னால் தோன்றிய வங்க நாவலாசிரியர்கள் எவருமே கீழ் வகுப்பைச் சேர்ந்தவர்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கவில்லை. சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களையும் பதிதைகளையும் வைத்து அபூர்வமான குண சித்திரங்களை இவரே முதல் முதல் வரைந்தார். சரத்சந்திரருக்கு இவர்களிடம் உள்ளூற அநுதாபம். அவரவர் குற்றங் குறைகளை விட்டுக் குணங்களையே கவனிப்பார். 'வழி காட்டல்' என்ற கதையில் வரும் 'ஏகாதசி வைராகி' மகா கல்நெஞ்சன். ஆனால் அவனிடத்திலும் ஒரு விசேஷமான தன்மை இருப்பதைச் சரத்சந்திரர் எடுத்துக் காட்டினார்.

இவருடைய நடை ஆடம்பரமற்றது. தெளிவாக எதையும் சொல்லுபவர். இவரே ஓரிடத்தில், "நான் புரிந்துகொள்ளாத எந்த விஷயமும் என் இலக்கியத்திலே இடம் பெறாது. என் நவீனம் எதுவும் வெறும் கற்பனையை நம்பி உருவெடுக்கவில்லை. வாழ்வில் உள்ள சுக துக்கங்களை நேரில் பார்த்தவன் நான்" என்று எழுதியிருக்கிறார். இது எவ்வளவு உண்மை என்பது இவருடைய கதைகளைப் படித்தவர்களுக்குத் தெரியும்.

சரத்சந்திரரைப் போல் தாமும் எளிய மக்களின் வாழ்வை வைத்துக் கதைகள் புனையவேண்டுமென்று சாரு பானர்ஜிக்கு ஆவல். இதை ஒரு சமயம் அவர் சொன்னபோது சரத்சந்திரர், "என்னைப்போல் எழுதுவதற்கு உனக்கு அநுபவம் போதாது. நான் நாடோடியாகத் திரிந்த காலத்தில் எத்தனை பேரோடு பழகியிருக்கிறேன் தெரியுமா? உணவு இல்லாமல் பல நாட்கள் பட்டினி கிடந்ததுண்டு. வழியில் போகும் நாய்கள்கூட எனக்குச் சிநேகிதமாகும். டோம், பாக்தி மாதிரி தாழ்ந்த ஜாதியாரின் குடிசையில் தங்கி அவர்களுடைய கூழைக் குடித்திருக்கிறேன். துஷ்டர்களின் சகவாசம் உண்டு. கெட்ட பழக்கத்தில் மிதந்திருக்கிறேன். சமூகம் ஒதுக்கிய எத்தனையோ விபசாரிகளின் வாய் மூலமாக அவர்கள் வரலாற்றைக் கேட்டிருக்கிறேன். நாவல் எழுதும் இந்த ஆற்றல் எனக்குத் திடீரென்று முளைத்து விடவில்லை. பார்த்த காட்சிகளையேதான் சுவை தரும்படியாக எழுதியிருக்கிறேன்" என்றார். கணக்கற்ற வாசகர்கள் இவரை விரும்பிப் படிப்பதற்குக் காரணம் இதுதான்.

பிராணிகளிடத்தில் அதிக அன்பு இவருக்கு. நாயென்றால் இவருக்கு உயிர். வெறும் குச்சு நாய்தான்; வழியில் யாரோ கல்லால் அடித்துவிட்டார்கள். அழுதுகொண்டிருந்தது. அதைக் கருணையோடு எடுத்து வளர்த்து வந்தார். பேலு என்ற அந்த நாய் இறந்தபோது, நெருங்கிய நண்பனுக்குக்கூட அவ்வளவு வருந்தியிருக்கமாட்டார்.

"என் பேலு போய்விட்டானே - என் தோழன். 24 மணி நேரமும்

என்னை விட்டுப் பிரியமாட்டானே! பிரிவு இவ்வளவு கொடியதா? வெறும் நாயை நினைத்துக்கொண்டு நான் இவ்வளவு கண்ணீர் விடுவானேன்? ஜடபரதனுடைய உபாக்கியானம் பொய்யே இல்லை'' என்று கதறினாராம். இவர் எழுதிய நாவல் ஒன்றில் வரும் 'கைலாஸ சித்தப்பா'வின் இளகிய நெஞ்சம் கற்பனையல்ல என்று இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

பானித்ராஸ் என்ற இடத்தில் சில காலம் சரத்சந்திரர் வசித்து வந்தார். வீட்டுக்கு எதிரே விசாலமான கங்கை. தொலைவில் மங்கலாகத் தெரியும் எதிர்க்கரை. அன்னங்கள் அசைந்து செல்வது போல் சேலை விரித்த படகுகள் போய்க்கொண்டே இருக்கும். விசாலமான மாடி வராந்தாவின் ஒரு மூலையில் இவர் இலக்கிய ரசனையில் ஈடுபட்டிருப்பார். கீழே பூந்தோட்டத்தில் கணக்கற்ற ரோஜா மலர்கள் பூத்திருக்கும். காற்றில் அத்தரின் இன்மணம் வீசும். இவர் பக்கத்தில் ஒரு ஹுக்கா. உணர்வைத் தட்டி எழுப்ப அடிக்கடி அதன் நீண்ட குழாயை எடுத்து ஒரு தரம் புகையை இழுப்பார். பேனா ஜோராக ஓடும். ஒரு நாள் மாலை; நியம நிஷ்டை உள்ள இரண்டு முஸ்லிம்கள் 'நமாஸ்' செய்யச் சௌகரியம் இராமல் சரத்சந்திரர் வீட்டுக்கு வந்தார்கள். விரோத பாவம் இல்லாமல் அவர்களை இவர் உபசரித்தார். முகத்தைக் கழுவிக்கொள்ள ஒரு கூஜா ஜலந்தான் அவர்கள் கேட்டார்கள். ஆனால் நம் கதாசிரியர் மாடிக்கே அவர்களை அழைத்துப் போய் ரத்தினக் கம்பளம் ஒன்றை விரித்து மேற்குத் திசையைப் பார்த்தாற்போல் அவர்கள் 'நமாஸ்' படிக்க வசதி செய்துகொடுத்தார். இவருடைய உபசரணையை மெச்சி, ''எங்களுக்கு இந்த இடத்தை விட்டுப் போகவே மனம் இல்லை. உங்களிடத்தில் இன்று புதிய உண்மையைக் கண்டோம்'' என்று அவர்கள் இவரைப் பாராட்டினார்கள்.

ஏழைகளிடத்தில் தனி வாஞ்சை இவருக்கு. ஒரு சமயம் தாம் வறுமையில் உழன்றதை இவர் மறக்கவில்லை. கிராமாந்தரங்களில் மக்கள் நோய்நொடியில் வருந்துவார்கள்; மருந்தும் தகுந்த சிகிச்சையும் இல்லாமல் அவர்கள் மடிவதைப் பார்த்திருக்கிறார். ஹோமியோபதி வைத்திய முறையைக் கற்றுக்கொண்டு அதற்கென்று அதிகமாகப் பணம் செலவு செய்து மருந்துகளைத் தருவித்தார். கிராமத்தவர்கள் இவரை 'தாதா டாகுர்' (அண்ணா) என்று அழைத்து வந்தார்கள்.

ராஸ் விஹாரி போஸ் பெரிய புரட்சி வீரர். எந்த அரசாங்கமும் அவரை ஓர் இடத்தில் நிலைக்க விடாமல் துரத்தி அடித்தது. பாரத நாடு விடுதலை பெறவேண்டுமென்று வெளிநாடுகளில் ஒரு புரட்சிப் படையை நிறுவினவர் அவர். சரத்சந்திரரின் 'வழி வேண்டுவோர்' என்ற நவீனத்தில் வரும் ஒப்பற்ற 'மாஸ்டர்' அவரே. உணர்வற்ற வாலிபர்கள் எத்தனை பேர் அவர் வசப்பட்டுத் தீக் கொழுந்தாக மாறினார்கள்! ரங்கூனில் பல முறை ராஸ் விஹாரியைச் சரத் பாபு ரகசியமாகச் சந்தித்திருக்கிறார். அவர் தங்கும் இடம் ஓர் ஏகாந்தமான பட்டிக்காடு. போலீஸ் உபத்திரவம் அங்கேயும் எப்போதாவது தலைகாட்டும். அந்தச் சமயங்களில் 'சசி லாஜ்' என்ற இடத்தில்தான் அடைக்கலம் புகுவார்

ராஸ் விஹாரி. அந்தப் பயங்கர மான ஆளைத் தம் கூரையின் கீழ் வைத்துக்கொள்ளச் சரத் சந்திரருக்குத்தான் என்ன துணிச்சல் இருந்திருக்க வேண்டும்? தேசாபிமானமே இவருக்கு இவ்வளவு தைரியத்தைக் கொடுத்தது. சரத்பாபு கல்கத்தாவுக்கு வந்த பிறகு, போலீஸாரிடம் சிக்கிக் கொள்ளாமல் எல்லையைக் கடந்து சீனம் செல்ல ராஸ் விஹாரி போஸுக்கு ஏழாயிரம் ரூபாய் தேவையென்று தகவல் வந்தது. தம் கையில் அவ்வளவு பணமில்லை; நண்பரைக் காப்பாற்ற மார்வாடியிடம் அதிக வட்டிக்கு அந்தத் தொகையை வாங்கித் தந்தார் சரத்பாபு.

இவரோடு கூடவே ஒரு தாடிக்காரன் வருவான். யாரோ இவருக்குத் தெரிந்த மனிதனென்று உலகம் நினைத்தது. தாடிக்காரன் பெரிய ஆசாமி. ஹாவ்டா கொள்ளை வழக்கில் சிறையிலிருந்து ஓடி வந்துவிட்ட சிறந்த தேசபக்தனை லால்விஹாரிதான் அவன். இப்படிப் பட்டவர்களுக்கு எப்போதுமே இவர் உதவி செய்வது வழக்கம்.

சமூகத்தில் கீழ்த்தரமானவர்களுடன் நெருங்கிப் பழகியதால் சில கெட்ட பழக்கங்கள் சரத் பாபுவிடம் மலிந்திருந்தன. இவர் ருசி பாராத மதுவே கிடையாதாம். பிற்காலத்தில் இந்த வேட்கை மட்டுப்பட்டது. ஒன்றோடொன்று இணைந்த ஐந்து குடாக்குச் செம்புகளில் சீமைச் சாராயம் இருக்கும். புகை ஒவ்வொரு செம்பிலும் பாய்ந்து குழாய் மூலமாக வரும். இதை ஒரு தரம் குடித்தாலே போதை தலைக்கேறிவிடுமாம். ஆனல் சரத்சந்திரர் சகஜமாக அந்தக் குழாயிலிருந்து புகை பிடித்துக் கொண்டே இருப்பார். இவர் எப்போதும் புத்தி ஸ்வாதீனத்தை இழந்ததே இல்லை. இதைக் 'க்ரேப் ஷாட்' என்று நண்பர்களிடம் வேடிக்கையாகச் சொல்லுவாராம்.

விஷப் பாம்புகளைப் பிடித்து ஆட்டுவதில் இவருக்கு வேடிக்கை. 'ஸ்ரீ காந்த' னில் வரும் பாம்பாட்டியே இந்த வித்தையைக் கற்றுக் கொடுத்தவன். விஷம் ஏறுமல் இருப்பதற்குப் பல தினுசான மூலிகைகள் இவருக்குத் தெரியும். ஒரு சமயம் பானித்ராவில் இவருடைய தோட்டத்தில் விஷ நாகம் ஒன்று நடமாடிக்கொண்டிருந்ததாம். அதைப் பிடிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தார். இவருக்குத் தெரிந்த ஒரு பிடாரன் புற்றுக்குள்ளேயே கையை விட்டு அதைப் பிடித்து வருவதாக வீரம் பேசினன். சரத் வேண்டாமென்று தடுத்தார். பாம்பு அதிக ரோஷத்தோடு இருந்ததால் அவன் கையைப் பிடுங்கிவிட்டது. சிகிச்சை செய்வதற்கு முன்பே விஷம் தலைக்கேறி அவன் இறந்துவிட்டான். அதோடு பாம்புடன் சகவாசம் செய்வதை விட்டுவிட்டார் சரத் பாபு.

இவர் வெறும் எழுத்தாளர் மட்டுமல்ல. சுதந்தர இயக்கத்திலும் தலைமை வகித்துப் போர் புரிந்தவர். 'பெண்களுக்குரிய மதிப்பு', 'தேசமும் இலக்கியமும்' என்ற நூல்களையும், அவ்வப்போது பத்திரிகைகளில் சிந்தனை நிரம்பிய கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். அரசியல் சம்பந்தமாக இவர் எழுதிய கட்டுரைகள் இன்றளவும் ஒன்றாகத் திரட்டப்பட்டுப் புஸ்தக உருவில் வெளிவரவில்லை. இவர் ஹாவ்டா ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தார். இவ

ருடைய கொள்கை என்ன என்பதை ஆராய வேண்டுமானால் முக்கியமாக 'இளைஞரின் எழுச்சி' என்ற கட்டுரையை எல்லாரும் படிக்க வேண்டும். 'வங்கவாணி' என்ற பத்திரிகையில் இவர் எழுதியிருக்கும் 'முஸ்லிம் ஸமுதாயம்' என்ற கட்டுரை இன்று வங்காளத்தில் இருக்கும் பிரச்னையை விளக்கும். இதிலிருந்து இவர் எவ்வளவு தீர்க்க தரிசனம் வாய்ந்தவர் என்று நாம் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு சமயம் இவர் சுபாஷ் பாபுவின் வற்புறுத்தலுக்கு இணங்கிக் குமில்லாவுக்குப் போக வேண்டியிருந்தது. அங்கே நடக்கும் ஒரு மகாநாட்டுக்கு இவரைத் தலைவராக நியமித்திருந்தார்கள். போகும் வழியெல்லாம் வேறொரு கட்சியினர், 'ஷேம், ஷேம்' (அவமானம்) என்று கூவி, வண்டியின் ஜன்னல் மூலமாகக் கரித் தூளை இவர் மேல் வீசி எறிந்தார்கள். வழியில் இந்த உபசரணை. உடனேயே பன்னிரண்டு குதிரைகள் பூட்டிய ஒரு ரதத்தில் இவரை அமர்த்தி மேளதாளங்களுடன் பல மைல் நீளம் உள்ள ஊர்வலம் ஒன்றைச் சுபாஷ் கட்சியினர் நடத்தினார்கள். 'எப்போது நதிக்கரையிலுள்ள நம் ஏகாந்த வாசத்துக்குப் போகப் போகிறோம்' என்று ஆகிவிட்டது இவருக்கு. இதைக் குறித்து இவர், "ஸ்ரீ அரவிந்தரைப் போல் நானும் சொல்லுகிறேன்: 'விடுதலை பெற்றவன் தன் சொந்த விஷயத்தில் நம்பிக்கை வைப்பது வீண்.' கரிப் பொடிக்கும் ஜே! 'பன்னிரண்டு குதிரை பூட்டிய ரதத்துக்கும் ஒரு ஜே!" என்று எழுதியிருக்கிறார். வங்காளத்தைச் சீர் குலைத்த கட்சி பேதங்களை இவர் உள்ளூற வெறுத்தார்.

இவரை வங்க தேசத்தினர் பல முறை கௌரவிக்க முன் வந்தார்கள். முக்கிய ஸ்தாபனங்கள் இவருக்கு வரவேற்பளித்து உபசரணை செய்தன. 1923-இல் கல்கத்தா சர்வகலாசாலையார் இவருடைய இலக்கியச் சேவையை மெச்சி 'ஜகத்தாரிணி' பொன் பதக்கத்தை இவருக்கு வழங்கினார்கள். இதற்கு முன் 1921-இல் இந்தப் பதக்கத்தை முதல் முதலாகப் பெற்றவர் கவியரசர் ரவீந்திரரே. 1924-இல் வங்கீய சாகித்திய பரிஷத், சரத் பாபுவைக் கௌரவ அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தது. இது சுலபமாகக் கிடைக்கக்கூடிய பதவியன்று. 1936-இல் டாக்கா சர்வகலாசாலையார் பட்டமளிப்பு விழாவில் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கினார்கள்.

இலக்கியத் துறையில் தம் குருநாதராக ரவீந்திரரை இவர் போற்றிவந்தார். இவருடைய பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது கவியரசர் ரவீந்திரரே நேரில் கலந்துகொண்டு இவருக்கு வெற்றி மாலை சூட்டினார்.

"எல்லையற்ற வானமண்டலத்தை ஆராய்வதில் மூழ்கி, விசித்திரமான கோளங்களையும், அதிசய கிரணங்களைப் பொழிந்து பலவித ஆகர்ஷணையால் வேகமாகச் சுழலும் நட்சத்திரங்களையும் கண்டுபிடிப்பதில் வல்லவன் வான சாஸ்திரி. சரத்பாபுவும் அதேமாதிரி வங்க மக்களின் இருதய வானில் புகுந்து விசித்திர மனோபாவங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். எத்தனையோ எழுத்தாளர்கள் புகழ் அடைந்திருக்கலாம். ஆனால் மக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொள்வதில் சரத் பாபுவுக்கு இணை வேறு யாருமில்லை. வங்காளியின் உள்ளம்

வேதனைப்படும்போது அதைக் கண்டறிந்த பெருமை இவரைத்தான் சாரும். இலக்கியத்தில் உபதேசம் செய்பவனைவிட அதைச் சிருஷ்டிப்பவனே உயர்வடைகிறான். கவிக்குரிய பீடத்திலிருந்து மதிப்பை உணர்ந்து நான் இந்தப் புகழ்மாலையைச் சரத்பாபுவுக்குச் சூட்டுகிறேன்'' என்று அப்போது சொன்னார் கவியரசர். இதைவிடச் சரத்சந்திரருக்கு வேறு என்ன வேண்டும்!

கல்கத்தா சந்தடி நிறைந்த பெரிய நகரம். எழுத்தாளன் நிம்மதியாக இலக்கிய உபாசனை செய்வதற்கு ஏற்ற இடமல்ல. அதனால் 1919-இல் ஹாவ்டா ஜில்லாவிலுள்ள பானித்ராஸ் என்ற கிராமத்தில் இவர் பதினோராயிரம் ரூபாயில் விசாலமான ஓர் இடம் வாங்கினார். கங்கையின் கிளையான ரூபநாராயண் ஆற்றின் எதிரே தனிமையில் இருந்தது அது. அங்கே ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டு அமைதியோடு சில வருஷங்களைக் கழித்தார். முஸ்லிம் மக்களின் வாழ்க்கையைப்பற்றிக் கதைகள் எழுத வேண்டுமென்று இவருக்கு ஆவல். டாக்காவில் இருந்த காஜி அப்துல் ஓதுத் என்பவர் இவரைக் காண வந்தார். அப்போது அவரே இதைப்பற்றிப் பிரஸ்தாபித்தார். சரத் பாபு, "உங்கள் குற்றங் குறைகளையும் எழுதுவேன்; சம்மதமா?" என்று கேட்டாராம். ஓதுத், "அதுதான் வேண்டும் இப்போது" என்று பதில் சொல்லிச் சரத் பாபுவை அங்கே அழைத்துப் போனார். அங்கிருந்த முஸ்லிம்களுடன் சரத் பாபு பழகி வந்தார். ஆனால் இவர் எண்ணம் கைகூடவில்லை. கடைசிக் காலத்தில் வாழ்க்கைத் துணைவி ஹிரண்மயி தேவியின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய, கல்கத்தாவில் ஜன சந்தடி இராத அசுவினி தத்தர் ரோட்டில் ஒரு மாளிகையைக் கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தார். அடிக்கடி நோய்க்கு ஆளானார். இளமையில் ஏற்பட்ட கெட்ட பழக்கங்கள் இவர் உடலை உருக் குலைத்துவிட்டன. 1938 ஜனவரி 16-ஆம் தேதியன்று 'பார்க் நர்ஸிங் ஹோமி'ல் காலமானார் சரத்சந்திரர்.

இவர் எழுதிய இலக்கியங்களுள் பெரும்பான்மை நவீனங்களே. ஆங்கில நாவலாசிரியரான டிக்கன்ஸே இவருக்கு இந்த விஷயத்தில் வழிகாட்டி. இவர் கதைகள் எல்லாம் சமூகப் பிரச்னைகளைப் பற்றியவையே. முக்கியமாக இவருடைய 'கிராம சமூக'மும், 'சரித்ர ஹீன'னும் பெருங் கிளர்ச்சியை மூட்டிவிட்டன. நாவல் இலக்கியத்தைப்பற்றி ஓரிடத்தில் இவர் இப்படி எழுதியிருக்கிறார்: "இந்தக் காலத்தில் எழுத்தாளர்களை Idealist (லட்சியவாதி) Realist (பிரத்தியட்சவாதி) என்று இரண்டு விதமாகப் பிரிக்கிறார்கள். நான் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவன். இதனால் எனக்குக் கெட்ட பெயர். கலை என்பது மனிதனுடைய சிருஷ்டி; அது இயற்கை அன்று. வாழ்வில் நடப்பதெல்லாம் புனிதம் என்று சொல்லிவிட முடியாது. அழுகலே முக்கால்வாசி. அவை இலக்கியத்துக்கு உதவாத விஷயங்கள். இயற்கையை உள்ளபடி வர்ணிப்பது வெறும் போட்டோ. அது வர்ணமும் ரேகையும் கொண்ட சித்திரமாகாது. தினசரிப் பத்திரிகைகளில் வெளியாகும் மயிர்க்கூச்செறியும் சம்பவங்கள் இலக்கியமாகுமா? குண சித்திரம் வரைவதென்றால்

லேசான காரியமல்ல; கலைநோக்கு அநுபவம் அவசியம் வேண்டும்; கற்பனை ஒன்றுமட்டும் இருந்தால் போதாது. இருதயத்தின் அநுதாபத்தை யெல்லாம் சொரிந்து நான் கதாபாத்திரங்களை ஜோடனை செய்த கஷ்டம் எனக்கல்லவோ தெரியும்! நல்லதும் இருக்கும்; கெட்டதும் இருக்கும். இவை விவாதத்துக்கு உரிய விஷயங்கள் அல்ல. கலையில் கலகத்துக்கு இடமில்லை. 'கதை சுபமாக முடிய வேண்டும்; தர்மம் வெற்றி பெற வேண்டும்; அதர்மம் அழிய வேண்டும்.' - இதெல்லாம் நீதியைப் போதிப்பவர்களுக்குத்தான்; இலக்கிய சிருஷ்டி செய்பவனுக்கல்ல. சிறு வயதில் பங்கிம் சந்திரரின் 'கிருஷ்ணகாந்தன் உயிலை'ப் படித்த போது இளவிதவை ரோகிணியின் வாழ்க்கை என்னை, உலுக்கி எடுத்து விட்டது. அவள் கெட்ட வழியில் இறங்குகிறாள். கடைசியில் துப்பாக்கி ரவைக்கு இலக்காகிறாள். பாவத்துக்கு ஏற்ற பரிணாமம் என்பது உண்மைதான்; ஆனால் இதில் பெருமைப்படக்கூடிய விஷயம் எதுவும் இல்லை. ஹிந்து சமூகம் ஒரு பாவி ஒழிந்ததாக நிம்மதியோடு மூச்சுவிட்டது. இன்னொரு பக்கத்தை மறந்து விடுகிறோமே; சமூகத்தைவிடப் பழமையும் சாசுவதமுமானது காதல். ஆண் பெண் இருதயத்தின் ஆழத்தில் உலவும் அந்தக் காதலுக்கு மதிப்பில்லையா? ரோகிணியின் சித்திரத்தை வரையும்போது பங்கிம் சந்திரரின் இருதயம் துக்கத்தினால் துடித்திருக்க வேண்டும்; அநுதாபத்தினால் அவர் கண்ணீர் வடித்திருக்கவேண்டும். அவர் பேனாவிலிருந்து எவ்வளவு பெரிய இலக்கியம் உருவாக இருந்தது! ஆனால் அவருடைய கவி சித்தம் சமூகத்துக்கும், நீதி மார்க்கத்துக்கும் பயந்து தற்கொலை புரிந்துகொண்டதே! என்னுடைய 'கிராம சமூக'த்தில் வரும் விதவை ரமாவைப் பத்திரிகையில் பல பேர் ஏளனம் செய்யத் தொடங்கினார்கள். 'உன் புத்தியினாலேயே நீ உன் தகப்பனாரின் ஜமீனைச் சீர்கெடாமல் பாதுகாத்தாய். - நீயே உன் இளவயது நண்பனும் அந்நிய புருஷனுமான ரமேசனைக் காதலிக்கிறாய். சீ...என்ன புத்தி!' - இந்த மாதிரி வசவெல்லாம் கலையைப் பாதிக்காது. இது நம்முடைய சீர்கேடான சமூகத்துக்கே ஏற்றது. இவ்வளவு தூரத்துக்கு யார் கொண்டு விட்டது? நன்மையும் தீமையும் உலகில் சேர்ந்துதான் இருக்கும். நல்லதை நல்லதென்றும் கெட்டதைக் கெட்டதென்றும் சொல்வதை ஒரு நாளும் கலை தடுக்கவில்லையே!"

வங்காளிகளின் குடும்ப வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு அவர் எழுதிய நவீனங்களில் முக்கியமாக, 'பெரிய அக்கா', 'பிந்துவின் மகன்', 'சந்திரநாதன்', 'விமோசனம்' இவை எந்தக் காலத்திலும் வாசகர்களுக்குப் படிக்கப் படிக்க இன்பத்தை ஊட்டும்.

சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்துவதில்தான் சரத் பாபு தம் ஆற்றல் முழுவதையும் காட்டியிருக்கிறார். 'விரஜாசுந்தரி', 'கொடுக்கல் வாங்கல்' (பைரவி), 'ஸ்வாமி' (சௌதாமினி), 'தத்தா', 'கிருகதாகம்', 'தேவதாஸ்', 'கிராமசமூகம்' இவை மனிதர் உள்ளத்தில் பெரும் புயலை எழுப்பும் நவீனங்கள். சரத் பாபு பச்சையாகச் சமூகத்தை வர்ணிப்பதைப் பல பிரமுகர்கள் கண்

டித்தார்கள். ஆனால் சரத் பாபுவுக்குக் கீர்த்தியைத் தருபவை இந்த நவீனங்களே.

'ஸ்ரீகாந்த'னை நாலு பாகமாக எழுதினார். இது விசித்திரமான சிருஷ்டி; பிரெஞ்சுக்காரர், இத்தாலியர் போன்ற மேல்நாட்டாரைப் பெரிதும் கவர்ந்த புஸ்தகம். இவர் பெயர் இதனாலே கடலையும் தாண்டிச் சென்றது. இது சரத் பாபுவின் சொந்த அநுபவமே. ஈ. ஜே. தாம்ஸன் என்பவர் இதை ஆங்கிலத்தில் அற்புதமாக மொழி பெயர்த்திருக்கிறார். சரத் நாடோடியாகத் திரிந்தபோது பார்த்த விசித்திரக் காட்சிகளையும் பழகிய வேடிக்கையான மனிதர்களையும் ரசமாக வர்ணிக்கும் இலக்கியம் இது. பிரபல நாவலாசிரியர் லிட்டன் 'மை நாவல்' என்ற நூலில் கையாளும் தோரணையை இவரும் பின்பற்றுகிறார். இவைகளில் சில நாடக உருவிலும் வெளிவந்தன.

'வழி வேண்டுவோர்' தனிப்பட்ட பெருமை வாய்ந்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இதைப் பறிமுதல் செய்தார்கள். இது ஒரு புரட்சிக் கூட்டத்தின் வரலாறு. இதில் வரும் 'மாஸ்டர்', 'சுமித்ரா', 'பாரதி' இவர்களை நம்மால் மறக்கவே முடியாது.

இவர் எழுதிய சிறு கதைகளுக்குள் 'இளம்பிராயத்துக் கதைகள்' சுவை மிகுந்தவை. சிறுவர்களுக்கு ஆவலை மூட்டும் கதைத் தொகுதிகள் 'வைகுண்டன் உயில்', 'காசிநாதன்' என்பவை. 'சேஷ ப்ரச்னம்' என்பது கடைசியாக வெளிவந்த இவருடைய ஒப்பற்ற நவீனம். தமிழிலும் மற்ற இந்திய பாஷைகளிலும் இவருடைய நவீனங்கள் பல வெளிவந்திருக்கின்றன.

அருண்டேலின் அமைதி

1917-இல் முதல் உலக மகாயுத்தம் நடந்துகொண்டிருந்தது. இந்தியாவில் அநேகம் தேசீயவாதிகளை இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்க் கைது செய்தார்கள்.

பெயர் பெற்ற 'நியூ இந்தியா' பத்திரிகை, காரசாரமாகத் தன் இதழ்களில் எழுதிக்கொண்டு வந்தது.

ஒரு நாள், ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர், டாக்டர் ஜி. எஸ். அருண்டேலைக் கைது செய்ய 'நியூ இந்தியா'வின் காரியாலயத்துக்குள் நுழைந்தார். இந்த விஷயம் அருண்டேலுக்குத் தெரிந்ததும் அவரே உடனே வெளியே வந்தார். தமக்கு வந்திருக்கும் வாரண்டைப்பற்றி அவர் சிறிதும் கவலைப்படவில்லை. போலீஸ் அதிகாரியின் சட்டையில் இரண்டு பித்தான்கள் இல்லாதிருப்பதைக் கண்டு, "நண்பரே, உங்கள் சட்டைக்கு இரண்டு பித்தான்கள் இல்லையே! நான் தரட்டுமா?" என்று கேட்டார். தாம் கைது செய்யப்போகும் ஓர் இடத்தில் இந்த மாதிரி ஒரு பதில் வருமென்று அந்த அதிகாரி எதிர்பார்க்கவேயில்லை. ஒரு கணம் அவர் அப்படியே பிரமித்து நின்றுவிட்டார்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.